
# பாதை தெரியாத பயணங்கள்



சி.மார்க்கண்டு

அன்புடன்
தம்பி பரணீதரன்
அவர்களுக்கு

13.8.20

# பாதை தெரியாத பயணங்கள்

சி. மார்க்கண்டு

சிறுகதை : பாதை தெரியாத பயணங்கள்

ஆசிரியர் : சி. மார்க்கண்டு (மாவன்னா)

முதற்பதிப்பு : 2016 டிசம்பர்

பக்கங்கள் : 120 + xii

வெளியீடு : கலாசாரப்பேரவை, வடமராட்சி வடக்கு.

பதிப்பு : தரணி

அச்சுப்பதிப்பு : ஸ்நேகன் பதிப்பகம், நெல்லியடி.

அட்டைப்படம் : இணையம்

அட்டை, பக்க வடிவமைப்பு : கருணைரவி

விலை : 250 ரூபா

ISBN - 978-955-43797-0-1

இந்நூல் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார செயற்றிட்டம் 2016 இன் கீழ் பருத்தித்துறைப் பிரதேசத்திற்கு ஒதுக்கப்பெற்ற எழுத்தாளர் ஊக்குவிப்பு நிதிப்பங்களிப்புடன் வெளியிடப்பட்டது



அறிவின் ஊற்றாகி நின்ற
எனது சகோதரன்
அமரர் சி. சிவபாதம் அவர்களுக்கும்

உண்மை வழி நின்றோர்க்கும்
இந்நூல் சமர்ப்பணம்

## சமூகநீதி மற்றும் சமூக நெறிகளை அவாவி நிற்கும் தூலமான கதைகள்

ஒரு இலக்கியப் படைப்பாளியின் உருவாக்கம் மற்றும் செழுமை என்பன அவரது ஆழமானதும் தொடர்ச்சியானதுமான இலக்கியப் பயிற்சியினாலும் சமூக அனுபவங்கள் பற்றிய தெளிவான புரிதலி னாலும் சாத்தியமாவது. இவை அந்தப்படைப்பாளியின் உள்ளூறும் கலானுபவத்தினால், படைப் புத்திறனால், மெருகேற்றப்படும்போது சிறந்த இலக்கியங்கள் தோன்றுகின்றன. இவற்றைத் தமது வாழ்நாட் பயில்வாகக் கொண்டு மகோன்னதமான படைப்புக்களைத் தந்த பலபடைப்பாளிகள் இலக்கிய கர்த்தாக்களை நாம் அறிவோம். இம் மூன்றில் ஒன்று தவறினாலும் படைப்புக்கள் சோடை போய்விடு கின்றன. 'மாவன்னா' எனும் புனைபெயரில் எழுதிவரும் திரு சி. மார்க்கண்டு அவர்கள் சமூக வாழ்வின் அனுபவங்கள் நிறைந்த நம்மிலும் வயதிலும் மூத்த ஒருவர். மிகுந்த இலக்கிய தாகம் கொண்டவர். பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய ரீதியில் பொறிமுறையாக நிகழும் கலை இலக்கியப் போட்டிகளுக்காகக் கதைகளை எழுதிப் பரிசில்களைப் பெற்று வருபவர். இதுநாள் வரையான தமது வாழ்க்கைக்காலத்தில் மிகத்துடிப்பான இளமைக்காலத்தைக் கடந்து வந்த பின்னர்தான், தமக்கான இலக்கியப்படைப்பாக்க அடையாளத்தை நிலை நிறுத்த ஆவல் கொண்டு செயற்படுபவர். இந்த ஆவல் மேலோட்ட துடிப்பில் இளம் பராயத்து ஆர்வம் வெளிப்பட செயலாற்றி வருகிறார். இலங்கையின் சுகாதார சேவைத்துறையிலே வைத்தியசாலைப்பணியாளராகக் கடமைபுரிந்த இவர் நமது ஈழநாட்டுடனான தனது பணிக்காலம்தான் தனது

படைப்பார்வத்தினை உந்தியதாகக் குறிப்பிடுகின்ற இவர் இலக்கியப் போட்டிகளின்போதும் இதர சந்தர்ப்பங்களிலும் எழுதிய கதைகளைத் தொகுப்பாக்கி 'பாதை தெரியாத பயணங்கள்' என்ற தலைப்பில் தனது எழுபதாவது வயதை அண்மிக்கும் தறுவாயில் வெளியிடுவது குறிப்பிடத் தக்கது.

இந்தத் தொகுப்பில் உள்ளடங்கிய கதைகளை ஒருசேரப்படிக்கும் போது இரண்டு விடயங்கள் பட்டவர்த்தனமாகத் தெரிகின்றன. ஒன்று கதைகள் எல்லாம் மாவன்னாவின் வாழ்வின் இயல்பான அனுபவங் களாக அமைவது. மற்றது ஒரு சமூக நீதியை அவாவி நிற்கும் மாவன்னாவின் மனோபாவத்தைப்பிரதிபலிப்பது. இவை இரண்டும் ஒரு வெள்ளையடிக்கப்பட்ட சுவரைப்போல 'தூலமாக' இவரது கதைகளில் வெளிப்படுகின்றன.

மாவன்னாவின் கதைகளில் வரும் பிரதான பாத்திரங்களில் அவரின் உண்மை இயல்புகள் கலந்தும் நிறைந்தும் இருப்பது அவரை நன்கு தெரிந்த வர்களுக்குப் புலனாகும். அப்பாத்திரங்கள் எப்போதும் நேர்மை வழி நிற்பவை. சமநீதியை வேண்டி நிற்பவை. நன்னெறிப்போதனை செய்பவை. பொது நலம்நோக்கியவை. மனிதாபிமானம் மிக்கவை. குமாரய்யா, அமுதினி, தீபன், மாருதி, அண்ணாச்சாமி என்ற பாத்திரங்கள் பிரதிபலிப்பது மாவன்னா வைத்தான்.

ஒரு சொற்பொழிவாளன், சமய மற்றும் நீதிக்கருத்துக்களைப் பிரசங்கம் செய்து, போதனை வழங்குபவனின் நெறி நின்று சமூக விமர்சனங்களைச் செய்யும் கதைகள் இவை. இக்கதைகளின் உட்சரடாக நீதிநெறியான வாழ்வை வலியுறுத்தல், பண்பில்லாத படித்தவர்கள் மீதான நையாண்டி, விடாப்பிடியான பழமை வாதிகளான கிராமத்து மூத்த தலைவர்கள் மீதான விமர்சனம், கடவுளின் பெயரால் மத நிறுவனங்கள் இழைக்கும் தவறுகளை நையாண்டி செய்தல், ஏதிலிகளுக்கு உதவாத சமூகம் மீதான சினம், பிள்ளைவளர்ப்புடன் தொடர்பான நெறிகள், கூட்டுவாழ்வு பற்றிய ஏக்கம், பழமைக்கு எதிரான அங்கீகரிக்க வேண்டிய

இளம் சந்ததியினரின் புரட்சி, சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான கருத்துக்கள் முதலிய பல விடயங்கள் அமைந்துள்ளன.

வயதிலே மூத்தவராகவும் படைப்பாக்க உந்தல் மிகுந்தவராகவும் விளங்கும் மாவன்னா தன் வாழ்வனுபவங்களை நிகழ்வதை நிகழும் போக்கில் அப்படியே சொல்வதை தனக்கு சௌகரியமான ஒரு வெளிப்பாட்டு முறையாகக் கொண்டுள்ளார். இன்றைய படைப்பாக்க வெளியில் நிகழ்போக்கிலுள்ள மாற்றங்கள் குறித்தான இவரின் அக்கறை அதிகரிக்கப்படவேண்டியதே. படைப்பின் வெளிப்பாட்டு முறையின் நேர்கோட்டுப்பாங்கு, சிறுகதையை வெறும் கதையாக்கும் பேராபத்தை விளைவிக்கும் என்பதைப் பொதுவாகப் படைப்பாளிகள் அறிவர். சிறுகதைப்படைப்பின் வெற்றியானது அதன் ஒருமை விளைவுடன் கூடிய வெளிப்பாட்டு நுட்பங்களாலும் மொழியின் வீரியத்தினாலும் விளைவது.

மாவன்னாவின் இந்தத் தொகுதியில் உள்ளடங்கும் கதைகள் வாழ்வனுபவத்தில் முதிர்ந்த ஒருவர் வாழ்வுக்கான நெறிமுறைகளைப் போதிப்பதில் கொண்ட சமூக அக்கறையை வெளிப்படுத்துபவை. இந்தக் கதைகள் கூறும் கருத்துக்கள் சமுதாயத்தை வழிப்படுத்தத் தக்கன. இவரது படைப்பாக்க முயற்சி நிரப்பவேண்டிய இடைவெளிகளை நிரப்பி மேலும் முழுவீச் சுடன் தொடரப்படும்போது சிறப்பு வாய்ந்த சிறுகதைகள் கிடைக்கப்பெறும்.

இ. இராஜேஸ்கண்ணன்.
சிரேஸ்ட விரிவுரையாளர்,
சமூகவியற்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

## வாழ்த்துச் செய்தி

வடமராட்சி பிரதேசத்திற்கு இலக்கியத்துறையின் ஊடாக சிறப்புச் சேர்த்துக்கொண்டிருக்கும் திரு. சி. மார்க்கண்டு (மாவன்னா) அவர்களால் எழுதப்பட்டு வடமராட்சி வடக்கு பிரதேச செயலக கலாச்சார பேரவையின் வெளியீடாக வெளியிடப்படுகின்ற " பாதை தெரியாத பயணங்கள்" சிறுகதைத் தொகுதிக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

வடமராட்சி மண்ணில் பிறந்து, வளர்ந்துயர்ந்து, யாழ் போதனா வைத்தியசாலையில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற இவர், பின்னர் தன் ஓய்வு காலத்திலும் ஈழநாதம், நமது ஈழநாடு, தினமுரசு போன்ற பத்திரிகைகளில் பிரதம ஒப்பு நோக்குநராகப் பணிபுரிந்தவர். இவர் அக்காலத்தில் பல படைப்புக்களைப் படைப்பதில் தொடர்ச்சியாக ஆர்வத்தோடு ஈடுபட்டு வந்தவர். தேசிய கலை இலக்கியப் போட்டிகளில் கலந்து கொண்டு சிறுகதைக்காக தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுப் பெருமை சேர்த்தவர். இவரால் வெளியிடப் படுகின்ற ' பாதை தெரியாத பயணங்கள் " என்னும் சிறுகதைத் தொகுதியில் தேசிய ரீதியில் முதல் இடத்தினைப் பெற்ற கதையும் உள்ளடங்குகின்றது என்பது கவனிக்கப்படவேண்டியது. மேலும் கடந்த சில வருடங்களில் இவரால் எழுதப்பட்டு சஞ்சிகைகளில் வெளிவராத சிறுகதைகளும் இத் தொகுதியை அலங்கரிக்கின்றன.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் கலைஞர்களின் நூல் வெளியீட்டுக்கு உதவும் திட்டத்தின் கீழ்

இவரின் இச் சிறுகதைத் தொகுதி வடமராட்சி வடக்கு பிரதேச செயலக கலாச்சாரப் பேரவை யின் வெளியீடாக வெளிவருவது எமக்கு மகிழ்வைத் தருகின்றது.

எமது மண்ணில் இன்னும் எழுதிக்கொண்டிருக்கும் மூத்த படைப் பாளிகளில் ஒருவரான திரு சி. மார்க்கண்டு அவர்கள் காத்திரமான சிறுகதைப்படைப்புக்களைத் தொடர்ந்துவரும் காலங்களிலும் வழங்கவேண்டும் என வேண்டிக் கொள்வதோடு தற்போது வெளியிடப்படுகின்ற " பாதை தெரியாத பயணங்கள் " சிறுகதைத் தொகுதி சிறப்பாக வெளிவர எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துப் பணிகின்றேன்.

*இ.த. ஜெயசீலன்*
பிரதேச செயலர்
பிரதேச செயலகம்
பருத்தித்துறை.

## வாழ்த்துச் செய்தி

தும்பளை தெற்கு, பருத்தித்துறையில் பிறந்து வளர்ந்தவரான திரு. சி. மார்க்கண்டு ஐயா அவர்கள், எமது " குருவி " நற்பணி மன்றத்தில் ஒரு அங்கத்தவனாக இணைந்து கொண்டதிலிருந்து அவரிடத்தில் உள்ள இலக்கியப்புலமையை அறிய வாய்ப்பாகியது.

எமது மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்படுகின்ற பிரிவுபசார விழாக்கள், பாராட்டு விழாக்களின்போது, அவரால் எழுதப்படும் கவிதைகள் பெரும்பாலானவை. எல்லோராலும் வியந்து பாராட்டப் பட்டமை தெளிவானது. பொருள் நிறைந்த கவிதைகள், கதைகள் எழுதுவது அவருக்குக் கைவந்தது எனலாம்.

இப்பொழுது அவருடைய சிறுகதைத் தொகுப்பு "பாதை தெரியாத பயணங்கள்" என்ற தலைப்புடன் வெளிவருவது குறித்து மிகவும் பெருமையும் சந்தோசமும் அடைகிறேன்.

இளகிய மனமுடைய அவரின் கதைகளில் மனச்சாட்சியோடு ஒத்திசைகின்ற – அதை நிறைத்து வைத்திருக்கின்ற பாங்கு, வாசகர்களின் மனத்தில் இலகுவாகப் பதியக்கூடியது.

அவரின் மனதில் உதிக்கின்ற உணர்வுகளின் வெளிப்பாடாக வெளிவருகின்ற சிறுகதைகளின் தொகுப்பு, இலக்கிய உலகில் அவருக்கு ஒரு தகுந்த இடத்தைப் பெற்றுக்கொடுக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

" பாதை தெரியாத பயணங்கள் " என்ற இவரின் சிறுகதைத் தொகுப்பு நூல்வெளியீடு சிறப்பான முறையில் நடைபெற வேண்டுமென இறையருள் வேண்டுகின்றேன்.

அன்புடன்
பல்துறை ஊக்கி, தேசசக்தி
ஜெ. குணாளகாந்தன் (JP)

புலோலி தெற்கு,
புலோலி.

## கொஞ்சம் பொறுங்களேன்...

எனது மனத்திற்குப் பிடித்தமானவையும் பிடித்தமில்லாத வையுமென எதுவாயினும் என் மனத்தில் ஒரு வித்தியாசமான உணர்வு நிலையைத் தோற்றுவிக்கும்போது, நான் என்னையுமறியாமல் அதில் ஊறித்திளைத் துப்போவதுண்டு. அந்த உணர்வுகளைப் பிரதிபலிப்பதற்கு மனம் துளாவித் துடிக்கும்.

எண்ணங்கள், சிந்தனைகள் பெருகிப் பெருகி எனது கதைக் குழந்தைகள் பிரசவித்ததால், அப்படிப் பிரசவித்த கதைகள், பிரதேச செயலக ரீதியான கலை இலக்கியப் போட்டிகளில் பங்கு கொள்ளச் செய்து என்னைப்பலமுறை முன்னிலைப்படுத்தின.

அதனால், அவற்றை நூல் வடிவாக்க முனைந்த வேளை, வடமாகாண கலை கலாச்சார பண்பாட்டலுவல்கள் அமைச்சின் ஊக்கப்படுத்தல் செயற்பாட்டினால் அதை நிறைவேற்றும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்றது.

இந்தச் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெறும் "பாதை தெரியாத பயணங்கள்" என்ற சிறுகதை, 2014ம் ஆண்டு பிரதேச மட்டத்தில் 2ம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் 1ம் இடத்தையும் தேசிய மட்டத்தில் 1ம் இடத்தையும் வென்றுள்ள கதையாகும்.

காணாமல்போன குஞ்சுகள், 2015ம் ஆண்டு பிரதேச மட்டத்தில் 1ம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் 2ம் இடத்தையும் பெற்ற சிறுகதையாகும்.

தேசிய கலை கலாச்சார அமைச்சினால் 2015ம் ஆண்டு நடாத்தப்பெற்ற நேர்முக சிறுகதை எழுத்துப் போட்டியில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தை வென்றுள்ளது "பரிசு தந்த கதை." இப்படி எனக்குத் தெரிந்தவைகளையும் நான் அறிந்தவற்றையும் வெளிப்படுத்திய சிறுகதைகளைத் தாங்கியதே இந்தச்சிறுகதைத் தொகுதி ஆகும். இதில்

வரும் கதைகளில் எனக்குத் தெரியாதவைகள் உங்களுக்குத் தெரியக்கூடியவைகளாக இருக்கலாம். அப்படியிருப்பின் என்னோடு பேசுங்கள். அது எனக்கு வலுச்சேர்க்கும் என்ற நம்பிக்கையுண்டு.

இச்சிறுகதைத் தொகுப்பை மிகவும் நேர்த்தியாகச் செய்து உதவிய ஸ்நேகன் பதிப்பகத்தினருக்கும் வாழ்த்துரை தந்துதவிய பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. இ.த. ஜெயசீலன் அவர்களுக்கும், ஆலோசனைகள் வழங்கிய கலாச்சார உத்தியோகத் தர்களுக்கும் நூலுக்கான அணிந்துரையை சிறப்பான முறையில் எழுத்தில் வடித்த திரு. இ. ராஜேஸ் கண்ணன் (சிரேஸ்ட விரிவுரையாளர் சமூகவியற்துறை. யாழ். பல்கலைக்கழகம்) அவர்களுக்கும் எழுத்தாளனைப் பற்றிய பின்புற அட்டைக்கான விபரணத்தை எழுதித்தந்த மதிப்புக்கும் அன்புக்குமுரிய திரு. ராதேயன் அவர்களுக்கும்

அன்பின் நிமித்தமும் நூல் வெளியீடு பற்றி திடீரென அறிந்து கொண்ட ஆவலினாலும் வாழ்த்துரையொன்றை எதிர்பாராத நிலையில் எழுதி அனுப்பிய "குருவி" நற்பணி மன்ற ஸ்தாபகர் தேசசக்தி ஜெ. குணாளகாந்தன் (JP) அவர்களுக்கும் அடிக்கடி என்னோடு தொடர்பு கொண்டு நூல் வெளியீடு தொடர்பாக ஆலோசனை வழங்கியதோடு மட்டுமல்லாது என்னோடு ஒரு பங்குதாரராக செயற்பட்ட அண்ணன் கலைப்பரிதி, யாழ் முத்து திரு. K.R. திருத்துவராஜா அவர்களுக்கும் எஞ்ஞான்றும் எனது நன்றிகள் உரித்தாகும்.

இனி நீங்கள் தொடரலாம்...

மாவன்னா.
தும்பளை தெற்கு,
பருத்தித்துறை.

உள்ளே...


| | |
|---|---|
| *யாழ்ப்பாணி* | *1 – 13* |
| *கள்ளப்பூனை* | *14 – 22* |
| *வார்ப்பு* | *23 – 27* |
| *பாதை தெரியாத பயணங்கள்* | *28 – 41* |
| *வேள்விப்படையல்* | *42 – 56* |
| *ஆருக்கு விடுதலை* | *57 – 68* |
| *நூல் விழுங்கிகள்* | *69 – 76* |
| *மணப்பாவை* | *77 – 91* |
| *பரிசு தந்த கதை* | *92 – 103* |
| *காணாமல் போன குஞ்சுகள்* | *104 – 119* |

# யாழ்ப்பாணி

நான் அப்போது க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைந்துவிட்டு வீட்டில் வேலை ஏதும் இல்லாமல் இருப்பது மனதிற்குக் கஷ்டமாக இருந்தது. சிலவேளைகளில் மேசன் வேலைக்குப் போகக் கிடைக்கும். சில வேளை களில் நண்பர்களுடன் சென்றால் அன்றைய பொழுதைச் சமாளித்துக் கொள்ளலாம். இப்படிக்காலங்கள் கழிந்தபோது ஒருநாள் எங்க ளுக்கு நெருக்கமான ஆனால் உறவினர் அல்லாத ஒருவர் அடிக்கடி வீட்டிற்கு வருபவர் வந்திருந்தார். நானுமவரும் கதைத்துக் கொண் டிருந்தபோது பரீட்சை எடுத்துவிட்டு வேலை ஒன்றுமில்லாது இருப்பதாகக் கூறினேன்.

சிறிது நேரம் யோசித்தார். இன்சூரன்ஸ் கம்பனியொன்றில் ஏஜென்சியாக அவர் இருப்பதாக எங்களுக்கு முன்னமே தெரியும். அதனால் அவர் பலருடன் பழகும் சந்தர்ப்பம் இருப்பதினால் ஏதாவது வேலையைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நப்பாசை மனதில்...

அவரை நாங்கள் வீட்டில் உள்ள எல்லோரும் "முதலாளி" என்றே கூப்பிடுவோம். இரண்டு கால்களும் பாதங்கள் பிரண்டு சொத்தியாக இருக்கும். அதற்கான சப்பாத்துக்களைப் போட்டுக்கொண்டு நடப்பார். வீட்டுக்கு வரும்போது நிறையத் தின்பண்டங்கள் கொண்டுவருவார். அவர் வரும் நாட்களில் இரவுச்சாப்பாடு விருந்து போலவே இருக்கும். அவர் எங்களில் அன்பாயிருப்பது போல நாங்களும் அவர் மீது அளவுகடந்த அன்பாயிருந்தோம்.

நான் கதைக்கும் போது அவரை முதலாளி என்று விளித்தால் அவர் எனது பெயரைச்சுருக்கி "கண்டா" என்று கூப்பிடுவார். அவர் அப்படிக்கூப்பிடும் போது உறவினரைவிட ஒருபடிமேலாகவே தெரியும்.

"கண்டா! நாவலப்பிட்டியில் ஒரு ரீச்சிங் வேலை யிருக்கு. செய்வியா?" என்று திடீரெனக் கேட்டார். எனக்குச் சொல்லிமாளாத ஆனந்தமாக இருந்தது. என்னமாதிரி என்று கேட்டேன். காசு கொடுக்கவேண்டு மென்றும் ஆனால் உடன டியாகக் கொடுக்கத் தேவையில்லை எனவும் கூறினார். சரியென்பதனைத்தவிர என்னிடத்திலி ருந்து என்னவரும்? சரியென்றேன்.

பயணநாள் குறிப்பிடப்பட்டது. என்னிடத்தில் அவ்வ ளவு எடுபிடியான உடுப்புகள் இல்லை. இரண்டொரு உடுப்பு கள் புதிதாக எடுத்தேன். சாரம், துவாய் என்பன புதிதாக இருக்கவேண்டுமென்று அவற்றைப் புதிதாகவே எடுத்தேன். நீளக்காற்சட்டை ஒன்றே ஒன்று இருந்தது. இன்னுமொன்றை எனக்கு விரும்பிய பட்டர்க்கலரில் எடுத்தேன். இனிமேல் நான் ஒரு ஆசிரியரல்லவா? அதனால்...

பயணத்தை நினைக்கச் சந்தோஷமாக இருந்தது. ஆனால் வீட்டிலுள்ளவர்களை விட்டுச்செல்ல மனம் ஏதோ தயங்கியது. அதிலும் என்மீது அளவுக்கதிகமான அன்பு பாராட்டும் அம்மாவை நினைக்க ஏக்கமாக இருந்தது.

பயணத்தின்போது மாலைநேரமே வீட்டிற்கு வந்து என்னைக் கூட்டிச்செல்லவிருந்த முதலாளிக்கும் எனக்கும் உணவுப்பார்சல்கள் தயாராகி இருந்தது. வேலைக்கெனப் புறப்படும் மகனுக்கு எப்படியெல்லாம் சாப்பாடு தரவேண்டு மென்பது அம்மாவுக்குத் தெரியாததா...

நடக்கமுடியாத முதலாளியையும் வேலைக்கென அவாப் பட்டுக்கொண்டிருக்கும் என்னையும் ஏற்றிக்கொண்டு தபால் ரயில் கொடிகாமத்திலிருந்து அசையத்தொடங்கியது. அன்றுதான் எனது கன்னிப்பயணம் புகையிரதத்தில்...

தெரியாத இடங்களெல்லாம் தெரியாமல் போய்க்கொண்டிருந்தது. ஒவ்வொரு இடங்களையும் மறைந்து போகுமுன் எனக்கு விளக்கிக் கொண்டிருந்தவர், அம்மா சாப்பாட்டுடன் கட்டிவைத்திருந்த ஆறு முட்டைக ளையும் இடைக்கிடை நினைவு கூர்ந்தார்.

"கண்டா... அம்மா வைச்ச முட்டையை எடன், சாப் பிடுவம்." எடுத்துக் கொடுத்தபோது முழுதாகவே கடித்து விழுங்கினார். "மிளகும் உப்பும் இடிச்சு வையுங்கோ" என்ற போதே முழுமுட்டைகளும் அவருக்கே உரியது என்று நான் முடிவெடுத்திருந்தேன். இப்பொழுது சிரிப்பு வந்து என்னைச் சந்தோஷிக்கச்செய்தது.

பொல்காவலைச்சந்தியில் ரயில் மாறவேண்டுமென்று சொன்னார். இறங்கி மாறினோம். குளிர் கடுமையாக இருந்தது. நாவலப்பிட்டியில் இறங்கியபோது கால்கள் மரம்போல விறைத்துப்போயிருந்தது. இதென்ன குளிரென்று நான் பயந்தே போனேன். ஸ்ரேசனிலிருந்து அவருடைய இருப்பிடம் சிறிது தூரமென்று சொல்லி "நடக்கவா அல்லது ஆட்டோ பிடிக்கவா" என்றார். "சூடாக ஒரு தேநீர் குடித்து விட்டு நடப்போம்" என்றேன். இடங்களைப் பார்க்க ஆசை யாக இருந்தது. சில இடங்களில் ஊமை ஏற்றமாக இருந்தது. அதில் நடக்க முதுகு வலித்தது. சிலஇடங்களில்

குதித்துக்குதித்து நடக்கவேண்டும்போல இருந்தது.

நாங்கள் தங்கவேண்டிய இடம் லெப்பை றோட்டிலிருந்தது. மேலும்கீழுமாக இரண்டு அறைகள். கீழே கார்க்கராஜ். மேலே ஒரு அகலமான அறையும் குளியலறை, மலசல கூடத்துடன் இணைந்திருந்தது. பிரயாணக்களை நித்திரையோடு உறவுகொண்டது, புற்பாய் அதற்கு துணையாக இருந்தது.

விழித்துக்கொண்டபோது "பள்ளிக்கூடம் பார்ப்போமா" என்றார். "என்ன அவசரம் போவோமே" என்றேன். மேல், கை, காலைக் கழுவிக்கொண்டு வெளியே புறப்பட்டோம். தேநீர்வேளை. அப்படியே அருகிலுள்ள நாவலப்பிட்டி கதிரேசன் கோவிலுக்குப் போய்விட்டு தேநீர் அருந்தினோம்.

றோட்டு நீளத்திற்கு மரக்கறிகளை நிரப்பி வைத்திருந்தது. அழகாக இருந்தது. எல்லா மரக்கறிகளும் உடன் வந்தவைபோல இருந்தது. அந்த நிலையில் இதுவரை எந்தச் சந்தையிலும் பொருட்களைக் கண்டதேயில்லை. அழகு என்பது ஒழுங்கிலிருந்து பிறக்கின்றது என்பதை அந்தவயதிலேயே தெரிந்துகொண்டேன்.

மறுநாட்காலையில் பாடசாலையைப் பார்க்கப் புறப்பட்டோம். எமது இருப்பிடத் திலிருந்து கிழக்குப்பக்கமாக இருக்கும் ரயில்ப்பாதையூடாக ஒருகிலோமீட்டர் நடந்தால் சேலம்பிறிஜ் என்ற பாலம் இருக்கிறது. கீழே ஆற்றின் தோற்றத்தைக் கவனித்தால் நடக் கவே முடியாது. அவ்வளவு பயங்கரமாக இருக்கும். கீழே ஆற்றில் குளித்துக்கொண்டிருப்பவர்களைப் பார்த்தால் சிறிய விளையாட்டுப் பந்து போலக்காட்சியளிக்கும்.

ரயில்ப்பாதையின் அருகாகவே நடைபாதையும் இருக்கிறது. அதில் நடந்து போகும்போது இடையில் சிலவேளை ரயிலும் வரலாம். அந்த நிலையை இன்றும் நினைத்தால் உடல்பதறும். அன்று அந்தப்பாலத்தில் நடந்து

சென்றதை நினைக்க பயமாகவே இருக்கிறது.

பாலத்தைக்கடந்து பள்ளிக்குச் சென்றோம். பிரதா னபாதை பாம்பு வளையல்களாக வளர்ந்தது. பள்ளிக்குச் செல்வதற்குச் சிறிது மேலேறிச் செல்லவேண்டும். சிறிய படிகள்போல் கற்களால் பாதை அமைக்கப்பட்டிருந்தது. எனது பார்வையில் பள்ளிக்கூடம் ஒருவீடு போலவே காட்சியளித்தது. இரண்டொரு சுத்தமாக வெள்ளையல்லாத சட்டைகள் அங்குமிங்கும் ஓடியாடுவது தெரிந்தது. மூன்று ஆசிரியர்கள், ஒரு தலமையாசிரியர்.

ஆசிரியர்களைப் பார்த்தபோது பாடசாலை எப்படி இருக்கும் என்பதை ஊகித்துக்கொண்டேன். ஆசிரியைகளின் கோலத்தை கவனித்தபோது, அவர்களாக வேலை தேடிவந்த வர்களல்ல என்றும் இயக்குனர்களின் வற்புறுத்தலின் பேரில் வந்தவர்கள் போலவுமே இருந்தது.

தலைமை ஆசிரியர் என்னைக்கண்டதும் பதமாகச் சிரித்துக்கொண்டு அருகில் வந்து எனது கைகளைக்கு லுக்கினார். நானும் கைகுலுக்கிச்சிரித்தேன். அவரின் முன் வாய்ப்பற்கள் வெளித்தள்ளியபடி இருந்ததால் அவரும் சிரித்தார் என்று சொல்ல என்னால் முடியாதிருந்தது.

சிறிது நேரம் எனது முதலாளியும் தலைமையா சிரியரும் கதைத்துக்கொண்டனர். இவர்கள் கதைத்த தோர ணையிலிருந்து எனது முதலாளிதான் அந்தப்பாடசாலையின் ஸ்தாபகராக இருக்கலாம் என எண்ணினேன். பக்கத்திலிருந்த ஒருசிறிய அறையைக் காட்டிய தலைமை ஆசிரியர், அங்கு அமர்ந்து கொள்ளலாம் என்று தெரிவித்தார். அங்கே ஆடப் பழகிய கதிரை ஒன்றும் மாணவர்களைச் சுமந்திருக்க ஒரேயோரு வாங்கில் மட்டும் இருந்தன.

எனக்கு ஆச்சரியம் ஒருபுறமும் ஏமாற்றம் ஒருபுற முமாக இருந்தது. இதுபாடசாலையா? அல்லது ரியூசன் சென்ரரா ஒன்றும் விளங்கவில்லை.

முதலாளியைப் பார்த்தேன். தாண்டித்தாண்டிக் கிட்ட வந்தார். "என்ன கண்டு... எப்பிடிப் பள்ளிக்கூடம்? பிடிச்சுக் கொண்டுதே?"என்று மெதுவாகக் கேட்டார். அத்தோடு வெளி வந்த சிரிப்பு எனக்குப் பிடிக்கவில்லை என்பதை அவர் தெரிந்து கொண்டார் என்பதை வெளிப்படுத்தியது. தலைமை ஆசிரியரும் எனது அறைக்கு வந்தார். அவரும் "பள்ளிக் கூடம் பிடிச்சிருக்கா?" என்று தான் கேட்டார்.

இதிலிருந்து பள்ளிக்கூடம் எத்தனை பேருக்குப் பிடிக் காமல் இருந்திருக்கிறது என்ற உண்மையை நான் அப்போது தான் புரிந்து கொண்டேன்.

முதலாளி சொன்னார் "கண்டு! நாங்கள் றூமுக்குப் போவம்." நானும் "பறவாயில்லை போவம்." என்றேன். இங்கே இருப்பதைவிட றூமில் இருந்தபடி றெயில் போவ தையும் வருவதையும் பார்ப்பது பறவாயில்லைப் போல் இருந்தது. தலைமை ஆசிரியருக்குச் சொல்லிவிட்டு இருவரும் புறப்பட்டோம்.

பாலத்தை நினைக்கத் தலைசுற்றுவது போலிருந்தது. படிப்பித்தல் வேலை எனக்குக் கிடைக்கிறது என்றபோது நான் எத்தனை பிள்ளைகளுக்கு ஆசிரியராக இருக்கப் போகிறேன், பாடங்களை எப்படி எப்படி எல்லாம் சொல்லி விளங்கப்படுத்தப் போகின்றேன், எனக்கு எப்படியான மாணவர்கள் வாய்க்கப் போகின்றார்கள்? கண்டவுடன் மதிப்புத்தருவார்களா? திரும்பவிட்டு கல்லால் எறிவார்களா? மற்றமாணவர்களுடன் சேர்ந்து ஏதும் பட்டம் சொல்லிக் கூப்பிடுவார்களா என்ற எண்ணங்கள், அப்படியே புஸ்வாணம் ஆகிவிட்டது போலிருந்தது.

தலைமை ஆசிரியரும் முதலாளியும் சேர்ந்து வேலை தேடுபவர்களிடம் ஒருதொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்டு பிறகு வேலையை விட்டு அவர்களாகவே ஓடும்படி செய்வதே அவர்களுடைய வேலையாக இருந்தது என்பதை

அவர்களுடன் பேசிப் பழகித்தெரிந்து கொண்டேன்.

அதுமட்டுமல்ல, குமாரசாமி என்ற அந்தத் தலைமை ஆசிரியர் எனது முதலாளியின் பெறாமகன் என்பதும் தெரியவந்தது. என்னை அழைத்துவரும்போது இப்ப காசுகொடுக்கத் தேவையில்லை, ஆறுதலாகக் கொடுக்கலாம் என்பதன் மர்மம் மெல்ல மெல்ல விளங்கியது. என்னைப் பாடசாலையில் இணைத்து கல்வியூட்டலை நல்லமுறையில் நடத்தலாம். நடத்தினால் பிள்ளைகள் கூடிய அளவில் வந்து சேர்வார்கள். அப்படிச் சேர்ந்தால் என் மூலமாக நிறைய வருமானம் பெற்றுக்கொள்ளலாம் என்பதே அவர்களின் திட்ட மாக இருக்கவேண்டும். என்னுடைய முதலாளியினதும் தலைமையாசிரியரினதும் சொந்த ஊர், கல்வியறிவு, பழக்க வழக்கம். பண்பாடு என்பவற்றில் மிகவும் பின்தங்கிய இடம் என்பது எனக்குத் தெரிந்த ஒன்று.

ஆகையால் இவர்கள் என்ன செய்யக்கூடியவர்கள் என்பது எனக்கு மெல்ல விளங்கியது. றூமுக்குள் நுழைந் ததும் "கண்டு! நீ கொஞ்சம் படுத்து ஓய்வெடு. நான் வெளி யிலபோய் மதியச் சாப்பாட்டையும் எடுத்துக்கொண்டு வாறன். ஏதும் பிரச்சனையெண்டால் சொல்லு. சரியே."

எனது பதிலுக்குக்காத்திருக்காமல் அவர் வெளியே போய்விட்டார். அறையிலிருந்த ஒரு நீளமான கோளவடிவ மான மேசை நான் தூங்க இடமளித்தது. தலைக்கு தலையணையாக புதியதல்லாத ஒரு தலையணை. சும்மா சொல்லக்கூடாது குளிரான அந்த இடத்துச் சூழல், அம்மா ஒருத்தி தாலாட்டுப்பாடினால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது. உறக்கம் வருமென நினைத்தேன். எண்ணங்கள் அனுமதிக்கவில்லை.

நான் வந்தது நம்பிக்கையான ஒருவருடன், அவர் எனக்குப் பாதகமாக எதையும் செய்யமாட்டார் என்ற நம் பிக்கை என்னை விட்டுப் போக நியாயமில்லை. என்றாலும்

வேலைக்கென்று புறப்பட்டபோது இருந்த துணிவும் உற்சாகமும் என்னை அறியாமல் கழன்று போனது எப்படி...?

முட்டைக்குள் இருந்து வெளியில் வந்த குஞ்சின் நிலையில் நானிருந்தேன். முட்டைக்குள் இருந்தபோது ஒன்றுமே தெரியவில்லை. வெளியே வந்தவுடன் தானே அம்மாவின் அரவணைப்பு உயிர் வாழ உணவு, தண்ணீர் வேண்டுமெனத் தெரிகிறது.

பாதுகாப்புக்கு அம்மாவின் சிறகு காவலாக இருந்தது. ஆனால் அதையும் தாண்டி பருந்தொன்றின் இறாஞ்சலில் தப்பினபின்தானே தெரியும் தற்பாதுகாப்பு கட்டாயம் தேவையென்று. மெல்ல மெல்ல எல்லாவற்றையும் உணரக்கூடிய வாய்ப்பை இறைவன் எனக்குத்தந்து, என்னை வழிநடத்தப்போகிறான் என்பதை நான் உணர்ந்துகொண்டேன். இடைக்கிடை புகையிரதம் ஓடும் சத்தம் என்சிந்தனையைக் குழப்பிக்கொண்டிருந்தது. என்னையும் அறியாமல் சிறியதூக்கம் போட்டேன்.

கதவு தட்டும் சத்தம் கேட்டது. "கண்டா என்ன நித்திரையோ?" என்றகுரல் முதலாளியுடையதே. இரண்டு கையிலும் நிறைவானபாசல் வாழைப்பழத்துடன் எடுபிடி யாக இருந்தது. என்னைச் சமாளிப்பதற்காகவோ என நினைத்தேன். என்ன இருந்தாலும் உணவுவிடயத்தில் அவருக்கு இணையாக யாரும் இருக்கமுடியாது. இருவரு மாக நிலத்தில் இருந்து சாப்பிட்டோம். நல்லசாப்பாடு! மனதிற்குப் பிடித்தமாக இருந்தது. கடையை எனக்கு அறிமுகப்படுத்துவதாகச் சொன்னார். வாழைப்பழம் பச்சையும் சிவப்புமாக இருந்தது. எங்களூர் போல மஞ்சளாக இல்லை. அவராகவே சொன்னார் பச்சை ஆனைவாழை. மற்றது செவ்வாழை. அன்றுதான் அவற்றைக் கண்டேன். நன்றாக இருந்தது.

முதலாளியின் சாப்பிட்ட வாய் சிறிது ஆறிக்கொண்டு

மீண்டும் அசைந்தது. "கண்டு... நீ பள்ளிக்கூடம் போக வேண்டாம். இஞ்சை இருந்து கொண்டு படிப்பிக்கலாம். அதுக்கான ஒழுங்கை நான் செய்து தருவன். குமாரசாமியும் இடைக்கிடைவந்து உனக்கு உதவி செய்வார். பயப்பிட வேண்டாம். நான் தூரப்போறதாக இருந்தால் சாப்பாட்டுக் கான ஒழுங்கெல்லாம் செய்துபோட்டுத்தான் போவன். ஒண்டும் யோசிக்கத் தேவையில்லை. கொஞ்சம் கஷ்டமா கத்தான் இருக்கும். போகப்போக எல்லாம் சரிவரும்" என்னைச் சமாதானப்படுத்த வந்த ஆறுதல் வார்த்தைகள் இவை. நான் ஒன்றும் பேசவில்லை. தலையை மட்டும் ஆட்டிக்கொண்டேன்.

அடுத்தநாள் காலையில் நான் சாப்பிடவேண்டிய கடையை அறிமுகப்படுத்தினார். கடைமுதலாளிக்கு என்னைப்பற்றி ஏதோசொல்லிய பின்னர் காலைச்சாப்பாட்டை முடித்துக்கொண்டு புறப்பட்டோம். அறைக்கு வந்தபோது நாலைந்து மாணவர்கள் மலையேற்றத்தில் இருந்து இறங்கிக்கொண்டு வந்தனர். முதலாளி என்னைப்பார்த்துச் சிரித்தார். "கண்டா! உன்ரை மாணவர்கள் வருகினம் பார்" என்றார். எனக்கு சிரிப்புத்தான் வந்தது.

அறைக்குள் நுழைந்தோம். "இண்டைக்குப் பின் னேரம் அல்லது நாளைக்கு நீளமான மேசை, ஒரு வாங்கில் கதிரை எல்லாம் வரும். இண்டைக்கு மட்டும் நிலத்தில இருந்து படிக்கட்டும்."

நான் சரி என்றேன். இரண்டு மாணவர்கள், மூன்று மாணவிகள், இவர்கள் தான் எனது சோதனைக் காலத்தின் ஆரம்பகர்த்தாக்கள். அவர்களுடனேயே எனது காலத்தை ஓட்டிவிடவேண்டும் என முடிவெடுத்தேன்.

முதலாளி அருகே வந்தார். கையில் ஒரு ஐநூறு ரூபாத்தாளை வைத்தார். "நான் ஒருக்கால் கொழும்புக்குப் போகவேணும். நாளைக்கு அல்லது நாளையிண்டைக்கு

வந்திடுவன். பயப்பிடாமல் இரு. நான் காட்டின கடையில சாப்பிடலாம், சரியே" என்றுவிட்டுப்புறப்பட்டார். ஏதோ ஞாபகம் வந்தவராய் "கண்டு குளிச்சிட்டு உடுப்பு விரிக்க வேணும் எண்டா கராச்சுக்க விரிக்கலாம். திறப்பை எடுத்துவா காட்டிட்டுப் போறன்" நான் திறப்போடு வந்தேன். கராச் நல்ல விசாலமானதாக இருந்தது. "சரி" என்றேன். அவர் போய்விட்டார்.

மாணவர்களிடம் வந்தேன். அவர்கள் என்னைப் பார்த்த பார்வையில் இருந்து இவர்களைச் சந்தோசப்படுத்தக் கூடியவர்கள் இதுவரைஅகப்படவில்லை என்பது தெரிந்தது. இவர்கள் ஒரு இடைத்தரக் குடும்பப் பிள்ளைகளாக இருக்கவேண்டும். அவர்களுடைய பேச்சும் நடையும் அதனை எடுத்துக்காட்டியது.

நான் அவர்கள் மீது அன்பைப் பொழிந்து அவர்க ளில் ஒருமாற்றத்தைக் காணவேண்டும் என உறுதிகொண் டேன். கல்வி கற்றகாலத்தில் நாங்கள் விளங்கிக்கொள்ள முடியாத மாதிரி எங்களுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் களை எனது கண்முன் கொண்டுவந்து பார்த்தேன். அதை வைத்து நான் எப்படியான ஆசிரியராக இருக்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டேன். அதன்படி நடக்கவும் ஆசைப்பட்டேன்.

ஆகையால் அவர்கள் படிப்பதற்குப் பயப்படக் கூடாது என்பதற்காக நான் இரண்டாம் மூன்றாம் வாய்பாடு களை இராகத்துடன் சொல்லிக்கொடுக்க, அவர்களும் என்னு டன் சேர்ந்து சொன்னார்கள். அவர் களுடைய எழுத்துக்களும் கோணல்மாணலாக இருந்தது. உறுப்பாக எழுதப் பழக் கினேன். அதிலும் அவர்கள் ஆர்வமாக இருந்தனர்.

அடுத்தநாள் சில பெற்றோர் என்னைக்காண்பதற்காக வந்திருந்தனர். அவர்களுடைய முகங்களில் எனக்கான சந்தோஷச் செய்தியொன்றைக் கொண்டுவந்தது தெரிந்தது.

"சேர் ஒருநாளில எங்கட பிள்ளையளிட்ட பெரிய வித்தியாசம் தெரியுது. நேற்றுத்தான் சொல்லிக்கொள்ளாம புத்தகத்த எடுத்துப்படிச்சாங்க சேர். எழுதிப்பழகினாங்க சேர், விளையாடக்கூடப் போகல்லை சேர்.அப்படீன்னாப் பாருங்க ளேன்சேர், எங்கட மனசுக்குச் சந்தோஷம் செய்திட் டீங்க. அத உங்களிட்ட சொல்லிட்டுப் போகத்தான் வந்தோம்."

வந்தவர்களின் வயதுக்கு, அவர்கள் என்னை "சேர்... சேர்..." என்று வாய்நிறைய அழைத்தமை என்னை ஒரு அரண்மனை வாசலுக்கு அழைத்துச் சென்றது போலிருந்தது. எனக்குச் சற்றுக்கூச்சமாகவும் இருந்தது. அவர்கள் விடை பெற்றுச் சென்றனர். "நன்றி" சொல்லி வழியனுப்பினேன். அவர்கள்போகும் போது திரும்பித்திரும்பி என்னைப்பற்றி ஏதோ சொல்லிக்கொண்டே சென்றனர்.

என்னோடு படித்தவர்கள், இன்று எங்களூர் வீதி களில் குண்டடித்தோ அல்லது காசெறிந்தோ விளையாடிக் கொண்டிருப்பார்கள் என்றும் நான் ஒரு ஆசிரியர் என்றரீதி யில் நாலுபேருடைய கௌரவத்திற்கு ஆளாகியிருக்கின்றேன் என்றும் ஒப்பிட்டுப் பார்த்தேன். எனக்கு என்னையும் அறியாத பெருமையாக இருந்தது.

நாட்கள் இவ்வண்ணம் வளர்ந்து கொண்டு போனது. ஒருநாள் சாப்பிடுவதற்காக சாப்பாட்டுக்கடைக்கு ப்போயிருந் தேன். வழமையாக ஆடம்பரமில்லாத சாப்பாடு தான். சாப் பாடு முடிந்ததும் பில் வந்தது. பில்லுக்கான காசை எடுத்துப் பார்த்தேன். இருபத்தைந்துசதம் காணாமல் இருந்தது. பிழை யேதும் செய்துபழகாத எனக்கு பெரிய சங்கடமாக இருந்தது. அப்பா சொல்லும் விடயங்கள் சில என்மனத்திரையில் ஓடின.

"சாப்பாட்டுக்கடையில் சாப்பிட்டுவிட்டு காசு கொடுக்க முடியாமல் போய்விட்டால் பின்பக்கம் உழுந்து அரைத்துக் கொடுக்க நேரிடும்" என்று சொன்னதை

நினைத்ததும் அழுகைவரும் போலிருந்தது. என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒருவாறு துணிவு கொண்டு காசாளருக்கு அருகில் சென்றேன். இருந்த காசை பில்லோடு வைத்து "இருபத்தைந்து சதம் குறைகிறது. சேட்டை மாற்றிக்கொண்டு வந்ததால் தவறாகிவிட்டது மன்னிக்கவும்" என்றேன்.

அவர் என்னை வெறுப்போடு பார்க்கவில்லை என்பது மனதிற்கு இதமாக இருந்தது. "பறவாயில்லை, பிறகு எடுத்துக்கொள்ளுவம்" என்றார். நானும் பதிலுக்கு சிரித்தபடி "நன்றி" தெரிவித்துத் திரும்பினேன். அறைக்குச் சென்றதும் முதல்வேலையாக மற்றச்சேட்டில் இருந்த காசை எடுத்துக்கொண்டு கடைக்குத் திரும்பினேன். காசாளரின் மேசையில் இருபத்தைந்து சதத்தை மெதுவாக அழுத்திவைத்தேன். காசாளர் என்னைப்பார்த்தார். அங்கிருந்த வேறுசிலரையும் மாறிமாறிப் பார்த்தார். காசை எடுத்துக் கொண்டு "தம்பி யாழ்ப்பாணமா...? என்று பவ்வியமாகக் கேட்டார். அந்தவார்த்தை இன்றும் என்காதுகளின் மூலம் உடம்பைக் குளிராக்குகிறது. என்னுடைய வயதுக்கு யாழ்ப்பாணத்திற்குப் பெருமை சேர்த்திருக்கிறேனே என்று நினைக்க நினைக்க சந்தோசம் கரைபுரண்டது. ஆனால்...

என்னை இந்தப் புதிய இடத்திற்கு அழைத்து வந்தவர்கள் யார்? அவர்கள் இங்கே என்ன செய்கின்றார்கள்? இவர்கள் யாழ்ப்பாணத்தவர்களா? என்பதை ஜீரணித்துக் கொள்ள எனக்கு முடியாதிருந்தது. இரண்டு நாட்கள் மேலும் நகர்ந்தன. வட்டமேசையில் படுத்துக்கொண்டு வீட்டைப் பற்றிச்சிந்தித்தேன். கடிதம் ஏதும் வந்திருக்குமா நான் பார்க்கவில்லையே.. என்று கராச்சைத்திறந்தேன்.

இரண்டு கடிதங்கள் கீழே கிடந்தன. ஒன்றில் ஆஸ்ப் பத்திரி வேலைக்கு ஆட்கள் எடுக்கின்றார்கள் என்றும் அதற்கு விண்ணப்பிக்க வருமாறும் அண்ணா கடிதம் எழுதியிருந்தார்.

அது ஒருஅரசாங்க வேலையல்லவா... எப்படி ஆசை வராமலிருக்கும். முதலாளியை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். மாலையில் அவர் கொத்து ரொட்டியுடன் வந்தார். குமாரசாமி ஆசிரியரும் கூடவே வந்திருந்தார். கடிதத்தைக்காட்டினேன். அனுமதியும் கிடைத்தது.

"கண்டா... உனக்கு நல்லகாலம் வந்திட்டுதடா. நாளைக்கே வெளிக்கிடுவம். உன்னை இந்தச்சாட்டோட கொழும்புக்குக் கூட்டிப்போய் கொழும்பையும் காட்டீட்டு நானும் வாறன். ரண்டுபேரும் சேர்ந்து யாழ்ப்பாணம் போவம். சரிதானே" என்றார்.

அதிபரைப்பார்த்தேன். மெல்லிய சிரிப்பு வந்தது. நான் போவது நல்லது என்றது அவருடைய சிரிப்பு.

⌘

# கள்ளப்பூனை

"அங்கை பாரடி பிள்ளை பதுங்கிப் பதுங்கி வருகுது. அது நல்லாய் ருசி கண்டிட் டுது. வா, உன்னை இண்டைக்குக் கொல்லாமல் விடன்" கையில் வைத்திருந்த கம்பொன்றை வீசி எறிந்தாள் ரதி. குறி தவறிக்கொண்டதால் பூனை தப்பினேன் பிழைத்தேனென்று பாய்ந் தோடியது.

"உவடமெல்லாம் களவெடுத்துத் திரியு தாமடி பிள்ளை உந்தப்பூனை. முந்தநாள் தங்கம்மாமி வடை சுட்டு வைச்சுப்போட்டு கிணத்த டிக்கு போவிட்டு வரக்கிடையிலை இரண்டு வடையைத் திண்டிட்டுதாம்."

ரதி தான் தோற்றுப்போனதைத் தாங் கிக்கொள்ள முடியாதவளாய் இப்படி யொரு கதையை விட்டிருந்தாள். மோகன் எதுவும் தெரியாதவன்போலக் கேட்டுக்கொண்டிருந்தான். அவன் ஏதும் சொல்லியிருந்தால் நன்றாக வாங்கிக்கட்டியிருப்பான். மிருகங்கள், பறவை களில் மோகன் மிகுந்த அன்பும் இரக்கமும்

உடையவன். இரவில் சாப்பிட்டபின் யாருடைய நாய், பூனை நின்றாலும் மிஞ்சிய சாப்பாட்டைக் குழைத்து அவற்றுக்கு வைப்பான். இது ரதிக்குப்பிடித்துக்கொள்ளாத விடயமாக இருந்தது. இதனால்தான் நாய், பூனையைப்பற்றி ஏதாவது பிரச்சினைப்பட்டுப் பேசிக்கொண்டே இருப்பாள். அவளுக்கு ஏதேனும் ஆத்திரம் வரும்போது பூனை தற்செயலாக அங்கே வந்து விட்டால் அவ்வளவுதான். பாத்திரங்கள் உருண்டு விளையாடும். கம்புகள் அந்தரத்தில் பாயும்.

மகள் கீர்த்தனாவுக்கு இதைப்பற்றிக் கவலையே இல்லை. தாய்க்காகவோ பூனைக்காகவோ பரிந்து கதைக்க வேண்டிய தேவை அவளுக்கு இல்லை. மற்றது பூனை என்றாலே அவளுக்குப் பயம்

சின்ன வயதில் அவளுக்கு மோகன் பாடம் சொல்லிக்கொடுப்பான். மிருகங்கள், பறவைகளுக்கு எழுத்துக் கூட்டி, உச்சரித்துப்பழக்குவான். பூனை என்று சொல்லும்போது மோகனுக்குச் சொல்லிக்கொள்ளாமல் கொடுப்பிற்குள் சிரிப்புவரும். பூவன்னா னையன்னா என்று சொல்லிக்கொடுக்க கீர்த்தனாவும் பூவன்னா னையன்னா என்பாள். பூனை என்று மோகன் சொல்வதுதான் தாமதம் கீர்த்தனா "அம்மா..." என்று குழறியடித்துக்கொண்டு எந்தப்பாதையால் ஓடுவாள் என்பது யாருக்குமே தெரியாது. அப்படிப்பட்ட கீர்த்தனா ஏன் அந்தப்பூனைக்காகப் பரிந்து பேசப் போகிறாள்.

மாலை வேளையில் எல்லோரும் ஒன்றாக இருந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது கதைவாக்கில் மோகன் சொன்னான். "எல்லாரும் உந்தப்பூனையைக் கள்ளப்பூனையெண்டு சொல்லுறியள். அதுக்கு எப்பவேனும் ஆரேனும் சாப்பாடு வைச்சியளோ? நாய்க்கு வைக்கிறது போலை அதுக்குக் கொஞ்சம் சாப்பாடேனும் வைச்சு

வந்திருந்தால் அது களவெடுத்துச் சாப்பிடாமல் இருந்தி ருக்கும்தானே!"

"வீட்டில் எலியைப் பிடிக்குது... பாம்பைப்பிடிக்குது... இன்னும் எங்களுக்கு உதவுற அந்தப்பிராணிக்குக் கொஞ்சச்சாப்பாடு வைக்க உங்களுக்கு மனமில்லை. ஆனால் கள்ளப்பூனை எண்டு சுகமாய்ச் சொல்லிப்போட்டு இருந்திடுவியள் என்ன?" மோகன் மனதுக்குள் பட்டதைச் சொல்லிவிட்டு எல்லோரையும் ஒரு ஓரப்பார்வைக்குள் அடக்கினான். எவரிடமிருந்தும் எந்த வார்த்தையும் வரவில்லை. எல்லோரும் பேசாமல் இருந்தார்கள். மோக னுக்கு இதில் சிறிது வெற்றி கிடைத்ததுபோல இருந்தது.

ரதி மோகனுக்கு இரவுச்சாப்பாட்டைக்கொண்டு வந்து கொடுத்தாள். மாமரத்தின் கீழே போடப்பட்டிருந்த கதிரையில் இருந்தபடி உணவை உட்கொண்ட மோகன், மிஞ்சிய உணவை இரண்டாகப் பிரித்து நாய்க்கு உணவு வைக்கும் கோப்பையில் அதற்கான பகுதியையும் மற்றப் பகுதியை பக்கத்திலிருந்த கொங்கிறிற் கல்லின்மேல் பூனைக்குமாக வைத்துவிட்டுப் பார்த்துக்கொண்டே நின்றான்.

பூனைக்கு வைத்த பங்கும் தனக்கு வேண்டும் என்ற ஆசையில் 'வதக்... வதக்..." கெனச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது நாய்க்குட்டி. பூனையும் பயந்து பயந்து தரையோடு தனது உடலை பதிய வைத்துக்கொண்டு வந்து சாப்பிட்டது. நாயும் விடவில்லை. சாப்பிட்டு விட்டு பூனை யைத் துரத்தப்பார்த்தது. மோகன் விடவில்லை.

இப்படித் தினமும் நடந்தது. இதனால் அங்கு நம்பமுடியாத மாற்றமொன்று நிகழத் தொடங்கியிருந்தது. அதுமட்டுமல்லாமல் குசினிக்குள் செல்ல முயற்சிக்காது, கதவருகில் அமைதியாகக் கண்களை மூடிக்கொண்டு அது இருக்கும் நிலையைப் பார்க்கப் பாவமாகவும் இன்னொரு புறம் ஆச்சரியமாகவும் இருக்கும். யாராவது உறுக்

கிப்பேசிவிட்டால் முற்றத்தில் போய் அமர்ந்து கொண்டு, தன்னைப்பேசியவர்களை இடைக்கண்ணால் பார்க்கும்.

கீர்த்தனாகூட பூனையைத் தடவிக்கொடுக்கும் அளவுக்கு மாறியிருந்தாள். பூனைக்கென்று ஒரு சிறிய கோப்பையும் தேடி வைத்திருந்தாள். எல்லோரும் உணவருந்தும் போதெல்லாம் பூனைக்குச் சாப்பாடு வைக்கப் பழகிக்கொண்டார்கள். ரதிகூட இதற்கு விதிவிலக் கல்ல. ரதி எங்குபோனாலும் அவள் பின்னால் பதுங்கிப் பதுங்கிச் செல்லும். அவள் குளிப்பதற்காகக் கிணற்றடிக்குச் செல்லும் வேளைகளில் கூட மெல்ல மெல்லச் சென்று தண்ணீர்த் தொட்டிக்கு அருகிலுள்ள கல்லொன்றின் மேல் ஏறிப் படுத்திருந்து பார்த்துக்கொண்டிருக்கும். சிலவேளை அது தூரமாக ஓடி மரங்களில் தாவும். அணில்களைத் துரத்தும். அப்போது உணவு வைப்பதற்காக யாராவது கூப்பிட்டால் உடனடியாக ஓடி வந்து காலடியில் கிடக்கும்.

மழைநேரங்களில் அது படுத்துக்கொள்வதற்காக அங்குமிங்கும் ஓடித்திரியும். அதைக்கவனித்து விட்டு மோகன் பழைய துணிகளை எடுத்து சொகுசாக மடித்துப்போடுவான். அப்படிப் போட்டுவிட்டு பிள்ளைகளுக்குச் சொல்வதுபோல "இதிலை வந்து படடா" என்று அன்போடு சொல்லுவான். பிள்ளைகள் செய்வதுபோல அதுவும் ஓடிவந்து படுத்துக் கொண்டு முன்னங் கால்களால் முகத்தைத் தடவித் தடவி நக்கும். இது மற்றவர்களுக்கும் மனதிற்குப் பிடித்தமானதாக இருக்கும்.

ரதிகூட இந்தச் சந்தர்ப்பங்களை மனதிற்குள் ரசிப்பாள். இப்போது அது கள்ளப்பூனை இல்லையா? அல்லது இது வேறு பூனையா? அதே கள்ளப்பூனைதான் இதுவென்றால் அது எப்படி இதுவாய் மாறியது. நாங்கள் எல்லாரும் அதன்மீது காட்டிய பரிவுதானே இவ்வளவு தூரம் அதை எம்மோடு ஒட்டியுறவாட வைத்திருக்கிறது.

ஆறறிவு படைத்த மனிதர்களே களவெடுத்து அடுத் தவன் சொத்தை அபகரித்து இடாம்பீகமாக வாழ்க்கையை ஓட்டும்போது அதைக் கண்டும் காணாததுபோல இருக்கும் நாங்கள் எம்மை விட அறிவு குறைந்ததாகச் சொல்லப்படும் இந்தப்பிராணி தனது உணவாகத் தேவைப்பட்டதை எடுத்தால் அதைக் கள்ளப்பூனை என்று அடித்துத் துரத்துவது எந்த விதத்தில் நியாயமாகும்?

நாட்கள் ஓடின... பூனைகளுக்கான புணர்ச்சிக்காலம். கடுவன் பூனைகளால் எல்லோருடைய நித்திரையும் பறி போனது. பூகம்பம் வெடிக்க வாய்ப்பிருக்கலாமென மோகன் பயந்தான். "அறுந்து போன பூனைக்கிளையளாலை நித்தி ரையும் கொள்ள ஏலாமல் கிடக்கு" இடைக் கிடை ரதியின் புறுபுறுப்பு கேட்டுக்கொண்டிருக்கும். அவ்வளவேதான்.

சிலவேளை கடுவன் பூனைகளை ஏமாற்றிவிட்டு இந்தக்கள்ளப்பூனை ஓடிவந்து மோகனின் கால்மாட்டில் நுளம்புச்சீலைக்குள் மறைந்து கொள்ளும். சிலவேளை மோகனின் முதுகுப்புறமாக அணைந்து கொள்ளும். இப்படிப் பழகிப்பழகி வித்தியாசமான மனநிலையொன்றை அந்தக் குடும்பத்தினர் மத்தியில் ஏற்படுத்திக் கொண்டது அந்தப் பூனை. மற்றைய வீடுகளில் நடப் பதுபோல ஒவ்வொருவரும் சாப்பிட்டுவிட்டு மிச்சத்தை மிருகங்களுக்கு வைப்பதில்லை. எல்லோரும் சாப்பிட்டு மிகுதியை ஒரு பாத்திரத்தில் சேர்த்து வைத்துவிட்டு கடைசியாக பூனையோ நாயோ எதுவாயினும் கூப்பிட்டு சாப்பிட வைப்பார்கள்.

சிலவீடுகளில் பிள்ளைகள் சாப்பிட்டுக் கொண்டி ருக்கும் போதே கோப்பையிலிருந்து மீனைத்தூக்கிச் செல்லும் பூனைகளையும், மோகன் கண்டிருக்கிறான். அது பூனைமீதுள்ள தவறல்ல. சாப்பிடுபவர்கள் செய்யும் தவறு. அவர்கள் உணவைக் கொட்டிச் சிந்துவதும் சப்பித்துப் புவதுமாக இருந்தால் அவற்றை உண்பதற்காக பூனைகள்

முயற்சிப்பது எந்தவிதத்தில் தவறாகும். இந்த நிலை மோகன் வீட்டில் இல்லாதிருந்தது. நாளாந்தம் இப்படி நடப்பதால் பூனை ஒரு ஓரமாகப் படுத்தி ருந்து கொண்டு சாப்பிடுபவர்களை நேரடியாகப் பார்க்காமல் ஓரக்கண்ணால் பார்ப்பதும் சிலவேளை கண்களை மூடிக்கொள்வதும் பார்ப்பதற்கு சுவாரஸ்யமாக இருக்கும்.

நாட்கள் தனது பயணத்தைத் தொடர்ந்து கொண்டே யிருந்தது. இப்போது கள்ளப்பூனைக்கு 'றோசி' என்று பெயரும் சூட்டப்பட்டுவிட்டது. றோசி என்ற குரல் கேட்டால் போதும் உடனே காலடிக்குள் நிற்கும். கூப்பிட்டவரின் கால்களை வாலினால் தடவும்.

ஒருநாள் இரவு எல்லோரும் உறங்கிவிட்ட வேளை, றோசி சீறும் சத்தம் கேட்டது. எல்லோரும் விழித்துக்கொண்டு வெளியே வந்தார்கள். வாசலில் எதனையோ பார்த்துக் கொண்டிருந்தது றோசி. வாசலில் கருமையான பாம்பொன்று இறந்துபோய்க் கிடந்தது. வியப்பாக இருந்தது எல்லோருக் கும்... இந்தச் செயல் மூலமாக பூனையின்மேலிருந்த அன்பு ஒருபடி மேலேறியது. அவர்களுக்கும் றோசிக்கும் இடையி லான அன்பின் உரசல் அதிகரித்தது.

நாட்கள் ஓடின. றோசியின் வயிறு மெல்ல மெல்ல வித்தியாசமாக மாறியிருந்தது. றோசி தாயாகப்போகிறாள். அவள் இப்போது தூர இடங்களுக்குச் செல்வதேயில்லை. அன்பிற்கு வீட்டுக்காரர், பசிக்குப் போதிய உணவு, படுப் பதற்கு இதமான இடம், வீட்டுக்குள்ளேயே படுத்துக்கொண் டாள். அதற்கு உணவு கொடுப்பதே கீர்த்தனாவின் வேலை யாகி விட்டது. றோசியின் நடவடிக்கைகளை இமைகொட் டாமல் பார்த்துக்கொண்டு இருப்பாள். அது தன்னுடைய முன்னங் கால்களால் மாறி மாறி முகத்தைத்துடைத்து நக்கிக்கொள்வதும் அந்தக்காட்சியை கீர்த்தனா குந்தியி ருந்துகொண்டு ரசிப்பதும் கண்கொள்ளாக் காட்சியாக

இருக்கும். சிலவேளைகளில் தமையனையும் அழைத்து இவற்றைக்காட்டி ரசிப்பாள். கண்ணனும் அப்படித்தான்

சிலவேளைகளில் காலையில் குளித்துவிட்டு கண்ணன், சுவாமி அறைக்குள் நுழைவான். அவன் உள்ளே போவதை றோசி கவனித்துக்கொண்டே இருக்கும். கண்ணன் அதைப்பார்த்துவிட்டுத் தங்கைக்கு சிக்னல் கொடுப்பான். அவளும் மறைந்திருந்து பார்ப்பாள். "அண்ணா! நீ கொஞ்ச நேரம் அறையுக்குள்ளை நில்லடா" என்று கூறிச்சிரிப்பாள்.

றோசி கதவடியையே பார்த்துக்கொண்டிருக்கும். கண்ணன் கும்பிட்டுவிட்டு சிறிது நேரம் அறைக்குள்ளேயே நின்று கொள்வான். றோசி இரண்டு மூன்று தடவை கதவடிக் குப்போவதும் வருவதுமாக இருக்கும்.

கண்ணன் கதவை மெல்லத் திறந்துவிட்டு ஒளிந்து நின்று பார்ப்பான். றோசி மெதுவாகச் சென்று கதவின் இடைவெளியின் ஊடாகக் கண்ணனைத் தேடிப்பார்க்கும் விதமிருக்கிறதே! குழந்தையைக் காணவில்லையென்று தாய் தேடிப்பார்க்கும் தன்மைதான் அதற்குள் இழையோடும். இது ஒவ்வொரு நாளும் நடக்கும் நடவடிக்கை. கீர்த்தனாவும் கண்ணனும் அதனோடு ஒன்றித்திருப்பார்கள். இதனால் றோசி அந்தக் குடும்பத்தில் ஒரு உறுப்பினராகவே மாறிவிட்டது.

ஒருநாள் றோசியின் நிலை முற்றுமுழுதாக வித்தியாசமாக இருந்ததைக் கண்ட கண்ணன் கதிரைகளை எடுத்து மறைவாக அடுக்கி அதனிடையே பழைய துணி களை விரித்து ஒரு இதமான படுக்கையை ஆக்கிவிட்டி ருந்தான். அதுமட்டுமல்ல,"றோசி! இதிலை வந்துபடு" என்று கட்டளையிட்டதும் மெல்ல நுழைந்து அதற்குள் படுத்துக் கொண்ட விதம், தான் ஒரு தாயாகப் போகிறேன் என்பதை வெட்கத்துடன் தெரிவிப்பது போல இருந்தது.

அன்று றோசி உணவெதுவும் உண்ணவில்லை. நேரம் ஓடிக்கொண்டிருந்தது. இருள் கவிந்தவேளை. பூனை

மொழியில் 'அம்மா' என்ற மெல்லிய குரல்கள் காற்றோடு கலந்து மிதந்தன. கண்ணனும் கீர்த்தனாவும் எட்டிப்பார்த்தனர். மூன்று குட்டிகள் தாயின் உடலை உரசி உரசி எதையோ தேடிக்கொண்டிருந்தன. ஒருநாள் கழிந்த நிலையில் - அடுத்த நாள், றோசி வெளியில் போயிருந்த வேளை குட்டிகளின் பரிதாபமான கத்தல் குரல்கள் கேட்டது. றோசியின் அலற லைக்கேட்ட கண்ணனும் கீர்த்தனாவும் ஓடிவந்தனர். "என்ன றோசி வித்தியாசமா அழுகுது?" மோகன் எட்டிப்பார்த்தான். அதே கறுத்த உடல்பருத்த பயங்கரமான கடுவன்பூனை, றோசி படுத்திருந்த இடத்திலிருந்து பாய்ந்து செல்வதைக் கண்டான்.

எந்தப் பூனையைக் கண்டுவிட்டு ஆய்க்கினை தாங்காமல் ஓடிவந்து மோகனின் காலடியில் றோசி படுத்துக் கொள்ளுமோ அதேகறுத்தப்பூனை. றோசி ஓடிவந்தது. மனி தர்களுக்குள் கண்டு கொள்ளமுடியாத தாய்ப்பாசத்தின் தாளாண்மையைக் கண்டு அதிர்ந்து விட்டான் மோகன். றோசியின் துன்ப நிலையை அவனால் தாங்கிக்கொள்ள முடியாமல் போனது. மனிதர்களுக்குள் மட்டுமல்ல மனிதர் களுக்குள் இருக்கும் மிருக குணங்கள் மிருகங்களுக்குள்ளும் எப்படி இருக்கிறது என்பதை எண்ணி எண்ணி வியந்தான்.

குட்டிகளின் அருகே ஓடியோடிப்பார்த்தது றோசி. தனது பிள்ளைகள் உயிரோடு இல்லை என்பதை உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். கத்திக்கொண்டு கதிரை வெளியிடையே தடக்குண்டு ஓடிவந்த றோசி, கண்ணன் கீர்த்தனா இருவருடைய கால்களிலும் விழுந்து புரண்டு கத்தியது. தங்களை இழக்க நேர்ந்தால் அன்னை எப்படிக் கலங்குவாள் என்பதைக் கற்பனை பண்ணியிருப் பார்களோ இருவரும் அழுதேவிட்டனர். றோசி அவர்கள் இருவருக் கும் தனது நிலையைத் தெரிவிப்பதுபோலக் குட்டிகளுக் கருகில் ஓடிப்போனது. மூன்று குட்டிகளையும் வாயினால்

பற்றி ஒன்றாக்கியது. தானும் அருகில் படுத்துக்கொண்டு கீர்த்தனாவையும் கண்ணனையும் இரக்கத்தோடு பார்த்தது. அதன் கண்களிலிருந்து கண்ணீர் ஓடுவது போன்ற பிரமை. எல்லோராலும் கவலைப்பட முடிந்ததே தவிர வேறு என்ன செய்யமுடியும்?

சிறிது நேரம் கழித்து றோசி வெளியே சென்றது. அந்த நேரத்தை அனுசரித்து கண்ணன் மூன்று குட்டிகளை யும் எடுத்து வீட்டுக் காணிக்குள் இருந்த தோடை மரத்திற்கு அருகே குழிவெட்டிப் புதைத்துவிட்டான். திரும்பி வந்த றோசி குட்டிகளைத் தேடியது. அதனுடைய செய்கை, பார்வை, முகபாவம் என்பவை சொற்களில் அடுக்க முடியா தவையாகவே இருந்தது. பூனை, அங்கும் இங்குமாக ஓடியது. குட்டிகளின் போன திசையறிய முகர்ந்து பார்த்துக் கொண்டு தவித்தது. எங்கோகிடந்த மண்வெட்டியைக்கூட முகர்ந்து பார்த்துத் துடித்தது. இவைகளைப் பார்க்கப் பார்க்க மரண வீடொன்றில் கலந்துகொண்டிருப்பதாகவே அவர்கள் உணர்ந்தார்கள்.

குளித்துக்கொண்டிருந்த ரதி அவசரமாக உடுப்பை மாற்றிக்கொண்டு ஓடிவந்தாள். சம்பவத்தை அறிந்ததும் கலங்கினாள். உடல் மெலிந்து நொந்துபோயிருந்த வளால் நிற்க முடியவில்லை. கதிரையில் அமர்ந்திருந்து வேதனைப்பட்டாள். குழந்தைகளை இழந்து போயிருக்கும் ஒரு அன்னையுள்ளத்தைப் பரீட்சை செய்து பார்ப்பதுபோல இருந்தது அவளின் நிலை. றோசி எழுந்துசென்று அவளின் கால்களைச் சுரண்டியது. ரதியின் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொலவென... பெருகி வழிந்தது.

கள்ளப்பூனை ஏற்படுத்திய மாற்றத்தை எண்ணிய படியே மோகன் தென்னைமரத்தோடு சாய்ந்து கொண்டான்.

✖

# வார்ப்பு

"அப்பா நேரமாச்சப்பா."

"வாறன்ரா... ஓடிவாறன், இந்த ஆட்டுக்குக் குழையைக்கட்டிப்போட்டு ஓடியாறன்."

"குஞ்சு, தண்ணிப்போத்தல் எடுத்திட்டியோடா?" கேட்டபடி சைக்கிளை வெளியே எடுத்தான் துரைவடிவு. கிருஷிகாவுக்கு பாடசாலைக்குப் போவதென்றால் நல்ல விருப்பம். முக்கியமான நிகழ்வுகளேதும் வீட்டிலோ, கோயிலிலோ நடைபெறும் சந்தர்ப்பத்தில் கூட லீவு எடுக்கமாட்டாள். அம்மாவும் அப்பாவும் எவ்வளவோ கெஞ்சுவார்கள். முடியவே முடியாது மறுத்துவிடுவாள். ஆனால், அதற்கு எதிர்மாறாக இரண்டு அண்ணன்மார், எப்பொழுது லீவு கிடைக்கும் பாடசாலைக்குப் போகாமல் விடலாம் என்று நினைப்பார்கள்.

"அப்பா றிப்போட்காசு குடுக்கவேணுமப்பா. அம்மா தாறா இல்லை. இண்டைக்கு எப்பிடியும் குடுக்கவேணும். நான் மட்டும்தான் இன்னும் குடுக்க இல்லை."

"ஏனப்பா அந்தக்காசைக் குடுத்துவிடன். உதுகளிலை பிழைவிடக்கூடா தெண்டு நெடுகச் சொல்லுறனான்."

"நானென்ன வேணுமெண்டே குடுக்காமல் விட்டனான்? நேற்று நீங்கள் தந்த ஆயிரம் இன்னும் மாத்த இல்லை."

"சரி அதை இஞ்சைகொண்டாருங்கோ. கோபியின்ரை கடையிலை கேட்டுப் பாப்பம். இல்லாட்டி அதிலை பேக்கரியிலை மாத்தலாம்."

துரைவடிவு மெல்லச் சயிக்கிளை உருட்டினான்.

"அம்மா போயிட்டு வாறன்."

"ஓமோம் போயிட்டு வாம்மா கவனம்."

"ஏறம்மா, கவனம் வெள்ளைச்சட்டை. பாத்து மெதுவாய் ஏறடா..." துரைவடிவின் சைக்கிள் கேற்றைத் தாண்டி றோட்டுக்குத்தாவியது. கண்ணெதிரே பிள்ளையார்கோவில். வழமைபோல் ஒற்றைக்கையால் நெஞ்சைத் தொட்டு வணக்கம் செலுத்திக் கொண்டான். அப்பாவைப் பார்த்து பிள்ளையும் பிள்ளையாரை வணங்கிக் கொண்டது.

சூரியன் உதிக்கும் திசைக்கு எதிர்த்திசை யைப் பார்த்து சைக்கிள் ஓடிக்கொண்டிருந்தது. சிறிது தூரம் போனதும் கிருஷிகாவின் ஒருகை மெல்ல உயர்ந்து தலையிலிருந்த தொப்பியைக் கழற்றுவதுபோல நிழலில் தெரிந்தது. துரைவடிவு அதைக்கண்டு கொண்டான்.

"ஏனம்மா! ஏன் தொப்பியைக் கழட்டுறியள்? வெய்யிலெல்லே..."

"இல்லையப்பா. அதிபர் பின்னாலை வந்தவர் அதுதான்..."

துரைவடிவு அசந்து போய்விட்டான். நாலாம் ஆண்டு படிக்கும் இவளுக்கு அதிபர் மீதிருக்கும் மதிப்பை அளந்து பார்க்கும் கருவி அவனிடத்தில் இல்லாமலே இருந்தது.

கிருஷிகாவின் மதிப்பார்ந்த செயலை எற்றுக்

கொண்டது போல அதிபரின் மோட்டார் சைக்கிள் துரைவடி வையும் கிருஷிகாவையும் தாண்டிச் சென்றபோது ஒரு மெல்லிய ஒலியெழுப்பிச் சென்று கொண்டிருந்தது. தன்னு டைய பிள்ளைகளை நல்லமாதிரி வளர்க்க வேண்டுமென்று சதா நினைத்துக் கொண்டிருக்கும் அவனுக்கு, தனது மகளின் இந்தச் சிறியதொரு செயலானது பெரியதொரு மலையளவு சந்தோசத்தை அளித்தது என்றே சொல்லலாம். சிறிது தூரம் கடந்திருப்பார்கள். "அங்கை பாருங்கோ... லோஜி நடந்து போறா... அவளின்ரை அப்பா ஏன் வரயில்லை எண்டு கேப்பமேயப்பா"

"என்னம்மா லோஜி! ஏன் அப்பா வர இல்லையே?" துரைவடிவு கேட்டான்.

"சைக்கிளுக்குக் காத்துப்போயிட்டுது அதுதான்..." லோஜி தயங்கித்தயங்கிச் சொன்னாள். கிருஷிகா அந்தரப் பட்டாள். "அப்பா... லோஜியையும் ஏத்திக்கொண்டு போவமே பாவமப்பா."

"மூண்டு பேரும்போக எங்கடை சைக்கிளுக்குக் காத்துக்காணாதம்மா..."

"அப்பா... நாங்கள் ரெண்டுபேரும் நடந்து வாறம். நீங்கள் பேக்கரியிலை காசை மாத்திக்கொண்டு வாருங் கோவனப்பா?"

"சரியம்மா கவனமாய் றோட்டைப் பாத்து நடந்து வாருங்கோ" துரைவடிவு சொல்லிக்கொண்டு பேக்கரியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். துரைவடிவு காசை மாத்திக்கொண்டு திரும்பவும் கிருஷிகாவும் லோஜியும் பின்னால் வந்து நின்றனர்.

கிருஷிகா தகப்பனிடம் காசை வாங்கிக்கொண்டு "அப்பா நன்றியப்பா." நாங்கள் நடந்து போவம். நீங்கள் போயிட்டுவாங்கோ" என்றாள்.

துரைவடிவு திரும்பினான். "ச்சா! சின்னப்பிள்ளை

யளா இருக்கையுக்கை நல்ல பழக்கங்களைப் பழகினால் எல்லாப்பிள்ளையளும் நல்லபிள்ளையளா யிருக்குங்கள் தானே... எங்கடை நாடு எவ்வளவு அழகான சந்தோசமான நாடாக இருக்கும். அதைவிட்டிட்டு எல்லாரும் சொல்லள விலை தான். செயலிலை ஒண்டுமேயில்லை. சிந்தனையோடு துரைவடிவு சிறிய வயல் வெளியைத் தாண்டிக்கொண்டி ருந்தான். வீட்டிற்குப்போனதும் முதல்வேலையாக மிகுதிக் காசை ஆனந்தியிடம் கொடுத்துவிட்டு நடந்ததையெல்லாம் அப்படியே முறைப்பாடுபோலச் சொல்லிக்கொண்டிருந்தான்.

ஆனந்திக்கும் மனம் நிறைந்த சந்தோசமாக இருந்தது. நாலாமாண்டு படித்துக்கொண்டிருக்கும் அவளிடம் இவ்வளவு பண்பும் பொறுப்பும் நிறைந்திருப்பதை நினைத்து நினைத்து சிரித்துக்கொண்டாள். துரைவடிவு சாப்பிட்டுவிட்டு சைக்கிளை எடுத்தான்.

"தூரப்போறியளோ?" ஆனந்தி கேட்டாள்.

"வாறன், சந்திரன் வீட்டை ஒருக்கால் போவிட்டு வாறன். சைக்கிள் காத்துப்போனதெண்டு லோஜி சொன்ன தெல்லே. ஒருக்கால் என்னெண்டு பாத்துக்கொண்டுவாறன். இல்லையெண்டால் பின்னேரம் லோஜியையம் கூட்டிக் கொண்டு வரோணுமெல்லே. எங்கடை சிங்காரம் விடுமே? எங்கடை சயிக்கிளுக்கும் காத்துக்கொஞ்சம் காணாது. அடிச்சுக்கொண்டுவந்தா நல்லது" துரைவடிவு சொன்னதைக் கேட்டு ஆனந்தி தலையசைத்தாள். அப்பாவைப் போலை தானே பிள்ளையும் இருக்கும். மனதுக்குள் சிரித்துக் கொண்டாள்.

துரைவடிவு சந்திரனின் வீட்டிற்கு முன்னால் சைக்கிளை விட்டு விட்டு உள்ளே சென்றான். சந்திரன் காய்ச்சல் வந்து படுத்திருந்தான். காலையில் நடந்த சம்பவத்தைச் சொல்லிவிட்டு "நீங்கள் படுங்கோ. பின்னேரம் நான் பிள்ளையைக் கூட்டிக்கொண்டுவாறன். மருந்து

எடுத்தனீங்களோ? இப்ப எல்லாருக்கும் காய்ச்சல்தான் பிரச்சனையாயிருக்கு" என்று சொல்லிவிட்டுத் திரும்பினான்.

இரண்டு மணி...

பாடசாலையிலிருந்து பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு துரைவடிவு புறப்பட்டுக்கொண்டிருந்தான். கிருஷிகா தொடங் கினாள் "அப்பா லோஜியை அவையின்ரை வீட்டை கொண்டுபோய் விட்டுட்டு வருவமே?"

"ஓமோம் கொண்டு போய்விட்டிட்டு வருவம். பாவம்தானே..." லோஜி வீட்டுப்படலையைத்திறந்துகொண்டு உள்ளே சென்றாள். அவள் 'நன்றி' என்று சொல்லாமல் சென்றது கிருஷிகாவிற்குக் கவலையாக இருந்தது. இடை வழியில் கிருஷிகா அப்பாவுக்குக் கதை கொடுத்தாள்.

"லோஜி நல்லபழக்கம் ஏனப்பா?"

"ஏனம்மா?"

"நாங்கள் பாவமெண்டு கூட்டிக் கொண்டுவந்து விட்டனாங்களெல்லோ... ஒரு நன்றிகூடச் சொல்லாமல் போயிற்றா என்னப்பா?"

"அவவை என்னெண்டு பிழை சொல்லுறது? தாய் தகப்பன் எண்டு இருக்கிறவை அதுகளையெல்லாம் சொல்லிப்பழக்க வேணும். அப்பத்தானே அவைக்கும் அது பழக்கத்திலை வரும். நீங்கள் ஒருநாளைக்குச் சொல்லிக் குடுங்கோவன்?" கிருஷிகா சலித்துக்கொண்டது தெரிந்தது. வீட்டுக்கு வந்ததும் முதல்வேலையாக அம்மாவிடம் முறைப்பாடு கொடுத்தாள். அம்மா அப்பாவைப்பார்த்தாள். அப்பா இரண்டு பேரையும் மாறி மாறிப்பார்த்தார்.

"எங்கடை பிள்ளை கெட்டிக்காரப்பிள்ளைதானே" இரண்டுபேரும் கிருஷிகாவைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டனர். முற்றிய அவர்களின் முத்தத்தில் கிருஷிகா ஒடுங்கிப் போயிருந்தாள்.

✖

# பாதை தெரியாத பயணங்கள்

"ராத்திரிக்கோயில் கூட்டம் நடந்ததாம் என்ன விசேஷம் சின்னவன்" மாருதி கேட்டு விட்டு கையில் வைத்திருந்த புத்தகத்தை மெல்லமூடிக்கொண்டு சின்னவனின் பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

"என்ன விசேஷம்? சொல்லக்கூடிய மாதிரி ஒண்டுமில்லை. வளமைபோலைதான்" ஏதாவது விசேஷம் இருக்குமெண்டு எதிர்பார்த்த மாருதிக்கு சிறிது ஏமாற்றமாக இருந்தது. எல்லா ரும் கட்டாயமாக வரவேணும் முக்கியவிட யங்கள் கதைக்க இருக்கு எண்டெல்லாம் சொன்னதுமட்டுமில்லாமல், பழைய கிணற்றடித் தூண், சங்கரப்பிள்ளையண்ணற்றை உடைஞ்சு போன மதில்ச்சுவர் எல்லாத்திலும் நோட்டீஸ் ஒட்டிப்போட்டு விசேஷம் ஒண்டுமில்லை யெண்டால்... சரிபோகட்டும். வளமைபோலை யெண்டால் என்னெண்டு சொல்லனப்பா. நானும் கூட்டத்துக்குவரயில்லை. அதுதான் கேக்கிறன்" மாருதி மெல்லக்கயிறுவிட்டான்.

"புதினமாக ஒண்டுமில்லை. வளமைபோலைதான் கும்பாபிசேகதினம் கொண்டாடுகிறதாம். எல்லாரும் வந்து சிறப்பாகச் செய்யிறதுக்கு ஒத்துழைக்கவேணுமெண்டு சின்னத்தம்பி வாத்தியார் சொன்னவர்." சின்னவன் இப்படிச் சொல்லிவிட்டு தனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை யென்பது போலப் பேசாதிருந்தான்.

பக்கத்து வீட்டிலிருந்து குரல்வந்தது. "தம்பி மாருதி ஒருக்கால் இஞ்சை ஓடிவாங்கோ அப்பு"

"என்னக்கா என்ன சங்கதி?" மாருதிகேட்டுக் கொண்டே சின்னமணியக்கா வீட்டுப்படலையைத் திறந்து கொண்டு ஓடினான். வீட்டு விறாந்தையில் தணிகாசலத்தார் காலை முடக்கிக்கொண்டு முனகியபடி கிடந்தார்.

"என்னக்கா" என்ற மாருதி ஒருக்கணித்த பார் வையில் சின்னமணியக்காவைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

"ஐயோ என்னண்டு தெரியேல்லத்தம்பி. கூப்பிட்டார். நான் ஓடியந்து பிடிக்க முன்னம் விழுந்திட்டார். கண்வெளிறிப் போனதுபோலை கிடக்குது " சின்னமணி யக்கா சொல்லிக் கொண்டிருக்க நாலுசனம் கூடி விட்டிருந்தது

மாருதி தணிகாசலத்திற்குக் கிட்டப்போய் "என்ன செய்யுது?" என்று வினாவினான்.

"வெளியிலை போறதுக்கெண்டு எழும்பினனான் தம்பி. அதுக்கிடையிலை தலைசுத்திக்கொண்டு..." என்று சொன்னபடியே தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு பேசாமலிருந்தார். பாவம் தணிகாசலத்தார். பிரச்சனை யெண்டு ஊரைவிட்டுப்போய் வன்னியிலை இருந்து நல் லாய்க் கஷ்டப்பட்டுப்போனார். செல் அடிச்சதிலை இரண்டு பிள்ளையளைப் பறிகுடுத்திட்டு இப்ப தனிமரம் போல வந்திருக்கு.

மாருதியின் உள்ளம் வேதனைப்பட்டது. ஊரிலை இருந்த பொழுதும் இவர் நல்லாயிருக்க இல்லைத்தான்.

ஏதோ நல்லகாரியங்களைச் செய்து வச்சவரோ எண்டால் அப்பிடியும் இல்லைத்தான். ஆனாலும் இப்போதய நிலைமை மிகவும் கவலையாக இருந்தது.

"தம்பி! நீங்கள்தான் எங்களுக்கு உதவி. வேறை ஆரை நான் உதவி கேக்கிறது. நாங்கள் வந்தது எண்டு அறிஞ்ச உடனை ஓடிவந்து சுகநலம் விசாரிச்சுப்போட்டு நாலுபேரோடை கலந்து கதைச்சு இரண்டாயிரமோ மூவாயிரமோ சேத்து எங்கடை கஸ்டத்துக்கு உதவினதுக்கு நாங்கள் என்ன கைமாறு செய்யப்போறம்." சின்னமணியக்கா மூக்கைச் சீறியபடி விளம்பரம் செய்து கொண்டிருந்தார்.

"அக்கா! உதுகளை விட்டிட்டு இப்ப என்ன செய்யிறதெண்டு சொல்லுங்கோ... உங்களுக்கு என்ன வேணும்.?"

"இவரைத்தூக்கிப் பறிக்கிறதுதான் கொஞ்சம் பிரச் சனையாய்க் கிடக்கு. உங்களட்டை மூண்டு சில்லுச்சயிக்கிள் ஒண்டு கிடக்குதெண்டு கதைச்சவை. அதை ஒருக்கால் தாருங்கோவன் தம்பி..."

"ஒண்டு கிடந்ததுதான். அது எங்கடை சின்னாச்சிமாமி படுக்கையிலை கிடக்கிறா எண்டு சொல்லி எடுத்துக்கொண்டு போனவை... அதையும் ஏதோ உடைச்சுப் போட்டுதுகளாம் எண்டு அறிஞ்சன். பாப்பம் ஒருக்கால் கேட்டுப்பாத்தால் போச்சு. இருந்தால் எடுத்துத்தாறன்."

"ஓம் தம்பி ஒருக்கா எங்களுக்காகக் கேட்டுப் பாருங்கோ. பெரிய உதவியாயிருக்கும்." சின்னமணியக்கா சொன்னதைப் பொறுக்க இயலாமல் "நீ சும்மாயிரம்மா தம்பிக்கு இப்ப தெரியாதே. அவர் எல்லாம் செய்து தருவா ரணை" என்று தணிகாசலத்தார் சொன்னபோது அவரின் பார்வையிழந்த கண்கள் கண்ணீரையும் இழந்து கொண்டி ருந்தன.

அன்று காலைநேரம், ஆடுகளைக்கழற்றி விட்டுவிட்டு

ஆட்டுக்கட்டையைக் துப்பரவு செய்து கொண்டிருந்தான் மாருதி. படலையடியில் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது "அப்பா படலையிக்கை ஆரோ கூப்பிடுகினம். ஆரெண்டு பாருங்கோ அப்பா." மகளின் குரல் கேட்டதும் மாருதி முன்பக்கம் வந்தான்.

"வாருங்கோ என்ன கொப்பியோடை. அட!கோயில் காசுக்குப்போலை..."

"ஓமோம் நீங்கள் அண்டைக்கு கூட்டத்துக்கும் வரயில்லை"

"எனக்கு அண்டைக்கு உடம்பு கொஞ்சம் ஏலாமல்போச்சு தம்பி"

"தம்பி என்னமாதிரி? இந்தமுறை ஏதாவது வித்தியா சமாய்ச் செய்யிறயோசினை இருக்கோ? இல்லாட்டி." மாருதி மெல்ல இழுத்து ஒரு பீடிகை போட்டான்.

"சொல்லுகிற அளவுக்கு ஒண்டுமில்லை, வளமை போலத்தான். ஆனால், போனமுறை தம்பிராசா அண்ணற்றை பெடியள் கொஞ்சம் பிரச்சனை பண்ணினதாலை களபுளா வாய்ப்போச்சு. இந்தமுறை கூடியளவு அப்பிடிவரவிடாமல் பாக்கிறது நல்லதெண்டு சின்னத்தம்பி வாத்தியார் சொல்லி யிருக்கிறார்." சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போல ஒப்புவித்தான் காசுக்கு வந்தவர்களில் ஒருவன்.

"பிரச்சனைவரவிடாமல் பாக்கிறதெண்டது எப்பிடி யெண்டு எனக்கு விளங்கயில்லைத் தம்பி. பிரச்சனையாக ஏதாவது நடந்திருந்தால் பிரச்சனை வரத்தானே செய்யும்? பிரச்சனை வரப்படாதெண்டால் பிரச்சனை எதுவுமே இல்லாமல் இருக்கவேணும். அதிலைதான் எல்லாரும் கவனமாயிருக்கவேணும்"

இன்னும் எதையோ சொல்லவேண்டுமென்று நினைத்தவன் இடையில் நிறுத்திக் கொண்டு,

"இந்தமுறை வீதம் எவ்வளவெண்டு நியமிச்சி

ருக்கினம்" என்ற மாருதி பெயர்ப் பட்டியலைத் திறந்தான். அதிகமாக எல்லோருடைய பெயருக்கும் நேராக ரூபா இரண்டாயிரம் பதிவாகியிருந்தது. தன்னுடையபெயரையும் பதிந்துவிட்டு "நீங்கள் போங்கோ தம்பியிட்டைக் குடுத்தனுப் புறன்" என்றவாறு கேற்றைச் சாத்திக்கொண்டு உள்ளே திரும்பினான்.

தணிகாசலத்தார் வீட்டையும் போகினமோ என்பதைப் பார்ப்பதற்காக மெல்லத் தலையை உயர்த்தி வேலிக்கு மேலாகப் பார்த்தான் மாருதி. சென்றவர்கள் இருவரும் தணிகாசலத்தாரின் வீட்டுப்படலைக்கு முன்னால் நின்று ஏதோ குசுகுசுத்தது புரிந்தது. தயங்கித் தயங்கி படலையைத் தூக்கிவைத்து மெல்ல உள்ளே நுழைந்தனர்.

தணிகாசலத்தின் வீட்டில் எது நடந்தாலும் மாருதி நின்று பார்த்துக்கொள்வான். ஆகையால், அங்கு என்ன நடக்கின்றது என்பதைக் கவனிப்பதில் மாருதிக்கு பெரிய கஷ்டம் இருக்கவில்லை. உள்ளே நுழைந்தவர்களைக் கண்டதும் சின்னமணி அக்கா மெல்ல வெளியே வந்து "ஆரது வாருங்கோ தம்பி" என்று குரல் கொடுத்தார். மூன்று சில்லு வண்டியில் சாய்ந்தபடி இருந்த தணிகாசலத்தார் குரல் வந்த திசையைப் பார்த்துக்கொண்டு பேசாதிருந்தார்.

இருந்து இருந்து தேய்ந்து போன தனது பின்புற சோட்டியைத் தெரியவிடாது திரும்பி நின்றுகொண்டு "ஆர்தம்பி எனக்குத் தெரியஇல்லை. கொப்பியோடை நிக்கிறியள். என்னெண்டு சொல்லுங்கோவன்" என்று சின்னமணியக்கா சொல்லிக்கொண்டு அவர்களை கூசிக்கூசிப் பார்த்தார்.

பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக இடம் பெயர்ந்து போனவர்களுக்கு அநேகம்பேர் புதியவர்க ளாகவே தென்பட்டனர்.

இருந்தாலும் வந்தவர்கள் கோவில் கும்பாபிஷேகத்

தைப்பற்றித் தெரிவித்து பணம் சேகரிக்க வந்ததாகத் தெரிவித்தனர். வீட்டினுள்ளே மெதுவாகப்போன சின்னமணி யக்கா, கையில் ஏதோ கொண்டுவந்து கொடுப்பதும் அவர்கள் அந்தக் கொப்பியில் பெயரைப்பதிந்து கொள்வதும் மாருதிக்கு நன்றாகத் தெரிந்தது. சின்னமணியக்கா எவ்வளவு காசுகொடுத்திருப்பார் என்பதை அறிந்து கொள்ள மாருதி விரும்பினான். வீட்டினுள் நுழைந்தவன் இரண்டாயிரம் ரூபாவோடு வெளியே வந்தான்.

சின்னமணியக்கா வீட்டில் நிற்பவர்கள் படலையைத் தூக்கிவைத்துவிட்டுத் திரும்பவும் "தம்பி...கதை கேளுங்கோ" என்றபடி அவர்களை நோக்கி நடந்தான் மாருதி.

"கையோடை என்ரை காசைக்கொண்டு போங்கோ" என்று கூறியவன் தனது கையொப்பத்திற்கு கீழே எவ்வளவு காசுபோடப்பட்டிருக்கிறது என்பதை இலகுவாகக் கண்டு கொண்டான். ஐநூறு என்று எழுதியிருந்ததைக் கண்டதும் அவனுக்குத் தலைசுற்றுவது போல இருந்தது.

ஒருமனிதனை மதிக்கத்தெரியாத நாங்கள், மனித இனத்தில் நேசிக்க வேண்டியவர்களை நேசிக்கத் தெரியாத நாங்கள், இறைவனுக்கு மட்டும் அள்ளி இறைப்பதற்கு முண்டியடித்துக் கொள்ளுகின்றோம் என்பதை நினைக்க நினைக்க மாருதிக்கு வெறுப்பாக இருந்தது. ஊருக்குத் திரும்பிய அந்த வயோதிபக் குடும்பம் சில நாட்கள் பட்ட துன்பம் யாருக்குத் தெரியும். கஞ்சியும் கூழுமாக அவர்கள் அனுபவித்த அந்த நாட்களை அவர்களும் மறந்து போனார் களே. மாருதியின் உள்ளம் வெம்பி வெடித்தது.

"தம்பி! நீங்கள் அவர்களிடம் போய் கோயிலுக் கென்று காசு சேகரித்தது சரி என்று படுகிறதா?"

"அவர்கள் யார்? அவர்களின் தற்போதைய நிலை என்ன? அவர்களுக்கு ஏதாவது வருமானமுண்டா? இப்படி ஏதாவது ஒரு கேள்விக்கு விடைகாண நீங்கள் யாராவது

முயன்றதுண்டா?"

"இவர்களிடம் கட்டாயமாக கும்பாபிஷேகத்திற்குப் பணம் வாங்க வேண்டுமா? சரி! அப்படி வாங்குவது நியாய மாகப்பட்டால், இதுவரை அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய நினைத்தீர்களா? இல்லையே! ஒரு நேரத் தேநீருக் காவது அவர்களுக்கு உதவி செய்ய வேணுமென்ற எண்ணம் உங்கள் மனதில் எழவில்லையே..."

"ஆண்டவனை அழகு செய்து பார்க்க ஆசைப்படும் உங்களுக்கு, இடம் பெயர்ந்து ஓடிப்போய் உறவுகளைப் பறிகொடுத்துவிட்டு அநாதைகளாக வந்திருக்கும் அந்த ஏதிலிகளைப்பார்த்து ஏதாவது உதவி செய்யுங்கள் என்று அந்த ஆண்டவன் கூட உங்களுக்கு ஆணை பிறப்பிக் கவில்லையா?" இப்படியே ஆயிரம் கேள்விகளை அவர்க ளிடம் கேட்கவேண்டும் போல இருந்தது மாருதிக்கு. ஆனால் அவன் கேட்கவில்லை. இப்படிக் கேள்விகளைக் கேட்டுக் கேட்டுத்தான் யாருமே அவன் சொல்வதைக் கேட்காதவர் களாகப் போய் விட்டார்கள்.

"அக்கா! இவ்வளவு காசைக்கொடுத்திருக்கிறீர்களே! இது உங்களுக்கே நியாயமாகப் படுகிறதா? நேற்றுவரை நீங்கள் தேநீர் குடிப்பதற்கு சீனிவாங்க முடியாமல் இருந்தீர்களே! அதை நினைத்தீர்களா? பார்வையை இழந்து படுத்த படுக்கையாக இருக்கும் உங்கள் புருசனுக்கு, சோற்றுடன் மிளகாய், வெங்காயம் கடிக்கக் கொடுத்தது ஞாபகமிருக்கிறதா? "இப்படி எல்லாம் சின்னமணி அக்கா வைக் கேட்டுவிடலாமா என்று மாருதி எண்ணிக்கொண்டாலும் கேட்பதற்கு முடியாமலிருந்தது.

"எங்களுக்கு உதவி செய்தது இதுக்காகத்தானோ? நாங்கள் சுதந்திரமாக எதையும் செய்யக்கூடாதோ?" என்று சின்னமணியக்கா ஒருவேளை கேட்டு விட்டால்... அவவின் மனதை வேதனைப்படுத்தக்கூடாது என்று தனக்குள்

சமாதானப்படுத்திக்கொண்டான் மாருதி.

நொந்து போயிருக்கும் அவர்களின் மனத்தை மேலும் நோகவிடாது, எவ்வளவு தூரம் பேணமுடியுமோ அவ்வளவு தூரத்திற்கு பேணிக்கொள்ள வேண்டும் என்பதே அவனின் விருப்பமாக இருந்தது.

சக்திகோவிலில் ஒரே அமளிதுமளியாக இருந்தது. வானத்தையே பிளந்து விடுவது போல ஒலிபெருக்கி கதறிக்கொண்டிருந்தது.

"அம்பாள் அடியார்களே... நாளை அம்பாளின் அபிஷேக தினம் கொண்டாடப்படவுள்ளது. காலை ஆறு மணிக்கு அபிஷேகத்திற்குரிய ஆயத்தங்கள் நடைபெறும். அபிஷேகத்திற்கான பால், இளநீர், மலர்மாலைகள், பழவகைகள் என்பவற்றைக் கொடுக்கவிரும்புவோர் ஆலயக் குருக்களுடன் தொடர்பு கொள்ளவும். எல்லோரும் உயர்வு தாழ்வின்றி ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி நலம் பெற்றுவாழ எல்லாம் வல்ல எம்பெருமாட்டி நல்லருள் புரிவாள். எல்லோரும் அவள் அருளைப்பெற ஆலயத்திற்கு வருக. அருள்பெற்றுயர்க!"

கதறிக்கொண்டிருந்த ஒலி பெருக்கியின் வாய்பூட் டப்பட்டு சிறிது அமைதி நிலவியதன்பின் இந்தஅறிவித்தல் நீண்டு வளர்ந்து மெல்ல மெல்ல ஓய்ந்து கொண்டிருந்தது.

இது எல்லா ஆலயங்களிலும் வழமையாக நடைபெறும் சங்கதிதான். எந்தவிதத்திலும் இதுவித்தியாச மானதல்ல. இப்படி ஆரவாரமாக ஒலிபரப்புவதும் அடுத்த நாள் நிகழ்வின்போது நாலைந்து குடும்பங்களைச் சேர்ந்த பத்தோ பதினைந்து பேரோ ஓடியாடித்திரிவதும்தான் இயல்பாக இருக்கும். மாருதிக்கும் இப்படித்தான் இது ஒன்றும் வித்தியாசமானதல்ல. ஆனால் மாருதிமட்டும் இந்தமாதிரி விடயங்களில் வித்தியாசமானவனாக நடந்து கொள்வதுண்டு. ஆலய நிகழ்வுகளை அவன் வெறுப்ப

வனல்ல. ஆனால், அங்கே குழந்தைப்பிள்ளைத்தனமான காரியங்கள் நடப்பதை வெறுப்பவன்

தனியொரு மனிதனின் துன்பங்கள், துயரங்கள் ஓரள வேனும் தீர்த்துவைக்கப்பட வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறையுள்ளவன். அருகிலிருந்து அவலப்பட்டுக்கொண்டி ருக்கும் அபலைகளுக்கு உதவாதவர்கள், உலகத்தையே படைத்து அருள் புரிந்து நிர்வகித்துக் கொண்டிருக்கும் ஆண்டவனுக்கு என்ன செய்யப் போகிறார்கள் என்ற சித்தாந்தத்தில் இறுக்கமான கொள்கையுடையவன்.

அப்படியான இயல்புகள்தான் குழந்தைப்பிள்ளைத் தனமான செயல்கள் செய்பவர்களோடு அவனை ஒத்துப் போக விடுவதில்லை. அந்தநிலையில் யாருடைய உதவி யுமின்றி அல்லற்படும் தணிகாசலம், சின்னமணி குடும் பத்தினருக்குச் செய்யும் உதவிகள்தான் ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டுகளென அவன் நம்பியிருப்பதில் என்ன தவறு இருக்க முடியும்?

“தம்பி! இண்டைக்கு இவற்றை நிலைமை கொஞ்சம் பிரச்சனையாகக்கிடக்குது. என்னண்டு சொல்லத்தெரிய யில்லை.” சின்னமணியக்கா மாருதிக்கு முறைப்பாடு கொடுத்துக் கொண்டிருந்தார். தணிகாசலத்தார் இரண்டு கால்களையும் மடக்கிவைத்துக்கொண்டு குழந்தைப்பிள்ளை யைப்போலக் கிடந்தார்.

“நேற்று ஆறேழுதரம் வயிற்றால போவிட்டுது. தம்பி. வித்தியாசமாக ஒண்டும் குடிக்க இல்லை. உப்புக்கஞ் சிதான்” சின்னமணியக்காவின் குரல் தளதளத்தது.

பக்கத்து வீட்டுப் பவளமக்காவும் நடக்கிறவிடயங் களைக் கவனித்தபடி வெற்றிலையை உரலில் இடித்துக் கொண்டிருந்தார். சின்னமணியக்கா அலுவலாக வீட்டினுள்ளே செல்வதை அனுசரித்தபடி “தம்பி... இண்டைக்கு இவற்ற கோலம் கொஞ்சம் வித்தியாசமாக்கிடக்குது.”

"சொல்லுறனெண்டு குறை நினைக்காதையுங்கோ தம்பி... ராமுழுக்க ஒரேநாய் குரைச்சபடி" என்று நினைத்ததை ஒப்புவித்தார் பவளமக்கா. மாருதியின் காதுகள் மெதுவாக இவற்றை உள்ளீர்த்ததே தவிர அதை ஏற்றுக்கொண்டதாகக் காட்டிக்கொள்ளவில்லை.

வயதில் கூடியவர்கள் போதாக் குறைக்கு அதை யிதைச் சொல்லுங்கள். இதுமாதிரி விடயங்களை இவன் அதிகமாக ஏற்றுக்கொள்வதில்லை

தணிகாசலத்தாருக்குக் கடுமையான வருத்தம். அங்கு போகும்போதெல்லாம் அவரை விட சின்னமணியக்கா நலமாக இருக்கவேண்டும் என்பதே அவனுடைய பிரார்த் தனையாக இருந்தது. ஏனெனில் இரண்டு நோயாளிகளைப் பராமரிக்க வேண்டிவந்துவிடுமே என்ற பயம் அவனை ஆட்கொண்டிருந்தது.

துன்பத்தின் மத்தியில் அவர்களின் வாழ்க்கைச் சக்கரம் உருண்டாலும் அவர்களுக்குள் வித்தியாசமான ஏதோவொன்று இன்பத்தின் நிழலைப் பதித்து சென்று கொண்டிருந்தது. மாருதி மாலை வேளைகளில் அவர் களுக்கு பேச்சுச் சுதந்திரத்திற்காகச் செல்வான். அவ்வேளை களில் சின்னமணியக்கா தனது கணவனிடம் இருந்த பாட்டுத்திறமையை வெளிப்படுத்த முயற்சி செய்வார். அன்றும் "இஞ்சாருங்கோ அந்தவீட்டை நோக்கி ஓடிவந்த என்னையே எண்ட பாட்டை ஒருக்கால் பாடுங்கோவன்" என்று தொடங்கினார்.

தணிகாசலத்தார் தலையைத் தொங்கப்போட்டபடி இருந்தார். "என்ன தலையக்குனிஞ்சு கொண்டிருக்கிறியள் பாடுங்கோவன்" மாருதி கவனிக்கும்படி சின்னமணி அக்காதூண்டிக்கொண்டிருந்தார். தணிகாசலத்தாருக்கு தலையை நிமிர்த்த வேண்டும் போலிருந்தது. ஆனால், முடியவில்லை. மாருதி மெல்ல எழுந்து "நான் ஒருக்கால்

கோயிலுக்குப் போகவேணும். போயிட்டு வாறனக்கா" என்றபடி வெளியே வந்தான். "ஓமோம் போயிட்டு வாங்கோ தம்பி" என்று வழமையாகக் கூறும் தணிகாசலத்தார் தலையைக் குனிந்து கொண்டிருந்தது மாருதியின் மனதுக்கு ஒருமாதிரியாக இருந்தது.

இருளின் துரத்தலால் பகல் ஓடி ஒளிந்து கொண்டிருந்தது. ஒலிபெருக்கியின் ஆவேச அலைகளுக்குள்ளும் ஆலயமணியின் சுருதி குறைந்து ஒலிப்பது போல ஒலித்தது. பூசைக்கு ஆயத்தம் என்பது எல்லோருக்கும் தெரிந்துவிட்டது.

பக்கத்து வீட்டில் என்ன நடக்கிறது என்று அறிந்து கொள்ளாதவர்கள், தங்களுக்கு அருகில் யார் குடியிருக்கின்றார்கள் என்பதை அறிந்துகொள்ளாதவர்கள், தான் வாழ்ந்தால் மட்டும் போதும். அதுதான் வாழ்க்கை என்று நினைத்துக்கொண்டிருப்பவர்கள், மற்றவர்களுக்கு சிறியளவு உதவியேனும் புரியலாமா என கிஞ்சித்தும் எண்ணிக் கொள்ளாதவர்கள் இப்படிப்பல விதமான ரகத்தைச் சேர்ந்தவர்கள் கோவில் சுற்றுப் பிரகாரமெங்கும் ஓடித்திரிந்தனர்.

அரசமரத்தின் கீழ் மாருதி தனிமையில் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவண்ணம் இருந்தான். கோவிலில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வுகளையும் அவற்றின் பரிமாணங்களையும் அவனுடைய மனம் கூறு கூறாக்கி நிறுவைசெய்து கொண்டிருந்தது. அவனுள் பலவிதமான கேள்விகள் எழுந்து விடையில்லாமலேயே விடைபெற்றுக்கொண்டிருந்தது.

கோவில்கள் எதற்காக? கோவில்கள் மனிதரை எப்படிமாற் றுகின்றன? கோவில்களால் மனிதன் மாறுகின்றானா? இல்லையா? மாறுகிறானென்றால் எப்படி மாறுகின்றான் நல்லவனாகவா? இல்லையென்றால்...

ஆண்டவனை வழிபடவந்த இடத்தில் இப்படியான கேள்விள் ஏன் வட்டமிட்டன? மனிதனுக்குத் தேவையான அறிவையும் நல்ல பண்புகளையும் கல்விக் கூடங்கள்

எப்படிக்கொடுக்கின்றனவோ, அதேபோலதான் ஆத்மீக பலத்தையும் அதற்கூடான பண்புகளையும் அமைதியான விட்டுக்கொடுப் பனவால் ஏற்படக்கூடிய சந்தோஷத்தையும் ஆலயங்கள் அள்ளி வழங்குகின்றன.

ஆனால், அதற்கு எதிர்மாறாக போட்டி பொறா மைகளும் பழிதீர்ப்புப்படலங்களும் ஏமாற்று வித்தைகளும் தானே ஆலயரீதியாக நடைபெறுகின்றன. ஆகவே, மாருதி யின் மனதில் இந்த எண்ணங்கள் கேள்விகள் வடிவில் சிறகடித்ததில் தவறென்று சொல்ல ஏதும் இல்லையே?

ஊரில் உள்ளவர்களில் மூன்றில் ஒருபகுதியானவர் கள்தான் இந்தக்கோவிலுக்கு வருவார்கள்.அதிலும் நோய் நொடி, தூரதேசப்பிரயாணம் அப்படி இப்படியென்று சிலர் இல்லையென்றால் சுவாமியைக் காவிச்செல்வதற்குரிய அளவில்தான் பக்தர் குழாம் இருக்கும்.

படித்து முன்னேறுவதற்கு எல்லோரும் சேரத் தேவையில்லை. தனித்தும் படிக்கலாம் உயரலாம். ஆனால், கோவில் என்பதன் உயர்விற்கும் அதன் செயற்பாடுகளிற்கும் எல்லோரினதும் ஒன்றுபட்டதன்மை தேவை. அது இல்லை யென்றான போது கோவில் என்பது எதற்கு என்பதுதான் மாருதியின் மனத்தில் எழும் கேள்விகளுக்கு முக்கியமான காரணம்.

விசேஷமாக வரவழைக்கப்பட்ட குருக்கள் குழாமின் பிரசன்னத்துடன் கிரியைகள் நடைபெற்று முடிந்திருந்தது. இப்போது சுவாமி வீதியுலாவரும் நிகழ்வு. அதுவும் இறுதி நேரத்தை நெருங்குகிறது. அம்பாள் உலா முடிந்து வாசலுக்கு வந்து இளைப்பாறுகிறாள். அம்பாளை ஊஞ்ச லில் வைத்து ஆட்டுகிறார்கள்.

சின்னத்தம்பி வாத்தியாரின் தமிழ் அறிவின் பெருக்கினால் உருவான ஊஞ்சல் பாவை அதற்கான ராக மெட்டுக்களைப் புரிந்து கொள்ளாமல் மூன்று நாலு பேர்

பாடித் தீர்த்துக்கொண்டிருந்தனர். இறுதியாக அம்பாள் இருப்பிடத்துக்குச் சென்றதும் ஐயர் வாசலில் வந்து நிற்க, அங்குமிங்குமாக ஓடித்திரிந்த ஒருவர் "அரிச்சனை செய்யிற ஆக்கள் வாருங்கோ" என்று விளம்பரம்செய்து வைத்தார். ஒலிபெருக்கிக்காரன் ஒலிவாங்கி ஒன்றை, கொண்டுவந்து ஐயரின் முன்னே வைத்து இரண்டு முறை தலையில் குட்டுவதுபோல குட்டிப்பார்த்து அங்கீகாரம் பண்ணினான்.

ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள் என ஒவ்வொருவராக நகர்ந்து அர்ச்சனை பண்ணிக் கொண்டார்கள். சின்னத்தம்பி வாத்தியார் மெல்லமெல்ல நடைபழகுவது போல அடியெடுத்து வைத்துக்கொண்டு ஐயரின் முன்னே போய் நின்றார். ஐயரும் சிறிய புன்மு றுவலுடன் வாத்தியாரைப் பார்த்தார். நூறு ரூபாய் தாள் கைமாறியவுடன், வாத்தியார் வைத்திருந்த பட்டியல் ஐயரின் கைக்குத்தாவியது. ஐயர் பெயர்களை வாசிக்கத் தொடங் கினார். விவாகப்பதிவாளர் வீரசிங்கம், பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர், அவரின் மனைவி, பிரபல்ய பெண்கள் பாடசாலை அதிபர், மின்பொறியியலாளர், வங்கி முகாமையாளர், சமையலுக்குப் பாத்திரம் தந்தவர் பெயர் என்றவாறு பட்டியல் நீண்டுகொண்டுபோனது.

மாருதி இப்போது கோவிலில் நிற்பது போல இல்லை. புதுமையான உலகமொன்றுக்குள் புகுந்து, அங்குள்ள எல்லாவற்றையும் தூக்கி அடித்து உடைத்து எரியும் நெருப்பில் போடுவதற்கு தயாராக இருப்பதுபோல இருந்தான். "பூமிபூலோகம் தாங்காது " என்று சொல் வார்களே அதுபோல இருந்தது நிலைமை.

எல்லாவசதி வாய்ப்புகளுமுள்ள வல்லவர்களுக்கு மேலும் வல்லமை சேர்க்க அர்ச்சனை செய்பவர்கள் மத்தியில் எல்லாமிழந்து ஏதிலிகளாகி அடிப்படலையில் வாழாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு அபலைக் குடும்

பத்தின் பெயரில் அர்ச்சனை செய்து அம்பாளிடம் முறையீடு செய்வதற்கு ஒருவருமே இல்லையா?

காற்றின் அசைவின்றி ஆடாதிருக்கும் பெருமர மொன்றைப்போல மாருதி அசையாது நின்றான். பாதை தெரியாது பயணம் நடைபெறுவதை எண்ணி எண்ணிப் பெருமூச்செறிந்தான். அர்ச்சனை ஆரவாரங்கள் அடங்கிப் போனபோது...

"ஐயோ... போயிட்டிங்களே? என்னை விட்டிட்டுப் போயிட்டிங்களே?" என்ற அழுகைச் சத்தம், சின்னமணியக்கா வீட்டிலிருந்து தனிக்குரலாகக் கருகிக்கொண்டிருந்தது.

(2014ம் ஆண்டு நடைபெற்ற தேசிய கலை இலக்கியப் போட்டியில் பிரதேச மட்டத்தில் 1ம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் 1ம் இடத்தையும் தேசிய மட்டத்தில் 1ம் இடத்தையும் வென்ற சிறுகதை)

# வேள்விப்படையல்

அம்மன் கோவில் மணி மூன்றாவது முறையாக அடித்து ஓய்ந்தது. மணியின் ஓசை யைவிட அதன் உராய்வு ஓசை ஓய்ந்து போவ தற்குக் கொஞ்சநேரமெடுக்கும்.

நாலு ஐந்து பெரியவர்கள் சுவரோடு சாய்ந்தவண்ணம் ஏதோ யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

கோவில் பரிபாலனசபைத்தலைவர் கந்தப்பு அப்பொழுதுதான் வந்து அமர்ந்து கொள்கிறார். மணியகாரனான மேத்திரி பூபாலு ஓடியாடிக் கூட்டத்திற்கான ஒழுங்குகளைச் செய்வதில் ஈடுபட்டுக்கொண் டிருக்கிறார்.

"என்ன மூண்டாம் மணிக்கும் ஆக்கள் வந்தபாட்டைக்காண இல்லை" தலைவர் மெல்ல ஆரம்பித்தார்.

அம்மன் கோவில் கூட்டம் வழமையாக இப்படித்தான். ஏழுமணிக்கென்றால் எட்டு மணியாகும். பதினொன்று பன்னிரண்டாகும் கூட்டம் முடிய. சிலவேளை சண்டையிலும்

முடியும். இதனால் சிலவேளைகளில் கூட்டத்திற்கு வருபவர்களைவிட சண்டை பார்க்க வருபவர்கள் தொகை அதிகமாக இருக்கும்.

இன்றும் ஏதோ பிரகண்டம் இருப்பது போலவே நிலமை காட்டிக்கொடுத்தது.

மணற்தெருவில் இளைஞர் படையொன்று மூசிக் கொண்டு வருவது தெரிந்தது.

"அண்ணயவை பேந்து கூட்டத்திலை வந்து நிண்டு கொண்டு குழப்பிறதில்லை. தீபன் அண்ணைதான் தலைவர். செயலாளர் சிவரூபன், பொருளாளர் சிவராசா மாஸ்டர். மற்றப்பதவியளிலை ஆரும் இருக்கலாம். இதில ஒருத்தருக் கும் மறுப்பில்லைத்தானே" கந்தசாமி அவசரமாகவும் ஆவேசமாகவும் கத்திக்கொண்டு முன்னே நடந்தான்.

"கெதியிலை வாங்கோடா. நேரத்துக்கு வரஇல்லை எண்டு கனபேர் கதைசொல்லக் காத்திருப்பினம். எட்டி வாருங்கோ" கந்தசாமியே தொடர்ந்தான். மணற்தெருவில் நடந்தால் கணுக்கால் மணலுக்குள் புதையும். தாண்டித் தாண்டி ஓடியோடி எல்லோரும் கோவிலடிக்கு வந்து விட்டனர்.

பெரியவர்களின் அமைதி பயங்கரமாக இருந்தது. இன்று நிர்வாகத்தெரிவு நடைபெற இருந்ததே அதற்கான காரணம். பெரியவர்களும் பொறுப்பான பதவிகளில் இருந்தால்தான் கோவில் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறும் என்ற மாதிரியான எண்ணத்தோடு அவர்கள் இருந்தனர்.

கூட்டம் ஆரம்பமானது. சிவநாதனின் தேவாரத்தோடு கூட்டத்தை ஆரம்பிப்போம் என்று தலைவர் கூற, சிவநாத னின் வெண்கலக்குரலில் தேவாரம் பாடி முடிந்தது. அடுத்து கோவில் நிர்வாகம் எப்படி செயற்படவேண்டும் என்பது பற்றியும் எதிர்காலத்தில் ஆலயத்தின் நடைமுறைகள் எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றியும் தலைவர் ஒரு குட்டிப்

பிரசங்கம் நடாத்தி முடித்தார்.

செயலாளரின் வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கையும் பொருளாளரின் கணக்கறிக்கையும் வாசிக்கப்பட்டு சிறுசிறு முரண்பாடுகள் களையப்பட்ட நிலையில் அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அடுத்து நிர்வாகத் தெரிவு நடைபெற இருப்பதாகத் தலைவர் தெரிவிக்க சபையில் ஆரவாரம் தெரிந்தது.

பொறுப்பு வாய்ந்த தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யும்படி தற்காலிக தலைவர் தெரிவிக்க, கந்தசாமி திடீரென எழுந்து திரு. தீபன் அவர்களைத் தலைவராகத் தெரிவு செய்கிறேன் என்று பிரேரித்தார். சபையில் கலக்கம் தெரிந்தது.. பழைய தலைவரின் முகம் மழைமேகம் போல இருண்டு போனது. தானே தலைவராக இருப்பேன் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது உண்மைதானே.

அடுத்து செயலாளராக சிவரூபன் தெரிவு செய்யப் பட்டார். பொருளாளராக சிவராசா மாஸ்டர் தெரிவு செய்யப் பட்டு நிர்வாகத்தின் தலைப்பகுதி இளைஞர் அணிக்குள் அகப்பட்டுக் கொண்டது.

மூன்று நாட்கள் கழித்து நிர்வாக சபை கூடி, புதிய நிர்வாகம் பொறுப்புகளைக் கையேற்பது எனத் தீர்மானிக் கப்பட்டது. பெரியவர்கள் எல்லோரினது முகத்திலும் ஏமாற்றம் தெரிந்தது. அனுபவமில்லாதவர்கள் என்னென்ன செய்வார்களோ என்ற எண்ணம் எழுவது இயல்புதானே? சனிக்கிழமை நிர்வாக சபைக்கூட்டம் நடாத்துவதென அறிவிக் கப்பட்டு அன்றைய கூட்டம் நிறைவு பெற்றது,

“இந்தப் பொடியள் என்ன செய்யப்போறாங்களோ தெரியஇல்லை. கோயிலுக்கே ஒழுங்காக வராதவங்கள் இந்தப் பொறுப்புகளை என்னெண்டு கொண்டு நடத்தப் போறாங்களோ... ”

“எல்லாம் கொஞ்ச நாளையிலை தெரியும். முதுகு

உளைஞ்ச மாடு உப்புக்களத்துக்குப் போனமாதிரித்தான் எல்லாரும் திட்டம் போட்டுக்கொண்டு வந்திருக்கினம். பாப்பம் பாப்பம்."

"கோயிலெண்டால் விளையாட்டு வேலையே. சும்மா இவை நினைச்சமாதிரிச் செய்யிறதுக்கு"

பெரிசுகளின் எண்ணக்கோலங்கள் வார்த்தைகளாகிச் சுழன்று சுழன்று அடங்கிப்போனது. சனிக்கிழமை மாலை ஐந்துமணிக்கு நிர்வாக சபைக்கூட்டம் ஆரம்பமாகியது. புதிய தலைவரின் தலைமை உரை நீண்டுகொண்டு போனது. முப்பது வயதுத் தீபன் இப்படிப்பேசுவானா என்று எல்லாரும் வாயில் கை வைக்கும் அளவுக்கு தலைவரின் பேச்சு இருந்தது.

"நாங்கள் ஆணை பிறப்பிக்கவில்லை. அன்பாகக் கேட்கிறோம். நாங்கள் இளைஞர்கள் என்பதால் எங்களை உதாசீனப்படுத்தாதீர்கள். எங்களோடு இணைந்து நில்லுங்கள். உங்கள் வழியில் நாங்கள் செல்லவேண்டும் என்று விரும்பினால், எங்களுக்கு வழிகாட்டுங்கள். எங்களைக் குற்றவாளிகளாக ஆக்காமல் இருப்பது உங்களுடைய பொறுப்பு."

சபை ஒருகணம் திகைப்பில் ஆழ்ந்துபோய் இருந்தது.

"அன்பானவர்களே... எங்களது அடுத்த நடவடிக்கைக்கு நாங்கள் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே பெரியவர்கள் அதுபற்றி ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் எங்களுக்கு அறியத்தரவேண்டும்" என்று எல்லோரையும் தனது அன்பு வலைக்குள் சிக்கப்பண்ணினான் தீபன்.

சாத்திரி அருணாசலம் எல்லாவற்றிலும் குருகுருத்தவர். அவருக்குச் சரிபிழை என்பதெல்லாவற்றையும் விட, தான் சொல்வதை மற்றவர்கள் கேட்டு நடக்கவேண்டுமென்பதில் மிகவும் அக்கறை கொண்டவர்.

"தம்பி! அடுத்ததாக கோயில் வேள்வி வருகுது.

பழைய மாதிரி எந்தப்பிழையுமில்லாமல் செய்யவேணும். இதைத்தான் என்னாலை சொல்லமுடியும். மற்றவையும் தெரிஞ்சதைச் சொல்லுவினந்தானே" அருணாசலத்தார் தான் சொன்னதை எல்லாரும் ஏற்றுக்கொண்டதாக எண்ணிக் கொண்டு அமைதியானார்.

சிறிது நேரம் எவரும் பேசுவதாகத் தெரியவில்லை. கோவிலில் என்னென்ன மாற்றங்களைக் கொண்டு வரவேண்டுமென்பதில் பல திட்டங்களை தீபன் ஏற்கனவே தீட்டி வைத்திருந்தான். அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து விட்டான்.

"அன்பானவர்களே! அருணாசலம் அண்ணர் வேள்வி நடத்துவது பற்றிச் சொன்னார். அவருக்கு எனது நன்றி. ஆனால், எல்லோரும் ஒன்றைக் கவனிக்கவேண்டும். நாங்கள் நிர்வாகத்தில் பங்காளிகளாக இல்லாதபோது, இந்த ஆலயத்தில் நடைபெறுகின்ற பிழைபாடுகளை மற்றவர்கள் சுட்டிக்காட்டுகின்றவேளை நாங்களும் வேதனைப்பட்ட துண்டு. அந்தப் பிழைகளை நாங்களும் அறிந்தே இருந்தோம்.

நாங்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். ஆலயம் என்பது மக்களை நல்வழிப்படுத்துகின்ற ஒரு பாடசாலை போன்றது. அங்கே எல்லோரும் ஒழுங்கினைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும்.. தெரிந்து கொண்ட பின்னர் அதன்படி நடக்கவும் முயற்சி செய்யவேண்டும். அப்பொழுதுதான் எமது வாழ்வியலும் பெறுமதி உடைய தாக விளங்கும். அதை விடுத்து எல்லோரும் தமது விருப்பப் படி நடக்கவிரும்பினால் இது கோவிலாக இருக்க வாய்ப் பில்லாமல் போய்விடும்.

பழைய மாதிரி வேள்வி செய்யப்படவேண்டுமென்று அண்ணர் கூறினார். ஆனால் அந்த விடயம் சிறிது ஆலோசிக் கப்பட வேண்டியதாக உள்ளது. அதில் சில மாற்றங்களை, திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் விரும்பு

கின்றோம். அதை இங்கே நான் கூறிவைக்கின்றேன்." என்று கூறித் தனது திட்டத்தை வெளிப்படுத்தினான்.

முதலில் வேள்வி செய்யப்படுகின்ற காலம் கருத்தில் எடுக்கப்படவேண்டும். அதிகமாக எல்லாக் கோவில்களிலும் வேள்வி, பொங்கல் எல்லாம் நடந்து முடிந்த பின்னரே எமது கோவிலில் வேள்வி நடைபெறுகின்றது. இந்த வேளை பழவகைகள் மிகவும் உச்சமான விலையுள்ளதாக இருக்கும். நாங்கள் வேள்வி செய்வதாக இருந்தால் இதைக்கருத்தில் எடுக்க வேண்டும். பொருளாதாரக் கஷ்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது மக்கள், அவர்கள் தேடிச் சம்பாதித்த பணத்தை மிகமிக அவதானமாகச் செலவு செய்யவே விரும்புவர்.

ஆனால் நாங்கள் அவர்கள் தரும் பணத்தைக் கூடுதலாகக் கொடுத்து பழவகைகளையோ அல்லது வேறு பொருட்களையோ கொள்வனவு செய்வதென்பது நியாயமில்லாத ஒரு செயலாகும். ஆகையால் வேள்வியை முற்கூட்டிச் செய்யவேண்டிய தேவை எமக்குள்ளது. இதனை முதலாவது பிரேரணையாக முன்வைக்கின்றேன். இது பற்றிய சபையோரின் கருத்துக்களை எதிர்பார்க்கின்றேன். நன்றி" என்று தலைவர் கூறிமுடித்தார். சபை சிலநிமிடங்கள் அதை ஆலோசித்திருக்க வேண்டும். அமைதியாக இருந்து இறுதியில் தலைவர் கொண்டுவந்த பிரேரணையை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தது.

"இரண்டாவதாக வேள்வியை பழைய மாதிரிச் செய்வதென்பது உடன்பாடில்லாத ஒன்றாக உள்ளது. ஏனெனில் வேள்வியின்போது செய்யப்படும் காரியங்கள் ஒரு ஆலயத்தில் செய்யப்படக்கூடாத காரியங்களாகவே கருத இடமுண்டு. உதாரணமாக "மிருக வதை" என்பது எல்லோராலும் தடுக்கப்படவேண்டிய ஒன்று. ஆகையால் ஆடுகளைப் பலிகொடுத்து அவற்றின் இறைச்சியைச்

சமைத்து இறைவனுக்குப் படையல் செய்வது என்பது சகித்துக்கொள்ள முடியாதது. அத்துடன் மச்சப்படையல் என்றவாறு கருவாடு, மீன், முட்டை என்பனவும் படையலில் வைத்து அதனுடன் மதுபான வகைகளும் வைக்கப் படுகின்றது.

உண்மையில் ஒரு மதம் தன்னை நம்பிவாழுகின்ற மக்களுக்குச் செய்து காட்டக்கூடிய செயலாக இது இருக்குமா? என்பது எல்லோராலும் சிந்தித்துப்பார்க்க வேண்டிய தொன்றாகவே உள்ளது. ஆகையால் இனிவருங் காலங்களில் இப்படியான செயல்களை நடைமுறைப்படுத் தக்கூடாது என்ற பிரேரணையையும் முன்வைக்கின்றேன்" என்று அடுத்தடுத்து இரண்டு குண்டுகளையும் தூக்கிப் போட்டான்.

சபை மிரண்டுபோயிருந்தது. இளைஞர் குழாம் துள்ளிக்குதித்தது. அதேவேளை முதியவர்களின் தலைகள், எதைச் சொல்வதென்று தெரியாமல் தூங்கிப்போயிருந்தன. ஏதோ பரம்பரையாகச் செய்து வந்ததென்று சொல்ல முடிந் ததே தவிர தலைவர் தெரிவித்த விடயங்கள் பிழையான வையென்று வாதாட அவர்களால் முடியவில்லை என்பதே உண்மை.

ஆகவே, இம்முறை செய்யப்படுகின்ற வேள்வி நேரகாலத்தோடு செய்யப்படும் என்பதும் அத்துடன் பலிகொ டுத்தல், மச்ச உணவுகள் படைத்தல், மதுபான வகைகள் வைத்தல் என்பன தடை செய்யப்படும் என்ற விடயங்கள் எதிர்வரும் பொதுக்கூட்டத்தில் தெரிவிக்கப்படும் எனத் தலைவர் கூறிவைக்க செயலாளரின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

வழமையாக ஆனிக்கடைசியில் நடைபெறும் வேள்வி ஆனித் தொடக்கத்தில் செய்யப்படவேண்டும் எனவும் இரண்டாவதாகத் தெரிவிக்கப்பட்ட விடயங்களும் பொதுக்

கூட்டத்தில் எவ்விதமான எதிர்ப்புகளுமின்றி ஏற்றுக்கொள்ளப் பட்டது. தீபனின் கருத்துக்கள் ஒரு புதுமையான முறையில் வரவேற்கப்பட்டதாகத் தெரிந்தது.

வேள்விக்கான திகதியை பெரியவர்களின் அனுசர ணையோடு தீபன் தீர்மானித்துக்கொண்டான். சில விடயங் களில் பெரியவர்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்கக் கூடாதென அவன் விரும்பினான். எல்லா விடயங்களும் நலமாக நடந்து முடியவேண்டுமென அடிக்கடி அம்பாளை வேண்டிக் கொண்டான்.

தீபன் படிக்கின்ற காலத்திலிருந்தே இந்தப் படை யல் முறைகளைத் தன்னுடைய அறிவிற்கேற்ற முறையில் சிந்தித்துப் பார்ப்பதுண்டு. மனிதனால் இறைவனுக்குப் படைக்கப்படுகின்ற நிவேதனப்பொருட்கள் எல்லாமே மனிதனால் பிரயோசனப்படுத்தப் படுகின்றவை. வெற்றிலை பாக்குப் படைப்பதே அந்தக்கோவில் கடமை செய்பவர்கள் பூசை முடிந்த பின் போட்டுக்கொள்வதற்காக என்று நம்பிக் கொண்டான். படையல்களும் இறைச்சி மதுபான வகைகளும் இந்த வகையைச் சார்ந்தவையாகவே அவன் கருதினான். அவன் நினைப்பது போலவே வேள்வி முடிந்த கையோடு ஒருவருக்கொருவர் முரண்படுவதும் சிலவேளை கைகலப்பு நடைபெறுவதும் கூட எதனால் என்பதை அவன் நன்றாக விளங்கிக் கொள்வான்.

வேள்விக்கான திகதி குறிக்கப்பட்டு விட்டதினால் வேலைகள் ஒவ்வொன்றாக முன்னெடுக்கப்பட்டன. இளைஞர் களின் விருப்பப்படி நடக்க எல்லோருடைய ஒத்துழைப்பும் கிடைத்தது. ஆலயச் சுற்றாடல் பாடசாலை மாணவர்களால் துப்பரவு செய்யப்பட்டது. பலகாலமாக இறைக்கப்படாதிருந்த கிணறு கலக்கி இறைக்கப்பட்டது. கோவில் வாசலில் நின்ற அரசமரத்தின் சில கொப்புகளெல்லாம் துண்டாடப்பட்டன. வழமையை விட ஆலய சூழல் அழகாகக் காணப்பட்டது.

எது எப்படி நடந்தாலும் கோவில் காரியங்களில் ஈடுபாடு கொண்டவரான சாத்திரி அருணாசலத்தாரின் முகம் ஏனோ கடுகடுப்பாகவே காணப்பட்டது. எதிலும் அவர் அரைகுறைமனத்தோடு ஈடுபடுவது போலவே இருந்தது. உண்மையைச் சொல்லப்போனால் அவரும் அவரோடு கூடிய இரண்டொருவரும் வேள்வி முடிந்ததும் இறைச்சிச் சாப்பாட்டோடு அங்கு வைக்கப்படும் சாராயம், கள்ளு என்பனவற்றைப் பாவித்துவிட்டு சல்லாபம் செய்வது வழமை. ஆனால் அவர்களுக்கு இந்தமுறை நடக்க இருக்கும் வேள்வி எந்தவிதமான சுகத்தையும் தரப்போவதில்லை. இதனால்தான் அவர்களுடைய மனத்தில் சந்தோசம் நர்த்தனம் புரிய வாய்ப் பில்லாமல் போயிருந்தது.

அன்றிரவு எட்டுமணியிருக்கும் ஆலயத்தின் வெளி மண்டபத்தில் சிலர் மோதகம் பிடித்துக்கொண்டிருந்தனர். தீபனின் பங்கு அதில் பெரியதாக இருந்தது. சிலவேளை களில் ஆலயத்தில் பெரிய பூசைகள் நடக்கும் போதோ அல்லது ஆயிரம் மோதகப்பூசை நடைபெறும் போதோ தீபனைத் தேடிக் கூப்பிடுவார்கள். தீபன் மோதகம் செய்து கொடுத்தால் ஒரே அளவாகவும் அழகாகவும் இருக்கும். அதுமட்டுமல்லாது மற்றவர்கள் ஒரு மோதகத் தைப்பிடித்துப் போடுவதற்குள் மாருதி நான்கு மோதகங் களைப் பிடித்துச் சுழற்றி சுழற்றி எறிவான். அதைப்பார்க்க சிரிப்பாகவும் ரசனையாகவும் இருக்கும்.

சுற்றிவர இருந்த சிறுவர்கள், மோதகம் பிடிப்பதைப் புதினமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அருணாசலத் தாரும் மேத்திரி பூபாலுவும் நீண்ட நேரமாகக் கோயிலின் பின்புறம் பேசிக்கொண்டிருந்ததை தீபன் முதலில் அவதானித்திருந்தான். அப்பொழுதே அவனுக்கு மனத்தில் ஏதோ சந்தேகம் எழுந்து விட்டது. அது சரிதான் என்பதை நிரூபிப்பதுபோல மேத்திரி பூபாலு குட்டி போட்ட பூனை

மாதிரி மோதகம் பிடிக்கும் இடத்திற்கு வந்தார்.

"தம்பி! ஒரு கதை கேக்கிறியளே?"

பூபாலு மேத்திரி, தீபனைப் பார்த்து மெதுவாகக் கூப்பிட்டார்.

"பிரச்சினையில்லை வாறன் பொறுங்கோ" என்றபடி உருட்டிய மோதகத்தைப் பெட்டிக்குள்ளே எறிந்துவிட்டு தீபன் எழுந்து கொண்டான்.

"தம்பி சொல்லுறனெண்டு குறை நினைக்கக்கூடாது. இந்தமுறை நீங்கள் ஆடு பலி குடுக்கக் கூடாதெண்டும் மச்சமாமிசம், மதுபானங்கள் படைக்கக்கூடாதெண்டும் சொன்னதைக்கேட்ட கனபேர், கோயிலுக்கு வரமாட்டம் எண்டு நிக்கினம். என்னவோ நானும் அறிஞ்சதைத்தான் சொல்லுறன். இதாலை தேவையில்லாத பிரச்சனைதான் வரப்போகுது தம்பி. எல்லாரும் கோயிலுக்கு வரவேணுமெண்டால் நிச்சயமாக மச்சமாமிசம் படைக்கிறதுக்கெண்டாலும் விட்டுக்குடுங்கோ ராசா. நடக்கக்கூடாதது என்னெண்டாலும் நடந்திட்டால் ஊரெல்லாம் கூடி உங்களைத்தான் பழி சொல்லும். பிறகு கவலைப்படுகிறதிலை பிரயோசன மில்லைத்தம்பி. என்ன செய்யலாமெண்டு சொல்லுங்கோ" சாத்திரி சொன்னதை மேத்திரி பூசிமெழுகிக் கொண்டிருந்தார்.

மாருதிக்கு மதி வேலை செய்யத் தொடங்கியது. பழிவருமென்பதில் அவனுக்கு உடன்பாடில்லை. ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு இளைஞன் அவனோடு இணைந்து கொண்டிருக்கும் போது பழி எங்கே இருந்து வரப்போகிறது? இது சும்மா ஒரு பம்மாத்து. எதற்கும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வதென்று தீர்மானித்துக் கொண்டான்.

அவ்வேளை கோவிலடிக்கு வந்திருந்த நிர்வாக சபை உறுப்பினர்களை ஒன்று கூட்டினான் தீபன். மேத்திரி சொன்ன விடயத்தை அவர்களுக்குச் சொல்லி விளங்க

வைத்தான்.

"சரி என்ன செய்யிறது. இளைஞர் குழு என்னோடை மோதத்தான் செய்யும். நான் அவையளை மனேஜ் பண்ணு றன். நீங்கள் உங்கடை விருப்பம்போலை செய்யுங்கோ."

அனுமதி கிடைத்து விட்டதேயென்று சாத்திரியும் மேத்திரியும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மீனும் இறைச்சியும் சாப்பிட அம்மனே வந்து தங்களுடன் உட்கார்ந்திருப்பதுபோல நினைத்துக்கொண்டார்கள்.

கோயில் மணி, பூஜைக்கு ஆயத்தமென்று சொல்லிக்கொண்டு இருந்தது.

"தம்பி... பழவகையளையெல்லாம் அம்மன் பக்கம் வடிவாய் மடைபரவுங்கோ. மச்சப்படையல் காத்தவராயர் பக்கம் படைக்கவேணும். அதை நாங்கள் பாத்துக்கொள்ளு றம். உங்களுக்கு ஒரு இடைஞ்சலுமில்லாது செய்யிறது எங்கடை பொறுப்பு"

சாத்திரியார் சண்டியனையும் உயர்த்திக் கட்டிக் கொண்டு அதற்கு மேலால் ஒரு சால்வையையும் துணைக்கு இறுக்கிக்கொண்டார். சொண்டு இரண்டும் இடைக்கிடை பொச்சடித்துக் கொண்டன. எதையோ நினைத்து நினைத்து வாயூறுவது போல இருந்தது.

இந்தமுறை மட்டும்தான் இந்தக் கூத்துகள். இனிமேல் இந்தக்காரியம் பற்றி யார் கதைத்தாலும் அதற்கு செவி சாய்ப்பதே இல்லையென தீபன் முடிவெடுத்துக்கொண்டு அதற்கான திட்டமொன்றை மனத்திற்குள் தீட்டியபடி இடைக் கிடை தனக்குள்ளாகச் சிரித்துக்கொண்டான்.

மேளகாரன் மெல்ல மெல்ல உருவேற்றிக்கொண் டிருந்தான். தாளத்தின் வீச்சு அங்கு நின்றவர்களை தூக்கித் தூக்கி எறிவது போல மனநிலையை மாற்றிக்கொண் டிருந்தது.

சன்னதமாடும் சின்னத்துரை நின்ற இடத்திலேயே

தொங்கிவிழத் தொடங்கினார். அருகில் நின்றவர்கள் துவாயொன்றினால் அவருடைய இடுப்பைச்சுற்றி இறுக்கிக் கட்டினர். கட்டக்கட்ட சின்னத்துரையர் கட்டு மீறி ஆடத் தொடங்கினார்.

சின்னத்துரையின் சாரம் ஆடத்தொடங்கினால் போதும். சன்னதத்திற்குப் பயந்த பெண்களெல்லோரும் கோயிலுக்கு வெளியே ஓடி ஒழிந்து கொள்ளுவார்கள். கோயிலுக்குள் இருக்கும் சூலம், வாள் என்பவற்றைத் தூக்கி வந்து மக்கள் முன் வீசி விளையாடினால், எப்படிப் பயப்படாமல் இருக்க முடியும்?

சின்னத்துரையர் சன்னதம் வந்ததும் கைகளினால் தலையில் அடிப்பார். உடனே அடியார்களுக்கு விளங்கி விடும். தண்ணீரை வாளியில் கொண்டு வந்து தலையில் ஊற்றுவார்கள். குளிர்மைப் படுத்தப்படுத்த ஆட்டம் கூடிக் கொண்டே போகும்...

மடை பரவியிருப்பதை அருகில் போய்ப் பார்த்தா ரென்றால் "ஏன் நல்ல பிலாப்பழம் வாங்க இல்லை, கொடி காமத்திலை வாங்கின மாம்பழத்தைக் காண இல்லை" என்றெல்லாம் கேள்விக் கணைகள் பாயும். மேளத்தின் ஒலி வீச்சுக் குறையக் குறைய ஆட்டம் குறைந்து சின்னத்து ரையர் கோயில் வாசற்படியில் படுத்துவிடுவார்.

அன்றும் அப்படித்தான் நடந்தது. சிலவேளை சுவாமி ஆடிய சின்னத்துரை, ஏன் ஆடு வெட்ட இல்லை யென்று கேட்டுவிடுவாரோ என்று இளைஞர் குழாம் எதிர்பார்த்திருந் தது. பெரியவர்கள் கூட அப்படித்தான் நினைத்திருப்பார்கள். ஆனால், அவர் அப்படிக் கேட்கவில்லை.

பூசை முடிந்ததும் இறுதியாகப் பூசகர் மச்சம் படைத்திருந்த பக்கத்திற்கும் பூக்களை எறிந்து தண்ணீர் தெளித்து முடித்தார்.

அடுத்ததாக வழிவெட்டு நடைபெறுவதற்கான ஆயத்

தங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. கோயிலிலிருந்து வடக்குப்பக்கமாக நூறு மீற்றர் தூரத்தில் உள்ள ஒரு சந்தியில் தான் வழிவெட்டு இடம்பெறும்.

பூசகர் தனக்குத்தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டார். சூலம், வாள் என்பவற்றோடு வேப்பம்பத் திரியையும் சேர்த்து சின்னத்துரையரின் கையில் கொடுக்கப் பட்டது. மேளகாரர் முன்னே செல்ல முயன்று கொண்டு நின்றனர்.

தூரநின்ற தீபன் எல்லாவற்றையும் கவனித் துக்கொண்டு இருந்தான். பலி கொடுப்பது, மச்சம், மதுபானம் படைப்பது எல்லாவற்றையும் இந்த முறையே நிறுத்திவிட வேண்டும் என்பதே அவனது எண்ணமாக இருந்தது. இருந்தாலும் சிறு தடங்கல் ஏற்பட்டு விட்டமை அவனுக்கு வேதனையாகவே இருந்தது.

எல்லோரும் வழிவெட்டுவதற்கான ஆயத்தங்களுடன் வெளியேறிக்கொண்டிருந்தனர். சாத்திரி அருணாசலத்தார் சாரத்தை மடித்துக் கட்டிக்கொண்டு அப்படியும் இப்படியுமாக ஓடிக்கொண்டிருந்ததைப் பார்த்ததும் தீபனுக்குச் சிரிப்பு வந்தது. ஓடிக்கொண்டிருந்தவர் கையில் ஒரு சிரட்டையை எடுத்தார். அந்தச் சிரட்டையில் சாராயப்போத்தலைத் திறந்து கொஞ்சச் சாராயத்தை ஊற்றினார் என்று சொல்வது பொருத் தமில்லை. தெளித்தார் என்று சொல்வதே பொருந்தும்.

முட்டையில் இருந்து கிள்ளி எடுத்த ஒரு சிறுதுண்டு அந்தச்சிரட்டைக்குள் போய் விழுந்தது. கள்ளுப்போத்தலும் மெல்லச் சரிந்து தானும் அதனுடன் சேர்ந்து கொண்டதாகக் காட்டிக்கொண்டது. சின்னத் துரையர் சிரட்டையை மெல்லத்தூக்கிக் கொண்டார். எல்லோரும் வழிவெட்டும் சந்தியை நோக்கி நகர்ந்து கொண்டனர்.

தீபன் எல்லோரையும் நகர விட்டுவிட்டு படையலின் அருகே சென்றான். அவனது அடுத்த செயற்பாட்டிற்கான

சிந்தனை விரிந்து கொண்டது...

கள்ளு, சாராயம், மீன், இறைச்சி, முட்டை என்பவற்றை உண்ண விரும்புவது தவறல்ல. அவற்றைப் பெற்று தனியாகவோ உறவினர்களுடனோ நண்பர்களுடனோ உண்டு மகிழ்வதற்கு யாரும் தடையாக இருக்க முடியாது, இருக்கவும் கூடாது. ஆனால் இந்தச் செயலை கோயிலில் செய்வது என்பதுதான் பிரச்சினைக்குரிய விடயமாகும்.. இது அநாகரிகமான செயலென்பதைத் தவிர வேறென்னவாக இருக்கமுடியும்? இதனை முற்றாகத் தடை செய்யவேண்டும் என்பதே அவனுடைய எண்ணமாக இருந்தது.

உள்ளே சென்ற தீபன் மீன்கறி, முட்டை, இறைச்சிக்கறி என்பவற்றை ஒரு பையில் அள்ளி எடுத்துக் கொண்டான். சாராயப்போத்தல், கள்ளுப்போத்தல் இரண்டையும் கைவிரல் இடுக்குகளுக்குள் இறுக்கிக் கொண்டு மெல்ல வெளியே வந்தான்.

சந்தியில் மேளத்தின் தாள லயம் வெகு துரிதமாக இருந்தது. வழிவெட்டும் நடவடிக்கை இறுதிக்கட்டத்தை அடைந்து விட்டது. பூசகர் தண்ணீர் தெளித்துத் தனது கடமை முடிந்து விட்டது என்பதைத் தெரிவித்துக் கொண்டிருந்தபோது தீபன் நேராக அந்த இடத்திற்கு விரைந்தான். படையல் வைக்கப்பட்ட இடத்தில் இருந்து எடுத்துக் கொண்டு வந்த கறி, முட்டை என்பவற்றைக் கொட்டினான். கள்ளுப்போத்தல், சாராயப்போத்தல் இரண்டையும் கவிழ்த்துப் படையலின் மேல் ஊற்றினான்.

இதனைப்பார்த்த அருணாசலத்தார் தீயில் மிதித்தவன் போல ஓடிவந்தார். "தம்பீ! இதென்ன செய்யிறியள். உங்களுக்கென்ன விசரே? ஏன் எல்லாத்தையும் ஊத்துறியள்.? நாங்கள் முதலே படையல் செய்து போட்டம்தானே" என்று சொல்லிக்கொண்டு சாராயப் போத்தலைப் பிடிக்கப் போனார். அருணாசலத்தாரின் முயற்சி பலிக்கவில்லை.

சாராயம் முழுவதும் நிலத்தில் ஊறி மறைந்து போனது. மேளகாரரும் தமது பங்கும் இல்லாமல் போய்விட்டதே என்று திகைத்துப்போய் நின்றார்கள்.

"நாங்கள் மறிக்க மறிக்க கடவுளுக்கு வைக்கவேணு மெண்டுதானே ஒற்றைக்காலிலை நிண்டனீங்கள்? நான் இப்ப கடவுளுக்குத்தான் வாத்திருக்கிறன். அவர் குடிச்சால் எல்லா ருக்கும் நல்லதுதானே செய்வார்" நக்கலும் நளினமுமாக தீபன் சொல்லிக்கொண்டு திரும்பினான்.

படையல் பற்றி இனி ஒன்றும் கேட்பதில்லை என்ற முடிவோடு... சாத்திரி அருணாசலமும் மேத்திரி பூபாலுவும் நேராக வீட்டை நோக்கிய பாதையில் நடந்து கொண்டி ருந்தனர்.

⁕

(தேசிய கலை இலக்கியப் போட்டியில் பிரதேச மட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்ற நிறுகதை - 2016)

# விடுதலை

நேராக நிற்க முடியாத படலை, பனை மட்டைகளைச் சுமந்தபடி சாய்ந்து கொண்டிருந்தது. ஆடித்திறக்கப் பழகவில் லையோ என்னவோ அதைத் தூக்கித்தான் திறக்க வேண்டும். வீட்டு நிர்வாகம் எப்படி யிருக்கும் என்பதற்கு தானும் ஒரு சாட்சி என்பதுபோல நின்றிருந்தது அந்தப்படலை.

சாந்தி, வீட்டுக்கு முன்பாக இருந்த கட்டைச்சுவரை மண்ணால் பூசிக்கொண் டிருந்தாள். முற்றத்தில் நிறையப்பேணிகளும் தேங்காய்ச் சிரட்டைகளும் சுதந்திரமாகச் சிதறிக்கிடந்தன.

காந்தன் எங்கோ வெளியில் போயிருக் கிறான் என்பது மட்டும்தான் சாந்திக்குத் தெரியும். மற்றும்படி அவன் எங்கு போகிறான்? என்ன செய்கிறான்? யாரோடு பழகுகிறான்? என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய தேவை சாந்திக்கு இருக்க வில்லை. அவள் அதைப் பற்றிக் கவனிப்பதும் இல்லை.

காந்தனின் வீடு கிராமத்தின் ஒரு எல்லையில் இருந்தது அவளுக்கு ஒரு வகையில் அனுகூலமாகவே இருந்தது. உறவினர்களின் பிரசன்னத்தைவிட அந்நியர்களின் வரவே அதிகமாகக் காணப்பட்டது. வெளியாருடன் அவனுக்கிருந்த தொடர்பும் செயற்பாடுகளும் சமூக விழுமி யங்களுக்கு ஒத்துவராததாகவே இருந்தது. அதனால் ஊரில் உள்ளவர்கள், உறவினர்கள் என்று பலர் அவனுக்குப் புத்திகூற முனைந்தபோதும் அவையெல்லாம் புறக்குடத்து நீராகவே போயின.

சாந்தி பழைய சீலைத்துணியொன்றினால் கரைத்த செம்மண்ணை அள்ளி அள்ளிப் பூசிக்கொண்டிருந்தாள். "வீட்டுக்காரர்... வீட்டுக்காரர்..." படலையடியில் சத்தம்கேட்டது. "ஆரெண்டு பாரம்மா" சாந்தியின் கட்டளைக்குக் கீழ்ப்ப ணிந்தாள் கீர்த்தனா. படலையைப் பார்த்தபடி ஓடியவள் "அது பேணிமாமா வாறார்" என்று குரல் கொடுத்ததும் சாந்தி, கையில் இருந்த மண் சீலையை எறிந்து விட்டுக் கைகளைக் கழுவினாள். "மாமாவை இருக்கச் சொல்லு வாறன்" என்றபடி வீட்டுக்குள் ஓடினாள்.

வீட்டுத்திண்ணைபோல வெளியில் இருந்த கட்டொன் றில் வேலுப்பிள்ளை அண்ணர் அமர்ந்தபடி அருகில் நின்ற கீர்த்தனாவை கையில் பிடித்து இழுத்தார் "இண்டைக்குப் பள்ளிக்குடம் இல்லையோடி?" செல்லக்கதை பேசிக்கொண்டு கீர்த்தனாவைத் தனது தொடைமீது இருத்திக்கொண்டார்.

கீர்த்தனாவுக்கு இப்போது வயது பதினொன்று தானென்றாலும் பதினாறு வயதுப் பருவக்குமரிபோல இருந் தாள். வீட்டிற்குள் ஓடிய சாந்தி, சிறிய கிளாஸ் ஒன்றுடன் வெளியில் வந்தாள். வேலுப்பிள்ளை அண்ணரின் மடியில் கீர்த்தனா அமர்ந்திருந்த விதம் அவளுக்கு உள் மனதில் ஒரு நெருடலை உண்டு பண்ணியது. இருந்தாலும்...

ஒருநாள் வேலுப்பிள்ளை அண்ணர் இரண்டாவது

தடவை கிளாசை வாங்கியபோது, சாந்தியின் கையை இழுத்துக் கொஞ்சியதை சாந்தி மறந்து விடவில்லை. இருந்தாலும் என்ன செய்வது?

வேலுப்பிள்ளை அண்ணர் கொஞ்சம் நிலைமை மாறினால் பழைய சினிமாப்பாட்டுப் பாடுவார். சிலவேளை தன்னை மறந்து ஆடுவார். முற்றத்தில் கிடக்கும் பேணிகளில் அடித்து விட்டு எறிந்துவிடுவார். இதனால் பிள்ளைகள் எல்லோரும் அவரைப் "பேணிமாமா" என்று செல்லமாக அழைப்பார்கள். இதனால் சிலவேளை குடும்பத்தில் ஒருவராகிப் போய்விடுவார் இந்த மாமா.

படலையடியில் சத்தம் கேட்பது போலிருந்தது. காந்தன் எல்லாத்தொழிலும் செய்து களைத்துப் போய்விட்டான். கடைசியாக எடுத்துக் கொண்ட முடிவினால் அவன் உறவுகளோடு நெருங்கமுடியாத நிலையை ஏற்படுத்திவிட்டது.

தானும் குடித்து அடுத்தவருக்கும் ஊற்றிக்கொடுக்கப் பழகி இரண்டு வருடங்கள் கடந்தோடி விட்டது. ஆரம்பத்தில் சாந்தியும் இதை விரும்பவில்லைத்தான். இருந்தாலும் குடும்பத்தில் மூன்று பிள்ளைகளுடன் சேர்த்து ஐந்து பேருக்குக் கஞ்சி வார்க்க வேண்டுமே... என்ன செய்வது? உறவினர்களிடம் எத்தனை நாளைக்குக் கையேந்த முடியும்? அதனால் காந்தனுக்கு இந்தத் தொழிலை விட்டால் வேறுகதி இல்லை என்றாகிவிட்டது.

"என்ன காந்தன் சரை வித்தியாசமாய்க்கிடக்கு. ஏதோ வாய்ச்சிருக்குப்போலை" காந்தன் சொண்டுக்குள் ஒரு மெல்லிய சிரிப்பை உதிர்த்தானே தவிர பதிலொன்றும் வந்ததாக இல்லை.

அவனுடைய மனதில் ஏதோ பிரச்சினை இருப்பது போலத் தெரிந்தது. இல்லையென்றால் "இண்டைக்கு நில்லுங்கோவன். வாலாட்டி கொண்டு வந்தனான். ஒரு

பாட்டி போடுவம்" என்று வேலுப்பிள்ளை அண்ணையை மறித் திருப்பான். ஆனால் இன்று அப்படிப் கேட்க காந்தனுக்கு மனம் வரவில்லை.

மற்றும் நாளென்றால் விடாப்பிடியாகத் தன்னை மறித்து தண்ணிப்பாட்டி போடுற காந்தன், ஏன் இன்று இப்படிச் செய்கிறான் என்று நினைக்க வேலுப்பிள்ளை அண்ணைக்கும் ஏதோ ஒரு மாதிரித்தான் இருந்தது. அரைகுறை மனத்தோடு சாந்தி கொடுத்த இரண்டாவது கிளாசையும் முடித்துவிட்டு மெல்லப் புறப்பட்டார்.

கறிச்சட்டியில் ஆட்டிறைச்சித்துண்டுகள் கொதிதாங்க முடியாதவைபோல துள்ளித்துள்ளி விழுந்து கொண்டி ருந்தன. மணம் மூக்கு நுனியைத் தேய்த்துக்கொள்ள வைத்தது. சாந்தி அகப்பையினால் குழம்பில் தொட்டு உறிஞ்சினாள்.

"அம்மா! நாளைக்கு எனக்குக் காசு வேணும். காசு தராட்டில் பள்ளிக்குடம் போகமாட்டன். எல்லாப்பிள்ளையளும் குடுத்துவிட்டுதுகள். நானும் ராதிகாவும் தான் குடுக்கல்லை. ராதிகாவுக்கு அவளின்ரை அண்ணா நாளைக்கு குடுத்து விடுவார்" கறி அடுப்பிலிருந்து இறக்குவதை எதிர்பார்த் துக்கொண்டிருந்தாள்.

சாந்தியின் எண்ணத்தில் பழைய நினைவுகள் ஒன்றிரண்டு சிறிய அலைகளாக எழுந்து பேரலையாகி விழுந்து கொண்டிருந்தது. அவளுடைய மூத்தமகன் சுதந்திரத்திற்காகப் போராடச் சென்று, தகவலே இல்லாமல் போனது அவர்களின் வாழ்க்கையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. அவன் இருந்திருந்தால் கஞ்சியாக இருந்தாலும் நிம்மதியாகக் குடித்துக்கொண்டிருந் திருக்கலாம். காந்தனின் இயலாத்தனத்தினால் மனத்திற்கு உவப்பில்லாத உழைப்பையே நம்பி இருக்கவேண்டி யிருக்கிறது.

வந்தவர்களுக்கு வார்த்துக்கொடுத்துவிட்டுத் தானும் ஒரு "தம்" அடித்துவிட்டு இறைச்சிக் கறிக்குக் காத்திருக் கிறான் உதயன். சாப்பாடும் ரெடியாகி விட்டது. மதியத் திருவிழா வெகு விமரிசையாக இருந்தது. உண்டகளை தீர நுணாமரத்தின் கீழிருந்த பழைய வாங்கொன்றில் உதயன் சரிந்து கொண்டான். காந்தனின் அப்பா, மகனுக்கென்று கொடுத்த சீதனம் இது.

வெட்டி முறிந்து வேலை செய்துவிட்டு ஒருவன் எப்படித் தூங்குவானோ அப்படியொரு கும்பகர்ண படலத்தை நடத்திக் கொண்டிருந்தான் காந்தன். மாலை மயங்கும் வேளை, அடுத்த தெருவில் யாரோ சத்தமாகப் பேசுவது கேட்டது. சாந்தி வேலியோரமாகச் சென்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

"பத்தியெரிவார் பாழ்பட்டுப் போவார். பிள்ளை யளைத் தின்னக்குடுக்கப் போகினம். என்னமாதிரி மாடு போலை நிண்ட ஆடு. பாழ்பட்டுப்போவாருக்கு மனம் வந்துதோ வெட்டித்தின்ன? என்ன செய்யிறமெண்டு பாருங்கோ."

சாந்தியின் மச்சாள் முறையான, மேகலாதான் வாய்க்கு வந்தபடி பேசிக்கொண்டிருந்தாள். மதியம் சாப்பிட்ட இறைச்சிக்கறியும் சோறும் வெளியே வர அனுமதிகேட்பது போல இருந்தது சாந்திக்கு. என்ன நடந்திருக்கும் என்பது அவளுக்கு விளங்கிவிட்டது. ஆரம்ப காலத்தில் இப்படி ஏதேனும் நடந்துவிட்டால் அவளால் பொறுத்துக்கொள்ள முடியாமல் தவிப்பாள். நெருப்பில் நடப்பது போலத்துடிப் பாள். ஆனால் காலம் செல்லச் செல்ல எல்லாமே அவளுக்கு இயல்பாக்கம் ஆகிவிட்டது.

அக்கா அமுதினி அடிக்கடி வந்து ஆறுதலும் ஆலோசனைகளும் சொல்வதுண்டு. அவளின் ஆலோசனைப் படி கோழி வளர்ப்புக்காக படாதபாடுபட்டுக் கடன்

வசதியைப் பெற்றிருந்தாள். நல்லபடி திட்டமிட்டு அதற்கான கூடு ஒன்றினைத் தயாரித்து கோழிக்குஞ்சுகளை வாங்கி வளர்த்து வந்தபோது, இலவசமாகச் சாப்பிட்டுப் பழக்கப்பட்டவர்கள் யாரோ கூட்டோடு கோழிகளைக் கொண்டு சென்றது பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. கடைசியில் எடுத்த கடனைக் கட்டிமுடிக்காமலே போனது துர்ப்பாக்கியமே. இப்படியான சமூகக்குறைபாடுகள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையில் எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதை அரசு சார்ந்த நிறுவனங்கள் சிந்தித்துப்பார்க்காத போது, தனியொரு சாந்தியினால் என்னத்தைச் சாதித்து விடமுடியும்.

இந்தப் பாதிப்புக்கள்தான் அவளை மெல்ல மெல்லத் திசைமாற்றிக்கொண்டிருந்தது. கணவன் ஆரம்பித்த மதுபான விற்பனையைத் தவறாது செய்ய ஊக்கமளித்தது. சகோதரியின் ஏச்சுப்பேச்சுக்களைக்கூட அவள் கவனிப்ப தாகவோ, கருத்திலெடுப்பதாகவோ இல்லை. இருந்தாலும் அமுதினி இடைக்கிடை பிரசன்னமாகி பிள்ளைகளின் படிப்புச் செலவுக்குத் தன்னாலியன்ற உதவியைச் செய்வாள். காந்த னின் செயற்பாடுகள் எதுவுமே அவளுக்குப் பிடிப்பதில்லை.

காந்தன் கால்களை அசைத்து மெல்லப்புரண்டு படுத்துக் கொண்டான்.

"வீட்டுக்காரர்..."" படலையடியில் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது.

"ஆரது? வாங்கோ"

"அண்ணை... ஒரு கால் எடுக்கலாமோ?" வந்தவர் களில் ஒருவன் மெதுவாகக் கேட்டான். மதியத்து மயக்கம் தெளியாத நிலையிலிருந்த காந்தன் வந்தவர்கள் யாரென்ப தைக்கூட அறிய முயற்சிக்காத நிலையில்...

"இருங்கோ பாப்பம். சாந்தி... இவைக்கு ஒரு காலாம்! குடுங்கோவன்" என்று சொல்லியபடி வாங்கிலிலி

ருந்து மெல்ல இறங்கிச் சாரத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டான்.சாந்தி ஒரு கால்ப்போத்தல் சாராயத்தையும் கிளாசொன்றையும் கொண்டுவந்து கொடுத்தாள். வந்தவர்கள் புது ஆட்களாக இருந்தது சாந்திக்கு மனக்கலக்கமாக இருந்தது.

"இன்னுமொரு கால் எடுக்கலாமோ?" வந்தவர்களில் ஒருவன் உசாராகக் கேட்டான். பிரச்சனையில்லை என்றவள் இன்னொரு கால்ப்போத்தல் சாராயத்தைக் கொண்டு வந்து கொடுத்தாள். இருவரின் கைகளிலும் இரண்டு கால்ப் போத்தல்கள். எங்கோ மெல்லியதான வாகன இரைச்சல் கேட்டது. காந்தனின் கண்கள் இனந்தெரியாத பய உணர்வினால் வெளித்தள்ளி நின்றன.

வந்தவர்களை மெதுவாக எழுந்து வரும்படி காந்தன் சைகை காட்டினான். அவர்களும் பயந்தவர்களைப்போல எழுந்து சென்றனர். வீட்டிற்குள் சென்று ஒளிந்து கொள்ளுமாறு அவர்களுக்குப் புத்தி சொல்லிக் கொடுத்தான். அவர்கள் வீட்டிற்குள் செல்லவும் பொலிஸ் ஜீப்வண்டி படலையடியில் வந்து நிற்கவும் சரியாக இருந்தது. வண்டியிலிருந்து இறங்கிய பொலிஸ்காரர் காந்தனைச் சுற்றி வளைத்தனர்.

"என்ன இங்கு கள்ளச் சாராயம் விக்கிறது?"

"இல்லை ஐயா, நாங்கள் விக்கிறேல்லை"

"ஏய்! பொய் சொல்லுறது. கள்ளச் சாராயம் விக்கிறதெண்டு பொலிசிலை முறைப்பாடு வந்திருக்கு"

"இல்லை ஐயா, நாங்கள் சாராயம் விக்கிறதில்லை" தான் பழகியிருந்ததை திரும்பத் திரும்ப காந்தன் சொல்லிக்கொண்டிருந்தான்.

"ஏய்! இப்ப இரண்டுபேர் இங்கு வந்ததுதானே! எங்கை அவங்கள்?"

"எங்களுக்குத் தெரியாதய்யா...இஞ்சை ஒருதரும் வரஇல்லை"

"சொல்றதெல்லாம் பொய்" பொலிஸ்காரன் ஒருவன்

தன்னுடன் வந்த மற்றவனைக் கூப்பிட்டான்.

"வீட்டுக்கை ஆர் இருக்கிறது போய்ப்பாருங்க" என்றான். அவன் வீட்டிற்குள் போகவும் உள்ளிருந்து இரண்டுபேர் சாராயப்போத்தல்களோடு வெளியே வந்தனர். கையும் களவுமாகத் தான்பிடிபட்டுப்போனதை எண்ணி காந்தன் திகைத்துப்போனான். முதலில் சாராயம் கேட்டுவந்தவர்களும் பொலிஸ்காரர்கள் தான் என்பதை அப்போதுதான் தெரிந்து கொண்டான்.

காந்தனை ஏற்றிக்கொண்டு ஜீப் வண்டி சாராயப் போத்தல்களையும் சுமந்தவண்ணம் பறந்து கொண்டிருந்தது. மனைவி பிள்ளைகள் குரல் எடுத்துக்கத்தாத குறையாக அழுதுகொண்டு நின்றனர். அக்கம் பக்கத்து வீட்டுக்காரர் யாருமே வந்ததாக இல்லை. என்னென்று வந்து கேட்பதற்கு இது முதற்தடவையில்லையே. ஆனால் தெருவெங்கும் வேலிக்கு மேலாகத் தலைகள் முளைத்திருந்தன.

அன்று மாலை இருட்டாகும்வேளை சாந்தியின் அக்கா வந்திருந்தாள். அவளுக்கு இந்தச் செய்தி எப்படியோ எட்டியிருக்கவேண்டும். ஒரு சில மாதங்களுக்கு முன் காந்தன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது என்ன உதவி தேவையென்றாலும் தனது தங்கையின் கணவன் என்ற முறையில் காசை அள்ளி இறைத்தவள். தனது தங்கையிலும் பிள்ளைகளிலும் அளவில்லாத பாசமுள்ளவள்.

இந்தமுறை கையும் மெய்யுமாகப் பிடிபட்டதினால் காந்தன் வெளியே வரக்கூடிய சாத்தியம் எதுவும் இல்லை என்பது அவளுக்குத் தெரியும். கொண்டுவந்திருந்த பிஸ்கற்றை பிள்ளைகளுக்குப் பிரித்துக்கொடுத்தாள். சாந்தியைப் பார்க்கப்பாவமாக இருந்தது. அன்று இரவு அவர்களுடனே தங்குவதென முடிவு செய்தாள். அவள் இன்று தங்கையுடன் கதைக்கவேண்டிய கதைகள் நிறைய இருந்தன.

நேரம் இரவு ஏழுமணியைத் தாண்டிக்கொண் டிருந்தது. தான் கொண்டுவந்திருந்த பிட்டுப்பார்சலைத்திறந்து பிள்ளைகளுக்குக் கொடுத்தாள். சாந்தியையும் சாப்பிடச் செய்தாள். பிள்ளைகள் படுக்கைக்குச் சென்ற அந்த நேரத் தைப் பயன்படுத்த நினைத்தாள் அமுதினி. தங்கையை அழைத்து அருகில் இருத்தினாள். அவளுடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். எவ்வளவு அழகாக இருந்தவள். சின்னவயதில் வயதிற்கு மிஞ்சிய அறிவும் ஆற்றலும் அவளுக்கன்றி வேறு யாருக்கும் இருந்ததில்லை. குடும்ப நிர்வாகத்தில்கூடத் தலையிட்டு செய்யவேண்டிய அத்தனை காரியத்தையும் கச்சிதமாகச் செயற்படுத்தக் கூடியவள். அடுத்தவர்களுக்குப் புத்திமதி சொல்பவள். அப்படிப்பட்டவள் இன்று அடுத்தவரின் நையாண்டிக் கதைகளுக்கு அகப்பட்டுத் தவிப்பதை நினைக்க அமுதினிக்கு அழுகையே வந்தது. ஓவென்று அழுது தீர்த்துவிடவேண்டும் போல் இருந்தது.

"என்னக்கா என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறாய். ஏன் என்ன நடந்துபோச்சு? எல்லாமே முடிஞ்ச கதை" என்று சொல்லிவிட்டுத் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டாள் சாந்தி. "எல்லாம் முடிஞ்ச கதைதான். நாளைக்கு உன்ரை பிள்ளையளை எப்படி வாழ வைக்கப்போறாய். உந்தச் சாராயக் கோதாரியைத்தானே நாளைக்கும் விக்கப்போறாய். தங்கைச்சி! உந்த வேலை இனி வேண்டாமடி. இண்டைக்குப் பாத்தியா உன்ரை புருசனுக்கு நடந்த கெதியை. கேக்கிற துக்கு ஆர் இருக்கினம். உனக்குத் தெரியுமோ இண்டைக்கு மேகலா அவையளின்ரை ஆட்டைத்தான் களவாகப் பிடிச்சு உன்ரை புருசன் பங்கு போட்டிருக்கிறான். உது சரிதானே"

சாந்தி நிலத்தையே பார்த்தபடி இருந்தாள். "உன்ரை புருசனைத் திருத்த ஏலாது ஆரம்பமே பிழைச்சுப்போச்சு. உன்ரை பிள்ளையளைப் படிப்பிச்சு நல்ல நிலைக்குக் கொண்டுவர வேணுமெண்டால் ஏதாவது மாற்றம்

வரவேணும். இண்டையோடை இந்தச் சாராயம் விக்கிற வேலையை விடு. நான் என்னமாதிரி இருக்கிறனெண்டு பாக்கிறாய்தானே. நானும் என்ரை பிள்ளையளும் உழைக் கிறவிதத்தைக் கவனிக்கிறாய்தானே. லாபம் கனக்க இல்லாட்டியும் கிரமமாக ஒரு வேலையைச் செய்தால் அது லாபம்தானே."

அமுதினியின் பேச்சு சாந்தியைக் கொஞ்சம் கொஞ்சமாக இழுத்துக்கொண்டிருக்கிறது. இப்பொழுது அவளுடைய தலை தாழ்ந்து போயிருக்கவில்லை. அக்காவை நிமிர்ந்து பார்த்தாள்.

"எனக்குத் தெரிஞ்ச ஐயா, தன்ரை சாப்பாட் டுக்கடைக்கு சாப்பாடு செய்து தருவியளோ எண்டு கேட்டவர். நாங்கள் இப்ப இரண்டு கடைக்குச் சாப்பாடு குடுத்துக் கொண்டிருக்கிறம். அதாலை எனக்கு ஏலாமல் இருக்கு. நீ நினைச்சால் செய்யலாம். நான் சொல்லுறதைக் கேட்டு நடந்தால் நல்லது. இல்லாட்டி நான் பொறுப்பில்லை. எனக்கும் நெடுகத் தந்து கொண்டிருக்க ஏலாது. அதுதான் சொல்லுறன். என்ரை மனுசனும் ஒரு ஏலாவாளிதானே. இந்த முறையோடை உன்ரை மனிசனை நீதான் திருத்த வேணும்" அமுதினி சொல்லிவிட்டு சாந்தியின் வாயையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிந்தனைகளோடு முடிந்துபோனது அந்த இரவு. முதலில் சாப்பாட்டுக்கடைக்கான இடியப்பம் அவித்துக் கொடுப்பது என முடிவெடுத்தாள் சாந்தி. இந்த வேலை யோடு சிறையில் இருக்கும் காந்தனையும் போய்ப்பார்த்து வரவேண்டும், அதுவும் ஒரு வேலையாகப் போய்விட்டது. பத்து நாட்கள் எப்படிப்போனது என்றே தெரியவில்லை. காந்தனுக்கும் தோதான நண்பர்கள் வாய்த்ததால் சிறைச்சா லையும் உல்லாசபுரியாகிப்போனது அவனுக்கு.

அன்று காந்தனைப்பார்ப்பதற்காகச் சாந்தி போக

இருந்தாள். அமுதினி தானும் வருவதாகச் சொல்லியி ருந்தான். அதற்காக உணவும் தேடி எடுத்துக்கொண்டு இரு வரும் புறப்பட்டனர். காந்தனை எப்படியும் திருத்தி எடுக்க வேண்டும். தனது தங்கையும் பிள்ளைகளும் சந்தோஷமாக வாழவேண்டும் என்பதே அமுதினியின் இலட்சியமாக இருந்தது. சிறைச்சாலை வளாகத்தில் உள்ள கைதிகளைப் பார்த்துப் போவதற்காகப் பலர் கூடியிருந்தனர். அவர்களுக் குள்ளே சாந்தியும் அமுதினியும் எதையெதையோ பேசிக் குசுகுசுத்த வண்ணமிருந்தனர்.

அமுதினியைக் கண்டதும் காந்தனின் கண்கள் சற்றுக் கலங்கிப்போயின. அமுதினி எதுவும் பேசவில்லை. சாந்திதான் கதையைத் தொடங்கினாள். அருகில் அமுதினி யோசித்தவாறு நின்று கொண்டிருந்தாள். “பிள்ளையள் என்ன மாதிரி? பள்ளிக்கூடம் போகினமே? கஷ்டமாய்த்தானிருக்கும். என்ன செய்யிறது? ஒரு மாதிரிச் சமாளிக்கத்தான் வேணும். இதை விட்டாலும் ஒண்டும் செய்ய ஏலாது. நானில்லை யெண்டு யோசிக்க வேண்டாம். இராசையா அத்தானட்டைக் காசைக்குடுத்தால் அவர் வாங்கிக் கொண்டு வந்து தருவார். அவரையும் கொஞ்சம் கவனியுங்கோ. எனக்கு இஞ்சை பிரச்சினை இல்லை.”

காந்தன் கதைக்கக் கதைக்க பூமி பூலோகம் தாங்கு வதாக இல்லை. அமுதினிக்கு அவனை அடித்து முறித்துப் போட வேண்டும் போல இருந்தது. “இப்பவும் சாராயம் விக்கினம் எண்ட நினைப்பிலைதான் அத்தான் இருக்கிறார்” மனதிற்குள் பொருமினாள் அவள். “சாந்தி! நீ ஒண்டுக்கும் யோசியாதை. நாலாந்திகதி சுதந்திரதினமல்லே. அதுக்கு எல்லாரையும் விடுவங்களாம். எப்பிடியும் நான் வெளியிலை வந்திடுவன். அது மட்டும் இராசையா அத்தானட்டைக் காசைக்குடுத்து வாங்கி வில்லுங்கோ என்ன?”

“நாய்ப்பயல். செய்யக்கூடாத வேலையைச் செய்து

போட்டு உள்ளுக்கை வந்திருந்து கொண்டும் அவற்றை கொழுப்பைப்பார். சுதந்திரதினத்துக்கு வெளியிலை வரப்போறாராம். திருப்பியும் சாராயந்தான் விக்கப்போறார் போலை. குற்றஞ் செய்தவன் திருந்தவேணுமெண்டுதானே சுதந்திரதினத்திலை மன்னிப்புக் குடுக்கிறது. இந்தப் பறப்பான் திரும்பியும் வந்து கள்ளச்சாராயம்தான் விக்கப்போறா னெண்டால் இவனுக்கு என்னத்துக்கு விடுதலை. உவன் மறியலிலையே கிடந்து சாகலாம்." என்று மனதிற்குள் பொருமியபடி தங்கையின் கையிலிருந்த சாப்பாட்டுப் பையைப் பறித்துக்கொண்டு வேகமாக நடந்தாள் அமுதினி. சாந்தி அமுதினியைப்பார்த்தாள். திரும்பி கணவனைப்பார்க்க சாந்திக்கு மனம்வரவில்லை.

# நூல் விழுங்கியள்

"ஐயா! டயலக் காட் ஒண்டு எடுக்க லாமோ?"

குமாரய்யாவும் ரங்கநாதனும் சுவாரஸ் யமாகப் பேசிக்கொண்டிருந்ததை யாரோ குழப்புவது போல இருந்தது.

"பத்மா! இந்த அம்மாவுக்கு ஒரு காட் எடுத்துக்குடுங்கோடா" ரங்கநாதன் அங்கு வேலை செய்யும் பத்மாவுக்கு அன்புக் கட்டளையிட்டு விட்டு குமாரய்யாவின் முகத் தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ரங்கநாதன் படித்துவிட்டு வேலை யொன்றும் கிடைக்காததால் 'நாதன் கொமினிக் கேஷன்" என்ற பெயரில் ஒரு தொழிலிடத்தை வகுத்துக்கொண்டிருந்தான்.

இந்தக்காலம் இருக்கின்ற விஞ்ஞான வசதிகள்போல நிறையவே இல்லாத காலமது. அப்போது வெளிநாடுகளுக்குச் சென்றவர் களுடன் பேசுவதென்றால் கடவுளிடம் வரம் பெற்றது மாதிரி. இந்தக் கஷ்டமான காலம்

ரங்கநா தனுக்கு வாழ்க்கையை வளமாக்கிக்கொள்ள வழிவகுத்து விட்டது. அவனுடைய இரண்டு அக்காமார் வெளிநாடுகளில் இருந்தனர். ஒருவர் லண்டன், ஒருவர் சுவிஸ்.

அவர்கள் இருவரும் தொலைபேசியில் அழைப்புக ளைப் பெறுவது சம்பந்தமான உதவிகளை தம்பிக்குச் செய்து கொடுத்திருந்தனர். ரங்கநாதனும் ஒரு ரெக்னிக்கல் மூளை உள்ளவன் என்பதால் இலகுவாக அந்தத்துறையில் முன்னேற வாய்ப்பாக இருந்தது.

ரங்கநாதனின் வீட்டிற்கு மேற்குப் பக்கமாக ஒரு பிள்ளையார் கோவில். அந்தக் கோவிலின் பிரதம குருக்கள் ரங்கநாதனின் தாயினுடைய தகப்பன். தம்பை யாக்குருக்கள் என்றால் எல்லோருக்கும் நன்கு தெரியக் கூடியவர். நெடிய தோற்றம், நடக்க நடக்க ஆடும் நீண்ட குடுமி, இடக்கையை மட்டும் வீசிவீசி நடக்கும் தொங்கு நடை, நல்ல ரோமத்தோடு கூடிய தொளதொளவென்ற உடல்.

அவர் கோவிலில் உலாவினாலே ஒரு தனி அழகு. அவரின் பேரன்தான் இந்த ரங்கநாதக்குருக்கள். ரங்கநாதனும் ஓரளவுக்குப் படித்திருந்ததால் நாட்டு நடப்புகளில் நல்லதை ஏற்கவும் அல்லாததை விட்டு விடவும் கூடிய ஒரு உணர்வை வளர்த்துக்கொண்டிருந்தான். அதனால்தான்...

பக்கத்து ஊரைச்சேர்ந்த குமாரசாமியைத் தனது நிறுவனத்தில் இணைத்துக்கொள்ள அவனால் முடிந்தது.

அங்குவேலை செய்யும் பத்மாவும் குமாரசாமியின் ஒரு உறவுக்காரிதான். இவர்கள் இருவரும் அங்குவேலை செய்வது ரங்கநாதனின் உறவினர்களுக்கு அவ்வளவு விருப்பமானதாக இருக்கவில்லை. ஆனால் குமாரசாமியும் பத்மாவும் ரங்கநாதனின் உள்ளத்திற்கு விருப்பமுள்ளவர்க ளாக இருந்தார்கள் என்பது மற்றவர்களுக்குத் தெரியாது போனாலும் அவர்களின் உண்மைத்தன்மையும் விசுவாசமும்

கறைபடியாத உழைப்பும்தான் ரங்கநாதனுடன் அவர்களை ஒட்டி உறவாட வைத்திருந்தது.

பிள்ளையார் கோயில் திருவிழாக்கள் அல்லது பெரிய அளவிலான வேறு வேறு நிகழ்வுகள் நடக்கும் போதெல்லாம் பத்மா தனது தாயோடும் உறவினரோடும் கோயிலுக்கு வருவதுண்டு. ஆனால் குமாரசாமியை ரங்க நாதன் ஒருநாளாவது கோயில் சூழலில் கண்டதேயில்லை. ரங்கநாதனுக்கு இது ஒரு ஆச்சரியமானதாகவே இருந்தது.

குமாரசாமியை இதுபற்றி ஒருநாளைக்குக் கேட்க வேண்டுமென்று ரங்கநாதன் நினைப்பதுண்டு. ஆனால் சந்தர்ப்பம் சரியாக இருப்பதில்லை. அதனால் கேள்விக்கான சூழல் நீண்டு கொண்டே போனது. இன்று ஒருவரோடு ஒருவர் நன்கு பேசக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருந்தது.

"என்ன என்ரை முகத்தையே பாத்துக்கொண்டிருக் கிறியள்?" குமாரசாமி மெல்லிய சிரிப்பும் ஆச்சரியமும் கலந்த குரலில் கேட்டான்.

"இல்லைக் குமாரப்பா, எங்கடை பிள்ளையார் கோயிலிலை மணியடிக்குதெண்டால், என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் அதுகளையெல்லாம் விட்டு விட்டு, நெஞ்சிலை கையை வைச்சுத்தடவிக் கும்பிடுகிற நீங்கள், உந்தக்கோயிலடிக்கு வந்ததை நான் ஒருநாளும் காண இல்லையே. அதுதான் ஏன் எண்டு எனக்கு விளங்குதில்லை."

குமாரசாமியை குமாரப்பா என்று கூப்பிடுவது ரங்க நாதனுக்குப் பழக்கமான ஒன்றாகிப் போய்விட்டது. அதில் ஒரு இனந்தெரியாத அன்புப்பிணைப்பு இழையோடிக் கொண்டிருந்தது.

ரங்கநாதன் "குமாரப்பா" என்று கூப்பிடும் போதெல் லாம் குமாரசாமியின் உள்ளம் நெக்குருகும். அவனு டைய உறவினர்களோடு ஏற்படாத நெருக்கமொன்று தனக்கும் ரங்கநாதனுக்கும் ஏற்படுவதை எண்ணி எண்ணிப்

புளங்காங்கிதமடையும்.

தங்களைப் படித்தவர்களாக அடையாளம் இட்டுக் கொண்டு மற்றவர்களை கீழ்த்தரமான முறையில் கையாள் பவர்களைக் காணும் சந்தர்ப்பங்களில் நெருப்பாகக் கொதிப் பான் குமாரசாமி. தெரிந்தோ தெரியாமலோ தனது உறவி னர்கள் அல்லது ஊரவர்கள் உயர்சாதிக்காரர் என்று சொல் லப்படுபவர்களால் வஞ்சிக்கப்பட்டால், அன்றிப் பழித்துரைக் கப்பட்டால் இந்த உலகத்தையே அடித்து நொருக்கி விட வேண்டுமென்று துடியாய்த் துடிப்பான் அவன்.

ஆனால்...

ரங்கநாதனின் அப்பழுக்கில்லாத அன்புப்பிடிக்குள் சிறுகுழந்தைபோல அகப்பட்டுக் கொண்டு துடிப்பான் குமாரசாமி. அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்பதன் அர்த்தத்தை அவன் அச்சந்தர்ப்பங்களில் உணர்ந்து கொள்ளத்தவறுவதில்லை.

ரங்கநாதனின் கேள்விக்கான பதிலை எப்படிச் சொல்வதென்பது அவனுக்கு விளங்காதிருந்தது. சொல்வ தற்கு ஒருபுறம் வெட்கமும் ஒரு புறம் ஆத்திரமுமாக இருந்தது.

“தம்பி! நீங்கள் இவ்வளவு தூரம் தூண்டித் தூண்டிக் கேக்க, நான் அதைச் சொல்லாது போனால் நடந்து முடிந்துபோன ஒரு விடயத்தின் உண்மைத்தன்மை ஒருவருக்குமே தெரியாமல் போய்விடும். அதனாலைதான் எனக்கும் அதைச் சொல்லிவிடவேணுமெண்டு படுகுது” என்ற பீடிகையுடன் குமாரசாமியின் வாக்குமூலம் தொடர்ந்தது.

“அப்ப நான் படிக்கிறகாலம்... புலோலி அ.த.க. பாடசாலையில் படிச்சுக்கொண்டிருக்கிறன். எட்டாம் வகுப்பு. ஒரு வகுப்போ இரண்டு வகுப்போ பெயில் விட்டதாக ஞாபகம். அப்ப பதினைந்து வயதிருக்கும் எண்டு வையுங்கோவன். என்னை எல்லாரும் ஜெமினிகணேசன்

வாறார் எண்டுதான் சொல்லுவாங்கள்.

மற்றும் பொடியங்களைப் போலை நான் கோயில் குளமெண்டு அதிகமாய்ப் போறதில்லை. இருந்தாலும் தெட்சணாமூர்த்தி தவில் வாசிக்க வாறாராம், இந்தியாவிலை இருந்து நாதஸ்வர வித்துவான்கள் வருகினமெண்டால் அங்கைபோய் முன் வரிசையிலை இருந்துவிடுவன். இசையால் வசமாகா உலகமெது? அப்பிடியே மயங்கிப் போய் விடுவன். அதைவிட, உந்தக்கோயில் குளங்களிலை நடக்கிற புதினங்களையும் கூத்துகளையும் பாக்கப் பாக்க எனக்கு விசர் பிடிக்கும் தம்பி.

"உங்களுக்குப் பிடிக்காத கூத்துகள் எண்டால் என்ன மாதிரிக் கூத்துகளெண்டு சொல்லுங்கோவன்" இடைக்கேள்வி ரங்கனுடையது.

"தம்பி! கையிலை மடியிலை காசில்லாததுகள் அங்கினை கிடைக்கிற சில்லறையளைக் கொண்டு வந்து அரிச்சினைக்குக் குடுத்தால் அரை மனத்தோடை வேண்டா வெறுப்பாய் என்னவெல் லாமோ சொல்லுறவை. காசுக் காறர், பட்டுச்சாறியள், வேட்டியள் உடுத்தவை வந்து நூறு இருநூறு எண்டு தட்டத்திலை போட்டால் அவையின்ரை கூத்தை ஏன் பாப்பான். அவற்றை மட்டுமில்லை பெண்சாதி பிள்ளையளின்ரை நட்சத்திரமெல்லாம் பாடமாக்கி வைச்சது மாதிரிச் சொல்லுவினம். அதையும் கொஞ்சம் மைக்குக்குக் கிட்டப் போய் வீச்சாகச் சொல்லுவினம். இதென்ன கூத்தோ இல்லாட்டி வேறை என்னண்டு சொல்லுங்கோவன்.

"போதாக்குறைக்கு அவைக்கு வடிவாய் திருநீறும் போட்டுக்கையளிலை நூலும் கட்டி விடுவினம். அப்பதானே அடுத்த வெள்ளியும் வருவினம். உது கையிலை கயிறு கட்டுறது எண்டு நான் நினைக்கிறதில்லை. அவையளுக்கும் இவை கயிறு விடுகினம் எண்டுதான் நான் நினைக்கிறது"

"சுத்திச் சுழலாமல் விசயத்துக்கு வாருங்கோவன்.

ஆரும் வந்தினமெண்டால் இண்டைக்கும் இந்தக்கதை முடியாமல் பேந்து தொடர்கதையாத்தான் போகும்."

ரங்கநாதனின் அங்கலாய்ப்பு இந்தக்கதையைக் கெதியிலை கேட்டுவிடவேண்டும் என்பதை வெளிக்காட்டியது. குமாரய்யா சொல்லவிருக்கும் விடயத்தில் ஏதோவொரு மர்மம் இருக்கும் என்பது மட்டும் அவனுக்குத் தெரிந்திருந்தது. அந்த மர்மம் என்ன என்பதே அங்கலாய்ப்பாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

"உப்பிடித்தான் உங்கடை பிள்ளையார் கோயிலிலை பிள்ளையார் கதை நடந்த நேரம். எங்கடை ஆக்களும் ஒரு பத்துப்பன்னிரண்டு பேரிருக்கும். வேறை ஊரிலை இருந்தும் கொஞ்சப்பேர் வருவினம் இவை எல்லாம் கோயிலுக்கு வெளியிலை இருக்கிற ஆக்கள். தாரா உண்ணியள் கடிக்க கடிக்க சொறிஞ்சு கொண்டிருப்பினம்.

"என்ரை சினேகிதங்கள் கேட்டினம் மச்சான் இண்டைக்குப் பிள்ளையார் கோயில் காப்புக் கடைசி. நல்ல சனம் வரும். பைம்பலாய்ப் போவமே!" அவங்கடை ஆய்க்கினைக்கு நானும் இணங்கினன்.

கோயில் வாசலில் அகன்று கிளைபரப்பி பெரிய ஆலமரம். அதன் கீழே கூட்டி விட்ட தரை, அழகாக இருந்தது. ஆலமரத்தில் பழங்கள் இருப்பதுபோல அலங்கார விளக்குகள், ஒலிபெருக்கிகள். நாங்கள் ஊர்க்கதைகள் பேசிக்கொண்டிருந்தம். பூசை நடந்து கொண்டிருந்தது. நாங்கள் மெல்ல எழுந்து கோயில் நடைமுறைகளுக்கு அமையிறது போல வாசலுக்குப் போனம்.

கோயிலுக்கு உள்ளையிருந்து சனம் வெளியிலை வர முயற்சி செய்யிறது தெரிஞ்சது. ஐயரைச்சுற்றி அதுதான் உங்கடை அம்மப்பாவைச்சுற்றி ஒரே சனம்.

ஒவ்வொருதராய் வந்து கையிலை இருந்த நூலைக் கழட்டி ஐயரிட்டைக் குடுத்தினம். ஐயரும் அதை யெல்லாம்

வாங்கிக் கும்பத்திலை போட்டார்.

சங்குகள், சேமக்கலங்கள் சத்தத்தோடு பிள்ளையார் வெளிவீதி வந்து கொண்டிருந்தார். வெளிவாசலுக்குப் பிள்ளையார் வந்திட்டார். வெளியிலை நிண்ட சனங்களும் முண்டியடிச்சுக்கொண்டு வந்தினம். அதிலை எனக்குத் தெரிஞ்ச கனபேர் இருந்தினம்.

"உங்கடை கையிலை இருக்கிற நூல்களை ஒவ்வொருதராய் கழட்டுங்கோ" என்று ஐயர் சொல்ல எங்கடை ஊரிலை இருக்கிற ஏரம்பு என்றவர் முன்னுக்கு வந்தார். தன்ரை கையிலை இருந்த நூலைக்கழட்டினார்

ஐயர் அந்த நூலைத் தொடக்கூட இல்லைத்தம்பி. ஒரு வாழைப்பழத்திலை ஒரு பாதியைப்பியச்சு, அதுக்குள்ளை இந்து நூலைச் செருகி மறைச்சு விழுங்கச் சொன்னார். அந்த மனிசன், 21 நாளும் ஒரு நேரச்சோத் தோடை இருந்த மனிசன் அந்த நூலோடை வாழைப் பழத்தை வாயிலை போட்டு மிண்டி விழுங்கிச்சுது. ஐயர் தீர்த்தம் குடுத்தார். அதையும் வாயிலை விட்டுது. தான் ஏதோ ஒரு பெரிய காரியத்தைச் செய்து விட்டது மாதிரி மெல்ல விலகினார்."

என்று சொல்லிக்கொண்டிருந்த குமாரய்யா தன்னுடைய கண்களை உடம்பின் மேல் பாயவிட்டு...

"இஞ்சை பார்தம்பி! என்ரை உடம்பெல்லாம் எப்பிடி மயிர்க்கூச்செறியுது எண்டு பாத்தியளே.... இண்டைக்கு இந்தக் கதையைச் சொல்ல இப்பிடியெண்டால் அண்டைக்கு நான் என்ன நிலையிலை இருந்திருப்பன்னெண்டு யோசிச்சுக் கொள்ளுங்கோவன்." என்று சொல்லி முடிக்கவும் ரங்கநாதன் பேய் பிடித்தவன் போல விறைத்துப்போயி ருந்தான்.

"உண்மையாய் உப்பிடி நடந்ததோ?" ரங்கநாதனின் குரல் வெட்கப்படுவதுடன் குமாரய்யாவைப் பார்க்க அவனுக்குப் பயமாகவும் இருந்தது. குமாரய்யா சொன்னார்

"அந்த ஏரம்பு எண்ட மனிசன் ஆரெண்டு தெரியுமோ? எங்கடை ஊர் ஆக்களுக்கு மட்டுமில்லை வெளியூர் ஆக்களுக்கே கூத்துக் பழக்கிற ஒரு அண்ணாவி. ஏரம்பு அண்ணாவி எண்டால் தெரியாதவை இல்லையெண்டு சொல்லலாம். அப்பிடியான ஒரு அண்ணாவி, தன்ரை கையிலை கட்டின நூலை வைச்சுப் பிசைஞ்ச வாழைப்பழத்தை விழுங்கினதை இண்டைக்கும் நினைக்க நினைக்க அங்கை நிண்ட நூறு பேரை வெட்டிச்சரிச்சாலும் என்ரை ஆத்திரம் தீராது தம்பி. உங்கடை ஆக்களெல்லாம் மனிசராகவே இருந்தவை. மிருகங்களை விடக் கேவலமானவையள், கொடூரமானவையள் எண்டு நினைச்சுக்கொள்ளுங்கோ.

உங்கடை பெரிய சாதிக்காறற்ரை காப்புநூல்களைக் கேணியிலை கும்பத்தோடை சரிக்கவும் எங்கடை அப்பாவியளின்ரை நூலை அவரவரே விழுங்கவும் எந்தக் கடவுள் கட்டளையிட்டது? அப்பிடிக் கடவுள்தான் கட்டளை யிட்டதெண்டால், அந்தக் கடவுள் எங்களுக்கு வேண்டாவே வேண்டாம். ஆனால் இந்த மிருகத்தனமான செயலை என்னாலை மன்னிக்கவே முடியாது. அதுதான் தம்பி அண்டையிலை இருந்து உந்த வாசலுக்கே வாறதில்லை யெண்டு விட்டிட்டன்."

ரங்கநாதன் விக்கித்துப் போனான். கட்டியிருந்த நாலுமுழவேட்டி கழன்று போவதுபோல இருந்தது. இந்தப் பாவத்திற்கான தண்டனை ஏழேழு பிறவியிலும் தீர்ந்து போகாது என்பது போல இருந்தது அவனது பார்வை.

உங்களுக்குத் தெரியுந்தானே எங்கடை ஊரிலை ஒரு பிள்ளையார் கோயில் சின்னதாக வடிவாகக் கட்டியிருக் கிறம். அங்கை ஒருதரும் நூல் விழுங்கிறதில்லை.

# மணப்பாவை

"எங்கை பிள்ளை தம்பியைக்காணன். தூரப் போயிட்டாரோ?" கேற்றைத்திறந்து கொண்டு வரும்பொழுதே பொன்னம்பலத்தார் குரல் கொடுத்துக்கொண்டு வந்தார்.

"இப்பத்தான் வெளிக்கிட்டுக்கொண்டு பேக்கரிப் பக்கம் போயிற்று வாறனெண்டு போனவர். எப்ப வாறாரோ தெரியேல்லை?" பத்மா சொல்லிவிட்டு பொன்னம்பலத்தாரைக் கடைக்கண்ணால் பார்த்தாள்.

"ஏன் சித்தப்பா ஏதும் அவசர அலுவலோ?"

"இல்லைப்பிள்ளை. எங்கட மோகனுக்கு கனகாலமாய் ஒரு பெம்பிளை தேடுறம். ஒரு இடமும் அம்பிடுறபாடாய் இல்லை. அவனுக்கும் முப்பத்தி மூண்டு வயதாகுது. இப்ப ஒருமாதத்துக்குள்ள புறோக்கர் கருணாநிதியிட்டை இவன்ரை குறிப்பைக் குடுத்தனாங்கள். மீசாலையிக்கை ஒரு பிள்ளை இருக்குதாம். நல்ல இடமெண்டு சொல்லுறான். ஒருக்

கால் போய்ப்பாப்பம் எண்டு இருக்கிறம். அதுதான் தம்பியையும் கூட்டிக்கொண்டு போவமெண்டு மனிசி ஒற்றைக்காலிலை நிக்கிறா. தம்பியும் உந்த விசயத்திலை கொஞ்சம் ஊரடிபட்டவர்தானே... அதுதான் பிள்ளை, வாற புதன்கிழமை நல்ல நாள். வளர்பிறையுந்தானே... ஒருக்கால் போய்ப்பாத்துக்கொண்டு வருவமெண்டு யோசிக்கிறம். அதுதான் தம்பி எப்பிடியும் வரோணும். மறக்காமல் சொல்லு பிள்ளை... அப்ப போயிட்டு வரட்டேயம்மா."

"போயிட்டு வாங்கோ சித்தப்பா. நான் எப்பிடியும் அவரை வரச்சொல்லுறன்."

"மோகனும் பாவம். வயதும் ஏறிக்கொண்டு போகுது. அவன்ரை அலுவலும் முடிஞ்சால் அதுகள் பேசாமல் தங்கடை பாட்டைப் பாத்துக்கொண்டு சந்தோசமாய் இருக்குங்கள். எல்லாற்றை குடும்பத்திலும் ஒவ்வொரு குறை இருக்கத்தான் செய்யுது. விதியெண்டு சொல்லுறது இதுகளைத்தான் போலை" பத்மா தனக்குள்ளாக இப்படி நினைத்துக் கொண்டாள்.

அண்ணாச்சாமி பாவம். இரவிரவாக பேக்கரியில் வேலை செய்துவிட்டு, வீட்டுக்கு வந்து கொஞ்சம் சரியலாமென்றால் அடிக்கடி பேக்கரிப் போன் அவனோடு கதைக்கும்.

"சாமியண்ணை ஒருக்கால் வந்திட்டுப்போங்கோ. அவசியமான அலுவல் ஒண்டு. பஞ்சியைப் பாராமல் ஒருக்கால் வந்திட்டுப்போங்கோ... அரை மணித்தியாலத் துக்குள்ளை நீங்கள் வீட்டை போகலாம். கோவிச்சுக் கொள்ளாமல் ஒருக்கால் வந்திட்டுப்போங்கோ அண்ணை"

என்ன செய்ய அண்ணாச்சாமியும் உலகளந்த பாப்பா. என்ன இருந்தாலும் வஞ்சகம் இல்லாதது. நல்லதைத்தான் நினைக்கும் நல்லதைத்தான் செய்யும்.

இந்தக்காலம் பொல்லாத காலம். கூட இருந்தே

குழிபறிக்கிறகாலம். பக்கத்தில் இருந்து கொண்டே காட்டிக்குடுக்கிற கூட்டம். எல்லாத்துக்கும் வசதியாக போன் ஒண்டு வந்திருக்கு. பிறகென்ன? நடத்தி முடிக்க வேண்டிய துதானே.

இன்று காலையிலும் அண்ணாச்சாமியின் போன் அவனை நித்திரை கொள்ளவிடவில்லை. ஏதோ அலுவலா கத்தான் சென்றிருந்தான். நீண்ட நேரமாக பத்மாவும் காத்துக் காத்துக் களைத்துப் போனாள். "பிளசர்" கேற்றடியில் இறுமிக்கொண்டு வந்து நிற்க, பத்மா ஓடிச்சென்று கேற்றைத் திறந்து விட்டாள்.

பிளசரை நிறுத்திவிட்டு அண்ணாச்சாமி திரும்பி வருவதை எதிர்பார்த்திருந்த பத்மா, "என்னப்பா! இஞ்சாருங்கோ பொன்னம்பலச் சித்தப்பா வந்திட்டுப்போறார். மோகனுக்குப் பெம்பிளை பாத்திருக்காம். மீசாலைப் பிள்ளையாம். புதன்கிழமை நல்ல நாளெண்டு பெம்பிளை பாக்கப்போகினமாம். உங்களைப்பற்றியும் புளுகுபுளுகெண்டு புளுகிப்போட்டு தம்பியைக் கட்டாயம் வரச்சொல்லுங்கோ எண்டு சித்தி ஒற்றைக்காலிலை நிக்கிறாவாம். ஒருக்கால் போகத்தானே வேணும். சரியில்லைத்தானே அப்பா"

ஒரு பெரிய லெக்ஷர் அடித்தது மாதிரிப் பொரிந்து தள்ளிவிட்டு புருசனின் முகத்தையே பார்த்துக்கொண்டி ருந்தாள் பத்மா. நேரகாலம் தெரியாமல் கதைத்துக் கழுத்து முறிபட்ட அனுபவங்கள் பத்மாவுக்கு நிறையவே இருந்தது. அதை நினைத்து வருந்திக்கொண்ட சம்பவங்களும் சந்தர்ப் பங்களும் அவளுக்குக் கிடைத்த சிறந்த அனுபவங்கள். எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு இப்பொழுதும் நேரம் காலம் பாராது இதைச் சொல்லிவிட்டேனே என்ன சொல்லுகிறாரோ தெரியவில்லையென்று ஆதங்கப்பட்டாள். சிறிது நேரம் ஆறி இருக்கவிட்டுச் சொல்லியிருக்கலாமே. இரவு முழுவதும் நித்திரை விழித்து வேலைசெய்து விட்டு

வந்தவர். திரும்பவும் ஆய்க்கினைப்பட்டுக்கொண்டு போய் வந்தவுடன், அவருடைய மன நிலை என்னவாக இருக்கு மெனத் தெரிந்து கொள்ளாமல் ஒரு விடயத்தைத் தெரிவித்தல் என்பது சிலவேளைகளில் பிரச்சனையையும் விளைவித்து விடலாமல்லவா? என்று தனக்குள்ளாக சிந்தித்துக்கொண்டாள்.

உண்மையிலேயே பலகுடும்பங்களில் பிழைகள் எதுவும் நடக்காமலே பிழையான கற்பனைகளை உருவாக்கி, அதன் மூலம் துன்பத்தை விலைக்கு வாங்கி துன்பப் படுபவர்களே இன்றைய உலகில் அதிகமாக உள்ளனர்.

இதில் அண்ணாச்சாமி குடும்பமும் தன்னை இணைத்துக்கொள்ளாமல் இருக்கமுடியாது. அண்ணாச்சாமி திடுதிப்பென்று பேசுபவனாக இருந்தாலும் யார்மீதும் அபாண்டமான பழிசுமத்தப் பயப்படுபவன். அடுத்தவருக்கு உதவி செய்வதில் மிகுந்த ஆர்வமுள்ளவன். அதுபோல பத்மாவும் அவனுக்கு ஏற்றவள்தான். ஆனால் அப்பாவித் தனம் நிறைய உள்ளவள். அதனால் அடிக்கடி வீண் சண்டைகள் ஏற்படுவதும் பின்னர் இரவோடு சுமுகமாகி விடுவதும் இயல்பானது.

"ஒரு பிளேன்ரி போடுங்கோ... அய்யாவின்ரை கடையிலை இண்டைக்குப் பிளேன்ரி வாய்க்கல்லை. தண்ணி நல்லாய் ஆறிப்போச்சு. என்ன செய்யிறது. நெடுகப் போற னாங்கள். நல்ல கடை எண்டுதானே போறனாங்கள். அதைச் சொல்லிக்காட்டுறது அவ்வளவு நல்லதில்லை எண்டிட்டு குடிச்சதுதான். வாய் இதமில்லாமல் இருக்கு. இஞ்சி இருந் தால் இடிச்சுப்போட்டு நல்ல பிளேன்ரி ஒண்டு போடுங்கோ. குடிச்சால்தான் உடம்பு அலுப்பு எடுபடும்" சொல்லிவிட்டு பத்மாவை ஓரக்கண்ணால் பார்த்தான் அண்ணாச்சாமி.

பத்மா நடந்துபோகும் அழகைப்பார்த்து அண்ணாச் சாமி அசந்துபோனான். மற்றும் நாளிலை இப்படிச்சொன்னால்

குலுக்கிக் கொண்டுபோகும் பத்மாவா இன்று இந்த ஒயில் நடை போடுகிறாளென்று ஆச்சரியமாக இருந்தது அவனுக்கு. ஆனால் இந்த அமைதியும் ஆதரவும் ஏனென்று அவனுக்குத் தெரியாமலில்லை. தன்னை எப்பிடியென்றாலும் சித்தப்பாவின்ரை மகனுக்குப் பெம்பிளை பாக்க அனுப்பி வைக்க வேண்டுமென்ற இறுக்கம்தான் அந்த நடையில் தெரிந்தது அண்ணாச்சாமிக்கு.

குசினிக்குள் ஆரவாரமாக சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தது. அண்ணாச்சாமி எதையும் கேட்டுக் கொள்ளாததாக ஆழ்ந்த சிந்தனையில் ஆடாமல் அசையா மல் அரைச்சுவரில் இருந்தவண்ணம் தூணில் முதுகைச் சாத்திக்கொண்டான். முழங்காலில் கையைக்கொடுத்து இறுக்கிப்பிடித்தால் அவன் ஏதோ ஆழமாக யோசிக்கிறான் என்று அர்த்தம்.

வெளிநாட்டிலை உள்ளவர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு நல்ல பெம்பிளை கிடைக்கவேண்டும் என்று ஆசைப்படுவார்கள். சம்மந்தம் கிடைக்கிறதேயென்று ஆசைப்பட்டு அருமையாய் வளர்த்த பிள்ளைகளை அனுப்பிவிட்டு அதனால் படுகின்ற வேதனைகள் இருக்கிறதே அவை சொல்லில் அடங்காதவை. இப்படித் துன்பத்தில் அகப்பட்டுத் துடிக்கின்ற பல குடும்பங்களின் சோகக் கதைகளைக் கேட்டுக் கொதித் திருக்கிறான் அண்ணாச்சாமி.

திருமணமென்ற போர்வைக்குள் அகப்பட்டுப்போய் போர்வையைத் தூக்கி எறிந்துவிட்டு விவாகரத்தோடு வந்தவர்கள் உண்டு. மாப்பிள்ளை அங்கு வேறு திருமணம் செய்தவர் என்பதை அறிந்து கொண்டும் ஏனோ தானோ என்று வாழ்க்கையை நடாத்திக்கொண்டிருந்தவர்களும் நிறையப்பேர் உண்டு.

“பெம்பிளை பாக்கப்போறதெண்டால் சும்மா லேசான காரியமில்லை. இதிலை சிலர், சிலபேரை மாட்டிவைச்சுக்

கொள்ளுவாங்கள். கலியாணத்துக்குப் பிறகு ஏதும் நடந்தால், கூட நிக்கிறவையளையும் சாட்டுச்சொல்ல சுகமாக இருக்கும். அதுக்காகவேனும் சிலபேரை முக்கியப்படுத்திக் கூட்டிக் கொண்டு போவாங்கள். இருந்தாலும் என்ன? மாமாவின்ரை பிள்ளைக்கு பெம்பிளை பாக்க நான் முன்னுக்கு நிக்காமல் வேறை ஆர் நிக்கிறது. அதுதான் மாமியும் ஒற்றைக்காலிலை நிண்டிருக்கிறா." சந்தேகங்கள், சலனங்களின் மத்தியிலும் தன்னை முக்கியப்படுத்திக்கொண்டிருக்கிறானே அதுதான் அண்ணாச்சாமியிடமுள்ள விசேஷமான தன்மை.

பத்மா தேநீர்க்கோப்பையுடன் வரும்போதே "என்ன கடுமையாய் யோசிக்கிறமாதிரி இருக்கு" என்று சொல்லிக் கொண்டு தேநீர்க்கோப்பையை அண்ணாச்சாமியின் கைகளில் கொடுத்தாள். அவனுடைய களைப்புக்கு இதமாக இருந்தது பத்மாவின் இஞ்சிப்பிளேன்ரி.

"என்னப்பா யோசிக்கிறது? என்ரை மாமாவின்ரை பிள்ளைக்குப் பெம்பிளை பாக்க நான் போகாமல் வேறை ஆர் போறது?" துணிவோடும் நம்பிக்கையோடும் அண்ணாச் சாமி சொன்னது பத்மாவுக்குத் தேன் வார்த்தது போல இருந்தது.

பொன்னம்பலத்தாரும் மோகனுக்குப் பெம்பிளை பாராத இடமில்லை. போறஇடமெல்லாம் ஒவ்வொரு குறைசொல்லிக் குழப்பிப்போடுவினம். அவரும் ஒரு பொல்லாத சாதிமான். தான் பிடிச்ச முயலுக்கு மூண்டுகா லெண்டால் மூண்டு கால்தான். நாலுகாலெண்டவையோடை சங்கார்த்தம் வைக்கமாட்டார். சரிபிழை என்பதற்கப்பால் தான் சொல்லுறதுதான் சட்டம். உதாலைதான் கனஇடத்தில பிரச்சனை வந்தது. அந்தப் பிரச்சனைகளைப் பற்றித்தான் அண்ணாச்சாமியும் பத்மாவும் தங்களுக்குள் பகிர்ந்துபேசிக் கொண்டனர்.

"உனக்கு ஞாபகமிருக்கோ? போன தைமாதம்

உடுவிலிலை ஒருபிள்ளை இருக்கெண்டு கதைச்சு வந்தினம். அதைப்பாக்கப்போறதெண்டு யோசிச்சுக்கொண்டிருக்க, ஆரோ சொன்னதாம் பெம்பிளையின்ரை தமையன் ஒரு கோவியப்பெட்டையைக் கட்டினதாமெண்டு. அந்தாள் அதோடை சன்னதமாடத் தொடங்கியிற்றுது. என்ரை குலமென்ன கோத்திரமென்ன கோவியரோடை எனக்கென்ன சகவாசம். இந்தக்கலியாணம் சரிவராது எண்டு மாமா சொன்னது உனக்கு ஞாபகமிருக்கோ? உலகம் போற போக்கிலை உதெல்லாம் ஒரு லூசுக்கதையெல்லோ. மற்றவங்கள் இவையளைப்பற்றி என்ன நினைப்பாங்கள்" அண்ணாச் சாமியின் வாய்க்கக்கல் மெல்ல வெளிவந்தது.

"அதுகள் காசோடை கிடந்து சாகிற ஆக்கள். ஆனமான படிப்புப்படிச்சதுகளே? ஒரு கோதாரியும் விளங் காது. நாட்டிலை என்ன நடக்குது? அவனவன் என்ன செய்து கொண்டிருக்கிறான்? எண்டது உவையளுக்கு விளங்குமே? சாதியை மட்டும் கட்டிப்பிடிச்சுக்கொண்டு நிக்குதுகள். உது களுக்கு ஆரும் கதை சொல்ல முடியுமே?" இது பத்மாவின் வியாக்கியானம்.

பெம்பிளை பாக்கப்போக இன்னும் இரண்டு நாட்கள் நாளை செவ்வாய் ஓடிக்கலைந்தால் அடுத்தநாள் புதன். அதுவும் வந்துவிட்டது அவசரப்பட்டுக்கொண்டு. தெருவில் பொன்னம்பலத்தாரின் குரல் கேட்டது.

"தம்பி! தம்பி! எங்கை நிக்கிறியள்.?"

"நான் இஞ்சை மாட்டுக்கொட்டில் பக்கமாக நிக்கிறன் மாமா. என்ன அவசரமோ?" கூட்டி அள்ளிய வைக்கல் கழிவோடு அண்ணாச்சாமி வெளியில் வந்தான்.

"என்ன மாமா? போறதுக்கான ஆயித்தங்கள் நடக்குதோ?"

"இப்ப என்ன ஆறரை இருக்கும்போலை. மெல்ல மெல்ல ஆக்கள்வந்தின மெண்டால் வெளிக்கிடுறதுதானே!"

"சரிமாமா! பத்மா பிள்ளையை ரியூசனுக்கு விடப்போனது வந்திடுவா. வந்த உடனை இரண்டுபேரும் வாறம். நீங்கள் போய் போற ஆயித்தங்களைச் செய்யுங் கோவன். ஆற்றை வானுக்குச் சொன்னனீங்கள் கலட்டிப் பொடியன் சுந்தரத்தின்ரை வானே? "

"இல்லைத்தம்பி மடத்தடியிலை ஆரோ றஞ்சனாம். எங்கடை மூத்தவன்தான் ஒழுங்கு செய்தது." "எட கோதாரி, றஞ்சன் நல்ல பொடியன்தான். ஆனால் வான் ஓடுற பொடியன் கொஞ்சம் தண்ணிச்சாமி. கொஞ்சம் கவனமாக இருக்க வேணும். நல்லகாரியத்துக்குப் போறம்." "என்னவோ கடவுள் செயல். சரி பாப்பம். தம்பி! வரையுக்கை உந்தப்பொடியன் சுந்தரத்துக்கும் ஒருக்கால் குரல் குடுங்கோ."

பொன்னம்பலத்தாருக்கும் அண்ணாச்சாமி சொன்ன விடயம் மனத்திலை கொஞ்சம் கிலேசத்தை உண்டாக்கி விட்டது. இருமி இருமி நடந்து கொண்டிருந்தார்.

"இந்தக் காலத்துப் பொடியள் வாகனத்திலை ஏறினால் தாங்கள்தான் ராசாக்கள் எண்ட நினைப்பு. நிக்கி றவை வாறவை போறவையெண்டில்லாமல் எல்லாருக்கும் அடிதான். பெற்றோல் அடிக்கமறந்தாலும் தண்ணியடிக்க மறக்க மாட்டினம். என்ன செய்யிறது. காலம் முத்திக் கலிபிரண்டுபோச்சு எண்ணுறமாதிரி எல்லாம் மாறிப்போச்சு. கடவுள்தான் எங்களோடை கூடநிக்கவேணும். வேறை என்ன செய்யலாம்" நடந்து நடந்து பொன்னம்பலத்தார் மந்திரம் உச்சரித்தார்.

குசினிக்குள் ஆரவாரமாக இருந்தது. பத்மா வந்து விட்டாள்.

"என்ன பத்மா! சித்தப்பா வந்திட்டுப்போறார். கெதியாய் வெளிக்கிட்டுக்கொண்டு வாங்கோ எண்டிட்டு போறார். என்ன பிளான்?

"நான் பெம்பிளை வீட்டை வரமாட்டன். சித்தி வீட்டை நிக்கிறன். நீங்கள் போயிட்டு வாங்கோ. அங்கை போய்த் தேவையில்லாமல் பிரச்சனைப்படாதையுங்கோ. அந்தாளும் உங்களை மதிச்சுத்தானே வரச்சொல்லுது" பத்மா கணவனுக்கு ஞானோபதேசம் செய்தாள்.

அண்ணாச்சாமி அரைகுறையாய் பத்மா சொன்னதைக் கேட்டுக்கொண்டு "சுந்தரண்ணைக்கும் ஒருக்கால் குரல்குடுத்துக் கூப்பிடுங்கோ எண்டிட்டுப் போறார், அந்தாள் ஒரு வெடிப்புளுகன். ஒண்டைப்பத்தாய்ச் சொல்லிற மனிசன். அங்கை என்னென்ன நடக்குதெண்டு வடிவாய்ப் பாத்துப் போட்டு இஞ்சை வந்து இல்லாததெல்லாம் வைச்சுக் கதை கட்டுமப்பா. எல்லாம் நல்ல சோடி" அண்ணாச்சாமிக்கு சாடையாய் அலுப்புத் தட்டுவது தெரிந்தது. மெதுவாக எழுந்து கிணற்றடிக்குப் போனவன், குளித்து விட்டுக் கதிரையில் வைக்கப்பட்டிருந்த சிவப்புக்கரை வேட்டி யைக் கட்டி முடிக்கவும் "இந்தாங்கோ இந்தச் சேட்டைப் போடுங்கோ. இது உங்களுக்கு நல்ல வடிவாய் இருக்கும்" பத்மா சிரிப்புடன் சேட்டைக் கொடுத்தாள்.

அண்ணாச்சாமிக்கு கொடுப்புக்குள் சிரிப்பு வந்து தடமடித்தது. தன்னை வடிவெண்டு மனிசி சொன்னால் அதை எப்படி அவனால் நம்பாமல் இருக்க முடியும். பத்மா கொண்டு வந்து வைத்த இஞ்சித் தேநீர்க்கோப்பை வெறுமையானது.

கல்யாணம் முடித்து எட்டுப்பத்து வருடங்கள் கழிந்துபோன நிலையில் இப்பொழுது தன்னை வடிவெண்டு பத்மா சொன்னது உண்மையா? இல்லைப் பொய்யா? என்ற சந்தேகத்துடனும் ஒரு இனந்தெரியாத நமட்டுச்சிரிப்புடனும் தெருவில் நடந்துகொண்டிருந்த அண்ணாச்சாமி சுந்தரத்திற்குக் குரல் கொடுக்க நினைத்தான். தெருவைக் கடந்ததும் "சுந்தரண்ணை! என்ன வெளிக்கிட்டாச்சுதோ?"

என்று சொல்லிக்கொண்டு சுந்தரத்தின் வீட்டுக்கேற்றைத் திறந்தான்.

"ஓமோம்! ஆர் சாமியே? வாறன் வாறன். இப்ப தான் வெளிக்கிடுறன்"

"கெதிப்பண்ணுங்கோ அந்தாள் நேரம் பிழைச்சால் எங்களிலை பொறுப்பிச்சுப் போடும்" அண்ணாச்சாமி சுந்தரத்தை விரைவுபடுத்தினான்.

"இந்த மனிசனுக்கு இவ்வளவு வயது வந்தும் இன்னும் வேட்டி கட்டத்தெரியஇல்லை. இஞ்சை பாருங் கோவன் படுறபாட்டை" சுந்தரத்தின் மனைவி புறுபுறுப்பது கேட்டது. அண்ணாச்சாமி ஒரு நளினச் சிரிப்போடு வீட்டிற்குள் நுழைந்தான்.

"என்ன சுந்தரண்ணை, என்ன நடக்குது. கிளித்தட்டு மறிக்கிறது மாதிரி பெரிய அம்பாயப்படுகிறியள். இஞ்சை விடுங்கோ" சொல்லிக்கொண்டு சுந்தரத்தின் வேட்டித் தலைப்பை எடுத்து மடித்துக்கொடுத்து "இப்பிடிக் கட்டுங்கோ அண்ணை" என்று வடிவாகக் கட்டுவித்தான். சுந்தரத்திற்கும் சந்தோஷம் தாங்கவில்லை. இருந்தாலும், தனக்கு வேட்டி கட்டத் தெரியாது என்று மனைவி சொன்னது அவனுக்கு கொஞ்சம் வேதனையாகவும் வெறுப்பாகவும் இருந்தது.

இருவரும் வீதிக்கு வந்ததுதான் தாமதம். உரையாடல் தொடங்கிவிட்டது. சுந்தரம் முதலில் தொடக்கி வைத்தான். "மெய்யே சாமி! பெம்பிளைபகுதி எப்பிடியாம்? ஏதும் அறிஞ்சனியே? நாங்களும் கொஞ்சம் கவனமாக இருக்கவேணும் தெரிஞ்சுதோ. அதுதான் கேக்கிறன்."

"சுந்தரண்ணை! ஆர் எவர் எண்டதெல்லாம் எங்களுக்குத் தேவையில்லாத விடயம். அதெல்லாம் மாமா சூழ்ந்து துளாவி அறிஞ்சிருப்பார். அதைப்பற்றிய கவலை எங்களுக்குத் தேவையில்லை. பொன்னம்பலம் மாமாவின்ரை குணம் உங்களுக்குத் தெரியுந்தானே. அவையின்ரை

குணாதிசயங்கள் நடையுடை பாவனை பிடிச்சுக்கொண்டுதே யெண்டால் சரிதானேயண்ணை"

"எட தம்பி! நீ சொல்லுறது சரிதான். இருந்தாலும் இப்ப மேக்கப்புகளாலையெல்லே எல்லாரும் விளை யாட்டுக்காட்டுகினம். சிலபேர் மேக்கப்பிலை மயங்கிப்போட்டு பிறகுதானே அங்கை அப்பிடி... இஞ்சை இப்பிடியெண்டு தேவையில்லாத பிரச்சனைகளை உருவாக்கிக் கிடந்து தடமடிப்பினம். உவன் பொன்னப்பாவின்ரை கந்த சாமிக்குப் பெம்பிளை அனுப்பின சங்கதி நீ அறிஞ்சனிதானே. அந்தப்பிள்ளை அங்கை போய்ப் படுறபாடு. அவன் பெம்பிளையின்ரை படம் அனுப்பினவேளை சொன்னவனாம் உயரத்தை அளந்து அறிவியுங்கோ எண்டு. இவையும் எல்லாம் அளந்து குறிச்சு அனுப்பிவைச்சினம். இப்ப என்னடா எண்டால் பெம்பிளை வடிவில்லையாம். தன்னைவிட நாலு இஞ்சி உயரமாம். தனக்கு பெம்பிளை பொருத்தமில்லை யாம். இதுகும் ஒரு நியாயமோ? தெரியாமல்தான் கேக்கிறன். இஞ்சினையெண்டால் ஏதும் கதைச்சுப்பேசலாம். அங்கை போனபிள்ளை என்ன செய்யலாம். உந்த வெளிநாட்டுக் கலியாணங்களாலை பெரிய கரைச்சலப்பா" சுந்தரம் பொரிந்து தள்ளினான்.

"மோகனும் அளவு கேட்டு எழுதினவனாம். என்னென்னத்தை அளந்து அனுப்பிச்சினமோ தெரியேல்லை. அவனும் ஒரு லூசன் தானே. எனக்கு மச்சானெண்டாப் போலை நான் பாரபட்சமாய்க் கதைக்கமாட்டன். அவன் இஞ்சை இருக்கையுக்கை சும்மா இருக்கிற நேரமெல்லாம் கைவிரல்களைக் கொழுவி, அதுக்குள்ளாலை சூரியனைப் பார்த்துச் சிரிக்கிறவன். ஆக்கள் கதை கேட்டால் பின்பக்கம் தடவித்தடவிப் பேய்க்கதை கதைக்கிறவன். அவனுக்கும் பெம்பிளை அனுப்ப என்னென்ன சொல்லுகிறானோ?"

"மோகன் வெளிநாட்டுக்குப் போனபிறகும் அப்பிடித்

தானாமோ?" சுந்தரமும் விட்டபாடில்லை.

"ஓமண்ணை, அவனோடை நிக்கிறவேறைபொடியள் அவன்ரை பொழிப்புக்களைச் சொல்லிச் சொல்லி சிரிப் பாங்கள். லூஸ்மோகனெண்டு பட்டப்பெயர் வைச்சிருக் கிறாங்களெண்டால் பாருங்கோவன். எத்தினையோ பேருக்கு இஞ்சையிருந்து பெம்பிளையளை அனுப்பியிருந்தும் எத்தினைபேர் சந்தோசமாகக் குடும்பம் நடத்துகினம். எவ்வளவு பிரச்சினைகள்? வசதி வாய்ப்புள்ளவை ஒரு மாதிரித் தங்கடை பிரச்சினைகளை சமாளிச்சுப்போடுவினம். இல்லையெண்டால் அம்போதான்... எனக்கென்னவோ வெளிநாட்டுக்கலியாணங்களை நினைக்கப் பயமாகவும் வேதனையாகவும் இருக்கு."

"நீ சொல்லுறது சரிதான். கந்தசாமி அண்ணன்ரை மகள் கீதாவைப்பாத்தியே... ஆரோ வெளிநாட்டுப் பொடியனோடை கதைச்சவளாம். அந்தப் பொடியனும் விரும்பியிட்டுதுபோலை. அவனும் பாசம் வச்சிட்டான். அடிக்கடி காசனுப்பிறவனாம். இப்ப கிட்டடியிலை ஒரு மோட்டச்சைக்கிளும் எடுத்திருக்கிறாள். ஆனால் இவ்வளவும் நடந்தும் அவள் முதலிலை கதைச்ச பொடியனோடை தொடர்பாம். இது சரியான வேலையோ எண்டு சொல்லு பாப்பம். இதுவெளிநாட்டுக் கலியாணம்தானே. இதெங்கை சரிவரப்போகுது. கடவுள் தான் உதவி செய்யவேணும்."

சுந்தரத்தின் கதைக்கு அண்ணாச்சாமியும் ஆமாப்போட்டுக்கொண்டிருந்தான். "எனக்கெண்டால் உது சரிவரும்போலை தெரியேல்லை. வீட்டிலை உள்ளவை சரியாயிருந்தால் பிள்ளையளும் ஒழுங்காயிருப்பினம். இல்லையெண்டால்..." என்று அண்ணாச்சாமி விழுங்கி விழுங்கி கதைத்துக்கொண்டு போக "வாருங்கோ, வாருங்கோ..." என்று பொன்னம்பலத்தார் கூப்பிட்டார்.

பெம்பிளை பார்க்கப் புறப்பட்டவர்களைச் சுமந்து

கொண்டு வெள்ளைவான் பறந்தது. ஏற்கனவே அண்ணாச் சாமிக்கிருந்த பயம் பொன்னம்பலத்தாருக்குத் தொற்றி, இப்போது சுந்தரத்துக்கும் தொற்றிக்கொண்டது. வான் போன போக்கு அவ்வளவு நல்லதாகத் தெரிய இல்லை.

"றஞ்சன்ரை வான் நல்லது. ஆனால் றைவர்தான் வில்லங்கமான ஆள். எப்பிடியும் தண்ணி அடிச்சுப் போட்டுத்தான் ஓடுவான். இண்டைக்கும் ஓட்டம் ஒருமாதிரித் தான் கிடக்கு. என்ன நடக்குமோ தெரியேல்லை. அண்ணாச் சாமி சொல்லிமுடிக்கவும் பொன்னம்பலத்தார் மனிசிக்கு மேலாலை போனார். சுந்தரம் அண்ணாச்சாமியைக் கட்டிப்பிடித்தான். "ஐயோ தம்பி! இதென்னப்பு எல்லாரையும் கூட்டோடை குடுக்கப்போறியோ" என்று யாரோ வெட்கத்தை விட்டுக் கத்தியது கேட்டது. முன்னுக்கு வந்த சோடா லொறிக்கு வெட்டின வெட்டிலை எல்லோரும் கதிகலங்கிப் போனார்கள். றைவர் மட்டும் எதற்கும் பயப்பிட்டதாகத் தெரியவில்லை.

போகும் வழியில் வயல்கள், தென்னை மரங்கள், பலாமரங்கள் என குளுகுளுவென்றிருந்தது. றோட்டுக் கரையோடு பெண்வீடு இருந்ததினால் தேடுதல் படலம் இல்லாமல் இலகுவான முறையில் சந்திப்பு நடந்தது. எல்லாமே நல்லதாக நடந்து முடிந்ததும் வான் வந்த பாதையைப் பார்த்து திரும்பியது. வான் திரும்பிக் கொண்டிருக்கையில் குசுகுசுப்புக்கள், பெருமூச்சுக்கள், சிரிப்புக்கள் என நவரசங்களும் ததும்பி வழிந்தது. பாட்டுப் பெட்டியும் தனது கடமையைத் தப்பாது செய்து கொண்டிருந் தது. வரும்பொழுது பாட்டைக் கேட்டவர்கள் போகும் போது பெண்வீட்டுக்கதையில் லயித்துப்போயினர்.

பொன்னம்பலத்தார் வீட்டுக்கேற்றடியில் வான் களையாறிக்கொண்டது. உடம்பை வளைத்து நெளித்து ஒவ்வொருவராக இறங்கிக் கொண்டார்கள்.

"மாமா வரப்போறன். சந்தோசந்தானே... இரவு வேலைக்குப் போறது கொஞ்சம் நித்திரை கொண்டால்தான் நல்லது. போயிற்றுவாறன் மாமி" அண்ணாச்சாமி விரைவாக வீட்டுக்குப் போக வேண்டுமென்று நினைத்தான்.

"தம்பி வீட்டை ஒருக்கால் வந்திட்டுப்போங்கோவன். ஒரு ரீ குடிச்சிட்டுப் போகலாந்தானே"

"இல்லை மாமி இவ்வளவும் குடிச்சது காணாதே"

"சரி சரி பின்னைப்போயிட்டு வாங்கோ"

அண்ணாச்சாமியும் சுந்தரமும் திரும்பவும் ஒன்றானார்கள். சிறிய உரையாடல் ஒன்று முடிவுக்கு வந்தது.

"தம்பி போயிட்டு வாங்கோ பிறகு சந்திப்பம்." தியாகுவும் கடைசிநேரம் கழன்றுவிழத் தயாராக இருந்த வேட்டியை இழுத்துப்பிடித்துக்கொண்டு சுந்தரம் விடை பெற்றான்.

பத்மாவும் சமைத்துவிட்டு வழியை வழியைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுக்கும் பெம்பிளை எப்பிடி என்று அறிந்து கொள்ள மிகவும் ஆவலாக இருந்தது.

அண்ணாச்சாமி கிணற்றடியில் கால்களைக் கழுவிக்கொண்டு சேட்டைக்கழற்றி கொடியில் போட்டுவிட்டு அரைச்சுவரில் சாய்ந்து கொண்டான்.

கொடுப்பிற்குள் சிரிப்பொன்று வெளியில் வரமுடியாமல் தவித்துக்கொண்டிருந்தது.

"என்னப்பா மனதுக்கை சிரிக்கிறியள்? என்ன நடந்தது? பெம்பிளை எப்பிடி? வடிவோ? வீட்டுக்காறர் கதைக்கப் பேச எப்பிடி?" பத்மா அடுக்கினாள்.

"அதுகளுக்கு என்னப்பா குறை? பெம்பிளை கிளிக்குஞ்சுதான். ச்சா... என்ன வடிவானபிள்ளை எங்கடை ஊருக்கை அப்பிடி ஒரு பிள்ளை இல்லை. தேப்பன், தாய் அண்ணன்மார், அக்கா குடும்பம், சித்தப்பா, பெரியப்பா எண்டு எல்லாரும் நல்ல ஆக்கள். நல்ல குணமப்பா. எல்லாரும் சிரிச்ச முகந்தான். வீடும் பெரிய வீடு. வீடு

இருக்கிற காணியே தோட்டத்தோடை பதினைஞ்சு பரப்பு வரும்போலை.”

“அப்ப பேந்தென்ன? மோகனுக்கு நல்ல அதிஸ்டம் அடிச்சிருக்கெண்டு சொல்லுங்கோவன்.”பத்மா குறுக்கிட்டாள்.

“எல்லாம் நல்லதுதான். ஆனால் எனக்குப் பிடிக்கேல்லை” பத்மா ஏங்கிப்போனாள்.

“என்னப்பா ஏனப்பிடிச் சொல்லுறியள்”

“மோகனைப்பற்றி உனக்குத் தெரியுந்தானேயப்பா. உந்தப்பிள்ளையைப் போயும் போயும் அவனுக்கு பொம் பிளையாய் அனுப்பி வைக்கிறதெண்டது எனக்கென்னவோ உள்மனதுக்கு அவ்வளவு நல்லமாதிரித் தெரியேல்லை. இஞ்சினை ஒரு வடிவான பெடியனுக்கு கட்டிக்குடுத்தால் ச்சா... எவ்வளவு சந்தோசமான குடும்பமாக இருக்கும். பேசிற தெல்லாம் கலியாணமில்லைப் பத்மா. அதுகள் ஒரு ஆளுக்கொராள் தோதாகவும் இருக்கவேணும். தெருவிலை போனால் மற்றவை பாத்துப்பொறாமைப்படவேணும். அதுதான் என்ரை விருப்பம். உண்மையுங்கூட. அதாலை தான் அந்தப் பிள்ளையை மோகனுக்கு பெம்பிளையாய் அனுப்ப எனக்கு விருப்பமில்லை.”

பத்மா பேயறைந்தவள் போலப் பேசாமல் இருந்தாள்.

✖

# பரிசு தந்தகதை

அன்று தியாகு நேரத்தோடு எழுந்திருந்தான். பாயைச்சுருட்டி வைக்கவும் அம்மன் கோவில் மணி ஒலி எழுப்பவும் சரியாக இருந்தது. அவன் நேரத்தோடு எழும்புவதற்காக ஐந்து மணிக்கு அலாரம் வைத்திருந்தான்.

கேற்றடியைக் கூட்டித் தண்ணீர் தெளித்து விட்டுத் தனது காலைக்கடன்களை முடித்துக்கொண்டான். தியாகுவின் மகள் மடித்து வைத்திருந்த பட்டு வேட்டியும் சேட்டும் கதிரையில் பக்குவமாக இருந்தது. அதைப் பார்க்கப் பார்க்கத் தியாகுவின் மனத்திற்குள் ஒரு புதிய சந்தோஷ அலை பாய்ந்து கொண்டிருந்தது.

தான் எழுதி அனுப்பிய கதையொன்றுக்கு முதலாவது பரிசு கிடைத்ததும், அதற்கான சான்றிதழையும் பரிசினையும் முதலமைச்சரிடமிருந்து பெற இருப்பதும்தான் அவனை சந்தோஷக்கடலில் மிதக்க வைத்தது.

மனைவி அன்னபூரணி தியாகுவிற்கான

காலை உணவைத் தயாரிப்பதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள். மகள் கிருஷாளினி இன்னும் நித்திரையில் மயங்கிக்கிடந்தாள்.

ஒன்பது மணிக்கு நிகழ்வு ஆரம்பிக்கும், முதல மைச்சரை அழைத்துக்கொண்டு செல்வார்கள், அப்பொழுது தானும் அதில் கலந்துகொள்ளவேண்டும் என்பது தியாகுவின் ஆசை.

குளித்துவிட்டு உடுப்புக்களை மாற்றிக்கொண்டான். பூஜை அறைக்குள் போவதும் வருவதுமாக ஓடித்திரிந்தான். அப்பாவின் இந்த ஆரவாரத்தால் கிருஷாவும் எழுந்து கொண்டாள்.

"என்ன இப்பவே வெளிக்கிட்டாச்சு போலை, இப்ப என்ன நேரமப்பா?" தியாகுவுக்கு நேரம் என்பதை பார்க்கவே நேரமில்லாமல் இருந்தது. மகளின் கேள்விக்கு அவன் என்ன சொல்ல இருக்கிறது. தியாகு அதைப்பற்றிக் கவலைப்படவே இல்லை.

தியாகுவுடன் கூட்டாகச் செல்வதற்கு அவனுடைய நண்பன் ஆனந்தனும் வருவதாக இருந்தது. அவனும் ஒரு நல்ல எழுத்தாளனாக வளர்ந்திருக்கிறான். நடைபெற்று முடிந்த கலை இலக்கியப் போட்டியில் ஆனந்தனுக்கு இரண்டாவது இடம் கிடைத்திருந்தது.

கேற்றடியில் உறுமிக்கொண்டு வந்து நின்றது ஆனந்தனின் மோட்டார்ச்சைக்கிள். "பிள்ளை! ஆனந்தம் மாமா வந்திட்டார், என்ரை மணிக்கூட்டை ஒருக்கால் எடுத்துவாடா" தியாகு செல்லமாக மகளுக்குக் கட்டளை யிட்டான்.

"எந்த மணிக்கூடு கட்டப்போறியள்? மலிவாய் இருக்கெண்டு எல்லாத்தையும் வாங்கிறது. பிறகு நாலைஞ்சு நாளிலை எல்லாம் சரியாய்ப்போயிடும். கறுத்த வார் மணிக்கூட்டைத் தரட்டோ?" கிருஷாளினி மேசையில்

மணிக்கூட்டைத் தேடியபடி கேட்டாள்.

“ஓம் பிள்ளை இரண்டு மணிக்கூடும் பழுதாகிப் போச்சுத்தான். அந்தக் கறுப்பைக் கொண்டுவா பாப்பம்”

கிருஷாவும் கறுத்தவார் மணிக்கூட்டோடு வந்தாள். ‘இதுகும் ஓட இல்லைப்போலை.” சிரிப்பு அவளின் கொடுப்பிற்குள் நெளிந்தது.

“என்ன பிள்ளை இராத்திரி எடுத்துப்பாக்க ஓடிக்கொண்டுதானே இருந்தது”

கதிரையில் அமரப்போன ஆனந்தன் கெக்கட்ட மிட்டுச்சிரித்தான். “மணிக்கூடு என்னத்துக்கய்யா? இப்ப ஆர் மணிக்கூட்டிலை நேரம் பாத்து வேலை செய்யினம்? சும்மா விட்டிட்டு வெளிக்கிடுங்கையா. எவ்வளவு பொழிப்புகளைப் பாக்கப் போறம்” என்று சொன்ன ஆனந்தத்தின் கதையைக் கேட்டு எல்லோரும் சிரித்தனர்.

கறுத்தவார் மணிக்கூடும் கிடந்த இடத்திற்கே போய் விட்டது. தியாகு ஆனந்தனைக் கடைக்கண்ணால் பார்த்தான். அவன் போட்டிருந்த உடுப்புகளைத் தன்னுடய உடுப்புக்க ளோடு ஒப்பிட்டுப்பார்த்தான். அவனுடைய மனம் கிலேச மடைந்தது. தான் பட்டுவேட்டி சேட்டுப் போட்டிருப்பது வீணானது போலத் தெரிந்தது.

இருந்தாலும் இதுவெல்லாம் மகளின் ஆசை தானே. முதலமைச்சரின் கையால் பரிசு பெறும் போது தான் எடுப் பாக இருக்க வேண்டுமென்று தியாகுவும் நினைக்காமல் இல்லை.

ஆனந்தனின் மோட்டார் சைக்கிள் உறுமிக்கொண்டு புறப்படத்தயாரானது. தியாகு தனது பட்டுவேட்டியை கவனமாக ஒதுக்கிக்கொண்டு மெதுவாக ஏறிக்கொண்டான். ஆனந்தனின் தோள்களில் கையைப்போட்டபடி திரும்பிப் பார்த்தான். அன்னபூரணியும் கிருஷாவும் சிரித்தபடி கையசைத்து வழியனுப்பினர்.

ஆனந்தனும் தியாகுவும் மோட்டார்சைக்கிளிலிருந்து இறங்கவும் முதலமைச்சர் அழைக்கப்பட்டு வாசலை வந்தடையவும் சரியாக இருந்தது.

நிகழ்ச்சி நிரலின்படி மங்கள இசையோடும் தமிழ்த்தாய் வாழ்த்து, கலாச்சாரப் பேரவைக் கீதம் என்பவற்றோடும் நிகழ்வு ஆரம்பமானது. நிகழ்வுகள் நிகழ்ச்சி நிரலில் உள்ளது போன்று ஒழுங்காகச் சென்று கொண்டிருந்தது. பரிசு வழங்கும் நிகழ்வு ஆரம்பமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

பலகாரப் பைகளுடன் பெண்பிள்ளைகள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் கொடுத்த பலகாரப் பையினுள் ஒரு மோதகமும் இரண்டு பிஸ்கற்றுகளும் இருந்தன. பரிசுக்காகத் தங்களுடைய பெயர்கள் கூப்பிடப்படலாம் என்ற அவசரத்தில் ஆனந்தனும் தியாகுவும் அவற்றை வாயில் எறிந்து கொண்டனர். அதனோடு சோடாவும் துரத்திக்கொண்டு வந்தது.

எல்லாம் முடிந்து ஆறுதலானபோது, பாடசாலைப்பிள்ளைகளுக்கான பரிசு விபரம் வாசிக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன. இவை முடிந்ததும் திறந்த பிரிவுக்கான பரிசில்கள் வழங்கப்படும் என்பதை நினைக்க தியாகுவுக்கு ஆவலாக இருந்தது. ஆவல் அதிகரித்து, ஆத்திரமாகவும் வந்தது. போதாக்குறைக்கு ஆனந்தனின் வார்த்தை ஜாலங்கள் தியாகுவின் நெஞ்சை துளைப்பனவாகவும் இருந்தன.

"நீங்கள் பாருங்கோ ஐயா கடைசியாக நாங்கள் போய்க்கேட்டுத்தான் எங்கடை பரிசுகளை வாங்க வேண்டி வரும். அதுவரை கொஞ்சம் பொறுக்கத்தான் வேணும்" ஆனந்தன் சொன்னபோது ஆத்திரம் ஒருபக்கமும் சிரிப்பு ஒருபக்கமுமாக தியாகுவின் மனத்தை இறுக்கிப் பிடித்தது.

ஒருமுறை பரிசுகள் வழங்கப்பட்டு முடிந்தது. பாடசா

லைப் பிள்ளைகளின் கிராமிய நடனமொன்று மேடையைச் சிறப்பித்தது. கைதட்டல்களுடன் திரை இழுக்கப்பட்டு பரிசு வழங்கல் இடம் பெற்றது. அதுவும் பாடசாலை மட்டத்திலா னதாகவே இருந்தது.

தியாகு இப்பொழுது சிறிது ஆத்திரப்படுவதைக் தவிர்த்துக்கொண்டான். அதனால் அவன் வேதனை கொள்ள வாய்ப்பில்லாது போனது. உண்மையில் பாடசாலை மாணவர்களை கலை, இலக்கியத்துறையில் ஈடுபடுத்த வேண்டுமென்பதில் தியாகு மிகவும் ஆர்வமுள்ளவனாக இருந்தான். அவன் தனது நண்பர்களுடன் பேச்சுக்கொடுக்கும் போதெல்லாம் அதுபற்றியே பேசுவது வழக்கம்.

அடுத்த நிகழ்வாக நாடகம் நடக்குமென ஒலிபரப்பி பேசியது. நடக்கப்போவது நல்லதொரு நாடகமாக இருக்கலாமென அவன் எண்ணியது போலவே நாடகம் தரமான முறையில் அரங்கேறியது. ஏமாற்று வேலையே நாடகத்தின் பிரதான கதையம்சமாக இருந்தது.

போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர், யுவதிகளின் உயர்ந்த சிந்தனைகளிலிருந்து அவர்களைத் திசை திருப்பி கெடுத்துவிடக்கூடிய நவீன கருவிகளையெல்லாம் அவர்க ளிடம் கொடுத்தும், நிம்மதியைக் கொடுக்குமென நம்பி நிம்மதியை இழந்துவிடக்கூடிய குடிவகைகளைத் கொடுத்தும் அவர்களை ஏகாதிபத்திய வாதிகள் ஏமாற்றுகின்ற நிலைமை நன்கு புலப்படக்கூடிய வகையில் எடுத்தாளப்பட்டிருந்தது.

கரவொலிகள் மண்டபத்தை நிறைத்து நிகழ்வுக்கு சான்றிதழ் வழங்கின. ஆனந்தனின் முகம் தியாகுவைப் பார்த்துச் சிரித்தது. தியாகுவுக்கும் சிரிப்பு வந்தது. ஆனால் அது சிரிப்பாக இருக்கவில்லை. சிறிது சீறலாகவே இருந்தது.

"என்னடா இது? எல்லா நிகழ்வுகளும் முடியிறது மாதிரி இருக்கு. எங்களுக்குப் பரிசுதர மறந்து விடுவாங்கள் போலை..." தியாகுவின் மனம் அல்லாடியது. அவனுடைய

சிந்தனைகள் நூலறுந்த பட்டம் போலச் சுழன்று கொண்டிருந்தது.

இடைக்கிடை ஆனந்தன் தியாகுவைப் பார்த்தான். தியாகுவுக்கு சிரிப்புக்குப் பதிலாக வெட்கமே வெளிப்பட்டது.

தியாகு கட்டியிருந்த பட்டுவேட்டி மெல்லக் கழன்று போவதுபோலத் தெரிந்தது.

"என்னைய்யா? நான் சொன்னது சரிதானே! அங்கை பாருங்கோ விருந்துக்கு ஆயித்தம்போலை முதலமைச்சரை அழைச்சுக்கொண்டு போகினம். சாப்பாட்டு நேரமும் வந்திட்டுதுதானே. பேந்தென்ன நான் சொன்னமாதிரி எங்கடை பரிசுகள் மேசையிலை கிடக்கும். நாங்கள்தான் போயெடுக்க வேண்டிவரும்."

ஆனந்தன் சொல்லிமுடித்தபோது சிரிப்புத்தான் வந்தது. இனிச் சிரிப்புத்தான் வெல்லப்போகிறது என்று தியாகுவுக்கும் உள்மனம் சொல்லுகிறது.

திரை மெல்ல விலகிக்கொள்ள பரிசில் வழங்கும் நிகழ்வு ஆரம்பமாகவுள்ளதென சக்கட்டையான குரல் ஒன்று அறிவித்தல் தந்தது. ஆனந்தன் தியாகுவைப் பார்த்துச் சிரித்தான்.

"இனி ஆரும் விதானைமார் அல்லது சமுர்த்தி உத்தியோகத்தரெண்டு வாறவைதான் பரிசு குடுப்பினம். நான் எங்கை சொன்னனெண்டு பாருங்கோ. நான் ஏதும் சொன்னால் உங்களுக்குக் கண்டறியாத சிரிப்பு." என்று சொல்லிவிட்டு ஆனந்தனின் முகம் சிரித்ததேதவிர பசியினால் வாய் பரிதவித்தது. பார்க்கப்பாவமாக இருந்தது.

தியாகுவுக்கு இரண்டு பரிசுகளும் ஆனந்தனுக்கு இரண்டு பரிசுகளும் கிடைக்கவிருந்தன என்பதில் அவர்கள் சந்தோஷித்தாலும் இனிப் பரிசுகிடைப்பதல்ல, பரிசு கெடப்போகிறதென்று சொல்லிச்சிரிக்க முயற்சித்தார்கள்.

சில நொடிகளில் பரிசு வழங்கப்படுவதற்காக

தியாகுவின் பெயர் ஒலிவாங்கியிலிருந்து பயந்து பயந்து வெளிவருவது போல வந்து வடிந்தது.

ஆனந்தனுக்கும் தியாகுவுக்கும் இருந்த கவலைகளை விட அவர்கள் பரிசு பெறும்போது படமெடுப்பதற்காக அழைத்துவரப்பட்டவர் பட்டபாடு சொல்லிமுடியாது. எத்தனையோ வேலைகளை விட்டு விட்டு வந்தவர். என்ன செய்வது பெரியவர்கள் கேட்டதற்காக வந்துவிட்டோமே யென்று அவரும் பொறுமையின் எல்லைக்குப் போயிருந்தார்.

ஆனந்தன் மெல்லப் படப்பிடிப்பாளர் பக்கம் திரும்பினான். ஆனந்தனின் வாய் ஏதோ ஒரு விதத்தில் அலட்டிக் கொண்டேயிருக்கும். அதனால் "தம்பி! எள்ளயன் காயுது எண்ணைக்கு எலிப்புழுக்கை காயுது கூடக்கிடந்த குற்றத் துக்கு எண்டு எங்கடை பெரியவை சொல்லுறது ஏனெண்டு தெரியுமோ...? இது தம்பிக்கு நல்ல பொருத்தம்" என்று சொல்ல பக்கத்துக் கதிரையில் இருந்தவர்களும் கெக்கட்ட மிட்டுச் சிரித்தார்கள்.

திறந்த பிரிவில் சிறுகதைப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாவது இடத்தை தட்டிக்கொண்ட திரு. தியாகு அவர்களை மேடைக்கு அழைக்கின்றோம் என்றதும் தியாகு ஒவ்வொரு கதிரையாக தாண்டித்தாண்டி மெல்ல மேடையை நோக்கி நகர்ந்தான்.

தியாகுவுக்கு நன்கு பழக்கமான சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் பரிசு வழங்குவதற்கு தயாராகிக்கொண்டிருந்தார். தியாகுவும் அன்பு பரிமாறிப் பரிசினைப் பெற்றுக் கொண்டான். முதலமைச்சரின் கையால் அந்தப்பரிசினைப் பெறவில்லை என்பது அவனுக்குச் சிறிது வேதனையாகவே இருந்தது. இரண்டு மூன்று தரம் மிகை ஒளி பரவிப் படங்கள் பதிந்தன.

அடுத்தது ஆனந்தனின் முறை. ஆனந்தனின் முகத்தில் சந்தோஷத்தின் அறிகுறியே காணப்படவில்லை.

அவனும் பரிசினைப் பெற்றுக்கொண்டான் என்பதை விட அதை அபகரித்துக்கொண்டான் என்பதே சரியானதாக இருந்தது.

தனக்குப்பரிசு வழங்குபவர்கள் யாராக இருக்க வேண்டுமென்று அவன் நினைத்திருந்தானோ அவர்கள் இப்போது மதிய போசனத்திற்காகக் கைகழுவிக்கொண்டு இருப்பார்கள் என்பதை நினைக்க வெறுப்பாக இருந்தது.

இரண்டு கதை எழுத்தாளர்களும் பரிசுகளைப் பெற்றுக்கொண்டு படியிலிருந்து இறங்கிக்கொண்டிருந்தனர். படியினருகே நிறையப்பேர் நின்று பிரச்சினைப்படுவது போலிருந்தது. இருவரும் மெல்ல மெல்ல அவ்விடத்துக்கு அசைந்தனர்.

"ஆனந்தம்! என்ன ஒரே களாபுளாவாகக் கிடக்கு. என்னெண்டு ஒருக்கால் பாருங்கோவன்." அங்கு என்ன நடக்கிறது என்பதை அறிந்த ஆனந்தன் தியாகுவுக்கு அருகில் வந்தான். தியாகு வைத்திருந்த சான்றிதழை வாங்கிப் பார்த்தான்.

"ஐயா உண்மையிலை பரிசு கெட்டுத்தான் போச்சு. இஞ்சை பாருங்கோவன். உங்கடை சேட்டிக்கரிலை ஆற்றை பேர் இருக்குதெண்டு?"

தியாகுவும் சேட்டிக்கரைத் திருப்பித்திருப்பிப் பார்த்தான். அதில் சி. சக்திவேல் என்றும் அது பாடல் போட்டிக்கானது என்பதையும் பார்த்து விறைத்துப்போனான்.

ஆனந்தனும் தன்னுடைய சேட்டிக்கரை நீட்டிக்காட்டினான். அதில் த.சிவலோகநாயகி என்றிருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் பேந்தப் பேந்த முழித்தனர்.

"இதிலை நிக்கிறவைக்கும் இதே கதிதான் போலை கிடக்கு" தியாகு ஆனந்தனைப் பார்த்துச் சொன்னான். அப்போது பின்னாலிருந்து ஒரு குரல் வந்தது.

"ஐயா! உங்கடை வேட்டி கழருதுபோலை இழுத்துக் கட்டுங்கோ."

தியாகு கீழே குனிந்து பார்த்தான். பட்டுவேட்டியின் ஒரு தலைப்பு நிலத்தைத் தடவிக்கொண்டிருந்தது. தியாகு வுக்கு மகள்மீது மெல்லிய கோபமும் வந்தது.

அவள்தானே பட்டுவேட்டி கட்டுங்கோ கட்டுங்கோ என்று கரைச்சல் கொடுத்தது.

வேட்டியைக் கையால் உயர்த்திப்பிடித்தபடி தியாகு பின்புறமாக நடந்தான். நடக்க நடக்க வேட்டி முழுவதும் கழன்று விழும் போல இருந்தது. வேட்டி முழுவதும் கழன்று போனாலும் பரவாயில்லை என்பது போல் இருந்தது தியாகுவுக்கு.

வேட்டித்தலைப்பை எடுத்துச் சுற்றியபோது போன வருஷம் நடந்த நிகழ்ச்சி நினைவுக்கு வந்து அவனைப் பின்னோக்கி இழுத்தது.

சென்ற வருஷம் தேசிய கலை இலக்கியப் பேரவை நடாத்திய சிறுகதைப்போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்று அதற்கான சிறப்புப்பரிசில் களையும் சான்றிதழையும் கொழும்புமா நகருக்குச் சென்று பெற்று வந்தது நினைவுக்கு வர அதை நினைத்து சிறிது ஆறுதல் அடைந்தான்.

இன்று நடப்பது அவனுக்கு ஒரு வேடிக்கையாகவே இருந்தது. வீட்டிலிருந்து புறப்படும் முன்னர் ஆனந்தன் சொன்னதை ஒரு முறை நினைத்துப் பார்த்தான்.

"ஐயா! நான் எங்கை சொல்லுறன் எண்டு பாருங்கோ. பொய் சொல்லேல்லை. உவங்கள் எங்களைக் கூப்பிடுவாங்கள். கூப்பிட்டு இருத்திப்போட்டு தங்கடை வேலையைத்தான் பாப்பாங்கள். மாலையள் போட்டுத் தண்ணி வென்னி சாப்பாடு எண்டு அதுகளோடையே காலம் போகும். நாங்கள் சிலவேளை... எங்கடை பரிசுகளைப் பறிச்சு

எடுத்துக்கொண்டு வரவேண்டியும் இருக்குமய்யா. நம்பினால் நம்புங்கோ. இல்லாட்டில் அங்கை நடக்கிறதைப் பாப்பியள் தானே."

ஆனந்தன் சொன்னது மாதிரியே நடப்பது போல இருந்தது. வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு திரும்பிப் பார்த்தான் தியாகு.

மேடைக்குப் பின்புறமிருந்த அறையொன்றினுள் ஆரவாரமாக இருந்தது. ஆனந்தனும் அங்கே தான் நின்றிருந்தான். அவன் தியாகுவையும் அங்கு வரும்படி சைகை காட்டினான். தியாகுவும் உள்ளே நுழைந்தான்.

அந்த அறையினுள் முப்பது பேருக்குக்கிட்ட நின்றி ருந்தனர். அங்கே நின்றிருந்த உத்தியோகத்தர் ஒன்றிரண்டு பேர், ஒவ்வொருவரிடமிருந்தும் அவர்கள் வைத்திருந்த சேட்டிக்கர்களையும் பரிசுப் பொருட்களையும் திரும்பப் பெற்றுக் கொண்டிருந்தனர்.

தியாகுவும் ஆனந்தனும் தங்களிடம் இருந்தவை களையும் கொடுத்துவிட்டு நரியிடம் ஏமாந்த காகம் போல நின்றிருந்தனர்.

கொஞ்சநேரம் பிரச்சினைகளுடன் போராடிக் களைத்து இறுதியில் தங்கள் தங்களுக்குரியவற்றைத் தேடி எடுத்துக்கொண்டனர். இடையிடையே தியாகு ஆனந்தனைப் பார்த்துக்கொள்ளும்போது ஆனந்தனும் பார்த்து விட்டால் ஒரு நக்கலும் நளினமும் கலந்த சிரிப்பொன்றை உதிர்த்து விடுவான். அது, நான் ஆரம்பத்தில் சொன்னது சரிதானே என்பது போலிருக்கும்.

இந்தத் தேடுதல் படலம் முடிவுக்கு வந்தபோது அருகில் ஒரு தாயும் மகளும் கவலையுடன் நிற்பது தெரிந்தது. அந்தப்பிள்ளை தாயைப்பார்த்து எதையோ இரந்து கேட்டுக்கொண்டு இருந்தது.

"அம்மா! என்னம்மா நடந்தது. பிள்ளை என்னவாம்?"

ஆனந்தன் மெதுவாக அம்மாவிடம் கேட்டான். "பிள்ளைக்குக் குடுத்த சேட்டீக்கரும் பரிசுப்பையும் மாறிப் போச்சு. அதை திருப்பி வாங்கிப்போட்டினம். பிள்ளையின்ர பரிசை ஆரோ மாறிக்கொண்டு போயிட்டினமாம். அதுதான் பிள்ளை அழுகுது. தன்ரை பரிசை வாங்கித்தரட்டாம். நானென்ன செய்யிறது?"

அம்மாவின் முறைப்பாடு இப்படி இருந்தது. தியாகுவுக்கு ஆத்திரமாக வந்தது. "பிள்ளையின்ரை பரிசை ஆரோ மாறிக்கொண்டு போவிட்டினமெண்ணுகிறது பிழை யம்மா. அவையளெல்லாத்தையும் மாறிக்குடுத்திட்டுக் கூத்தாடுகினம்."

"அம்மா! நாங்களே இந்த வயது வந்தும் எங்களுக் குரிய பரிசு கிடைக்க இல்லையெண்டு வருத்தப்படுகிறம். பாவம் சின்னப்பிள்ளை. அது வேதனைப்படும்தானே யம்மா. கொஞ்சம் பொறுங்கோ பாப்பம் என்ன நடக்கு தெண்டு." தியாகு திருவாய் மலர்ந்து விட்டு அக்கம் பக்கம் பார்த்தான்.

அம்மாவின் கையைப்பிடித்தபடி மேசைமீதிருந்த பரிசுப்பைகளைப் பார்த்துப்பார்த்து விம்மியது அந்த சின்னஞ்சிறிசு.

உறுப்பெழுத்திற்காக முதற்பரிசு பெற்ற அந்தப் பிள்ளை, பரிசுப்பைகளில் எழுதியிருந்த எழுத்துக்களைப் பார்த்துவிட்டு அம்மாவைக் கேட்டது, "அம்மா... எங்களை எங்கடை தமிழை அழகாக எழுதச்சொல்லித்தானே உந்தப் போட்டி வைச்சவை. உவையள் ஒருத்தரும் உறுப்பெழுத்துப் பழகஇல்லையோ? ச்சீ.. அரிகண்டமாய் எழுதி வைச்சிருக் கினம் என்னம்மா...." அம்மாவுக்கு மட்டுமல்ல அவர்களுக்கும் சிரிப்புத்தான் வந்தது.

"அம்மா! மாறிப்போன பரிசுகள் திரும்பி வருமோ? வந்தால் அப்பிடியே தருவினமோ இல்லாட்டிக் குறைச் சுத்தருவினமோ" பிள்ளையின் அந்தக்கேள்வி போலித்தனம்

நிறைந்த எமது சமுதாயத்தின் கீழ்மைத்தனங்களை கோடிட் டுக்காட்டியது போல இருந்தது. அவ்வளவு ஏமாற்றத்திற்குள் சிக்கிப் போயிருந்தது அந்தச்சின்னஞ்சிறிசு.

தியாகுவின் மனம் எங்கெல்லாமோ சஞ்சரித்துவிட்டுத் திரும்பிய கையோடு ஆனந்தனைப் பார்த்தான். இருவரு டைய பார்வைகளும் சமதராசில் இருப்பது போல இருந்தது. இருவரும் தங்களுடைய சான்றிதழ்களை வேறாக்கிவிட்டு, பரிசுப்பைகள் இரண்டையும் அந்தப்பிஞ்சுக் கைகளில் அன்போடு கொடுத்தனர். பனிப்புகாருக்குள் சூரியன் உதித்தது போன்ற வெளிப்பாடு குழந்தையின் முகத்தில்...

தியாகுவும் ஆனந்தனும் ஏதோவொரு பாரம் இறங்கிய நிலையில் படிகளில் இறங்கிக்கொண்டிருந்தனர்.

(2015ம் ஆண்டு உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலை கலாச்சார அமைச்சினால் நடாத்தப்பெற்ற நேர்முக சிறுகதை எழுத்துப் போட்டியில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தை வென்ற சிறுகதை)

# காணாமல் போன குஞ்சுகள்

அது ஒரு அழகான, அடக்கமான, அமைதியான சூழலில் அமைந்த சாப்பாட்டுக் கடை. வேறு கடைகளைப்போல எந்தநேரமும் சனப்புழக்கம் இல்லாது போனாலும் சாப்பாட்டு நேரங்களில் முண்டியடித்துக்கொண்டு வாடிக்கையாளர்கள் வருவது வழமையானது.

கடையில் வேலைசெய்யும் வேலையாட்கள் ஒருவரோடு ஒருவர் அன்பாகவும் பிரச்சனை இல்லாமலும் இருந்து கொள்வது ஒரு தனியழகு. தமக்குத்தமக்கென்று வேலைகளைக் குறிப்பிட்டுக்கொள்ளாது எல்லா வேலைகளையும் பகிர்ந்து செய்வதைப் பார்த்து, சாப்பிட வருபவர்கள்கூட வியந்தும் சந்தோஷப்பட்டும் கதைத்துக்கொள்வதுண்டு.

"சும்மாசொல்லக்கூடாது. உங்கட கடையிலை கூச்சப்படாமல் சாப்பிடலாமையா. நல்லதுப்பரவாக வச்சிருக்கிறியள். வேறை சிலகடையளிலை கைகளுவிற இடத்தைப் பாத்தால் வயித்தைப்பிரட்டிக்கொண்டு வரும்."

சாப்பிட்டுவிட்டுக் காசுகொடுக்க வருபவர்கள் இப்படிச் சொல்லும்போது, பட்டடையிலிருக்கும் சுந்தரத்தின் முகம் மலரும். அவனையுமறியாமல் உற்சாக அலையொன்று அவனுள் ஊடுருவிப்பாயும்.

சாப்பிட வருபவர்களை அன்பாக அழைப்பதும் அவர்களுக்குத் தேவையான உணவுகளை வழங்கும்படி ஆணையிடுவதும் சுந்தரத்திற்கு கைவந்தகலை என்பதைவிட அது அவனோடு கூடப்பிறந்த குணமென்று சொல்வதே பொருத்தமானது.

என்ன இருந்தாலும் சந்தோஷத்தை அளிப்பவர் களைப்போல துன்பத்தை அளிப்பவர்களும் இடைக்கிடை வந்து போவதால் சுந்தரமும் சிலவேளைகளில் இனந் தெரியாத கவலையில் மூழ்கிப்போவதுண்டு.

அன்றும் யாரோ ஒருவரோடு முரண்பட்டதினால் உள்ளம் வேதனைப்பட்டவேளை சுந்தரம் கடைவாயிலைப் பார்த்தபடி இருந்தான்.

முன்புறமுள்ள வைத்தியசாலையின் சுவரோரமாக அதற்கான மின்பிறப்பாக்கி அறையொன்று இருந்தது. அதன் புகைபோக்கிக்குழாய் அவனைப் பார்த்தபடி நிமிர்ந்து வளைந்து நின்றது. அதற்குள்ளிருந்து மைனா ஒன்று தலையை நீட்டி எட்டிப்பார்த்தது. சுந்தரம், அந்த மைனா வையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அந்த மைனாவும் தனதுவாழ்வுக்கான பாதுகாப்பைத் தேடிக்கொண்டிருந்தது என்பதை அவனால் ஊகிக்க முடிந்தது. ஆனாலும் அது ஒரு இடைஞ்சலைத் தரக்கூடிய தென்பதை அந்த மைனா புரிந்து கொள்ள வாய்ப்பில்லை என்பது சுந்தரத்துக்கு மனதில் இடைஞ்சலாக இருந்தது.

பாதுகாப்புத் தேடிய எமது மக்கள் வாழ்விடங்களை இழந்துபோனது மட்டுமல்லாது, வாழ்வையிழந்து இன்னுயிர் களையுமிழந்து ஒட்டாண்டிகளாகப் போனநிலையை சுந்தரம்

ஒருகணம் எண்ணிக்கொண்டான். எம்மைப்போலவே இந்த மைனாவும் முட்டாள்தனமான காரியத்தில் இறங்கியிருப் பதாக கற்பனை செய்துகொண்டான்.

தன்னுடைய கவலையிலும் - இன்னொரு உயிரின் சுதந்திரமான செயற்பாட்டை உற்று நோக்கிக் கொண்டிருப் பதில் சுந்தரம் இனந்தெரியாத சந்தோஷத்தை அனுபவித் துக்கொண்டிருந்ததாகத் தெரிந்தது

இந்த மைனா எந்தவொருகவலையுமின்றிப் பறந்து போவதும் சிறிது நேரத்தின்பின் ஓடிவந்து அந்தப்புகை போக்கிக்குழாயினுள் 'விர்" என்று வேகமாகப்போவதும் பின்பு வெளியேவருவதுமாக தனது நாடகத்தை நடாத்திக் கொண்டிருந்தது.

ஏன் இந்தமைனா இப்படிச்செய்கிறது? அது தனது வாழ்க்கைக்கு பாதுகாப்பான இடம் இது தான் என்று நினைக்கிறதோ? அல்லது தன்னுடைய எதிரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்கு இதைவிடச் சிறந்த ஒரு இடம் இல்லையென்று கருதிக்கொண்டிருக்கிறதோ?

எது எப்படி இருந்தாலும் அது தனது அறிவிற்கு எட்டியவரையில் எதையோ செய்கிறது. செய்யட்டுமே! எனக்கென்ன? என்று சுந்தரம் நினைத்துக்கொண்டாலும், அவனுடைய அடிமனத்தில் ஏதோவொரு பாரச்சுமை அவனைஅசையவிடாது இறுக்கிக்கொண்டிருந்தது.

"ஐயய்யோ! பாவம். வீணாக இறந்துவிடப்போகி றதே? தனது மரணம் எப்படி ஏற்படப்போகிறது என்பதை அறியாமலல்லவா இந்தப்பறவை உற்சாகத்தோடு செயற்படு கிறது. அதனுடைய வாழ்வு எப்படி முடியப்போகிறது? அதனுடைய மரணம் எவ்வாறு நிகழப்போகிறது?" என்பதே சுந்தரத்தின் மனத்தில் கேள்வியாக விரிந்து வளர்ந்தது.

எமது மக்களிலும் எத்தனையாயிரம்பேர் இப்படி வாழ்ந்திருக்கிறார்கள்... வாழ்ந்து மடிந்து போயிருக்கிறார்கள்...

தங்களுக்குப் பாதுகாப்பெனக் கருதிக்கொண்டிருந்த வர்கள் எத்தனைபேர் எப்படி முகவரி இல்லாது போனார்தள்? தமது உறவென்று இருந்த எத்தனைபேரை முகந்தெரியாது மறந்து போனார்கள்.

உண்பதும் உறங்குவதும் தான் வாழ்க்கையென்று எண்ணியவர்கள் விரும்பியதை உண்ண முடிந்ததா? நிம்மதியாக உறங்க முடிந்ததா? ஆனால், இந்த நிலையிலும் அவர்கள் வாழ்ந்து கொண்டுதான் இருந்தார்கள்.

சுந்தரத்தின் மனம் அங்குமிங்குமாக அலை பாய்ந்து கொண்டிருந்தது. கடைக்கு வருபவர்களைக் கவனிப்பது, வேலையாட்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்பது, கடையின் உட்புறச்சுழல் எப்படி இருக்கிறது என்பதை மேற்பார்வை செய்வது, இப்படிப் பலவழிகளில் அவனது புலன் சென்றுகொண்டிருந்தது. இத்தனை வேலைக்குள்ளும் அந்தமைனாவும் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டது ஆச்சரியம்தான்.

மைனாவைப் பார்த்துக்கொண்டிருந்த சுந்தரம் கடையின் சூழலுக்குத் திரும்பிக்கொண்டிருந்தான். “ஐயா... எனக்கு ரெண்டு கொத்துப்பாசல் தாருங்கோ. நாளைக்குக் காலமைக்குக் காசு கொண்டுவந்து தாறன். இரண்டொருநாள் கடைக்கு வந்து பழகிய ஒருவன் சுந்தரத்திடம் இரந்து கொண்டிருந்தான். ஏறத்தாழ நாற்பத்தைந்து வயதிருக்கும். சுந்தரத்திற்கு அவனுடைய தோற்றமும் அவன் சாப்பாடு கேட்ட விதமும் மனதிற்குப் பிடித்தமில்லாமல் இருந்தது.

“சாப்பாடு கடன் குடுக்கிறதில்லைத்தம்பி. கனபேர் உப்பிடித்தான் சொல்லி வாங்கிக்கொண்டு போனவை. ஒருத் தரும் இந்தப்பக்கம் வந்தபாடுமில்லை, காசுதந்தபாடுமில்லை. ஆனபடியால் குறை நினைச்சுக்கொள்ளாதை யுங்கோ. கடன் தரமாட்டன்” சுந்தரம் தனது முடிவைத் தெரிவித்துவிட்டான் ஆனால், வந்தவனோ விடுகிறபாடா இல்லை.

"அண்ணை! எங்களை உங்.களுக்குத் தெரியாது போலை. நாங்கள் அப்பிடியான ஆக்களில்லை. நாங்கள் ஒரு கொண்டிசனான ஆக்கள். சொன்னால் சொல்லுத்தான்! உந்த ஆசுப்பத்திரிக்குப் பின்னாலை தான் வீடு. பொயிலைக் காரக் கணேசு எண்டா தெரியாத ஆக்கள் இல்லை நீங்கள் வீணாகப் பயப்பிடாதையுங்கோ. தாருங்கோ அண்ணை... விடிய என்ரை காசு உங்கடை கைக்குவரும்."

சுந்தரம் ஒன்றும் பேசவில்லை. ஆடாமல் அசையாமல் நின்றான். உப்பிடித்தான் ஒருத்தன் நாலு மாதத்திற்கு முன்னம் அஞ்சு பாசல் சாப்பாடு வாங்கிக்கொண்டு சேட்டை மாறிப்போட்டுக்கொண்டு வந்திட்டன். ஓடிப்போய் எடுத்துக் கொண்டு வாறனெண்டு போனவன் போனதுதான். ஐநூறு ரூபா பறந்துது. அவனும் போகையுக்கை நான் உடையாற்றை சொந்தக்காரனெண்டு சொல்லிக்கொண்டுதான் போனவன் . இதைச் சொல்லி ஆகப்போவது எதுவுமில்லை என்று சுந்தரத்திற்குத் தெரிந்திருந்தும் வந்த ஆத்திரத்தை மறைக்க முடியாமல் கடைக்குள் வந்திருப்பவர்கள் கேட்கும் படியாக இந்தச்சம்பவத்தை நையாண்டித்தனமாகவும் "இப்படியானவர்களும் இருக்கிறார்கள்" என்பதைத் தெரியப் படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடனும் சொல்லிக்கொண்டிருந்தான்.

வந்தவனும் விடுவதாக இல்லை. தனது லட்சியத்தில் தோற்றுப்போவதற்கு அவன் விரும்பவில்லை என்பது தெரிந்தது. சுந்தரம் திரும்பி புகைபோக்கிக் குழாயைப் பார்த்தான். புகை போக்கிக் குழாயிலிருந்து பறந்துபோன மைனா சிறியகுச்சியை வாயில்வைத்தபடி திரும்பிவந்து அதனுள் சென்றுகொண்டிருந்தது.

அறிவு குறைந்த அந்த மைனாகூட எவருடைய உதவியையும் எதிர்பாராது தனது தேவையைத்தானே நிறைவேற்றிக்கொள்கிறது. யாரையும் எதிர்பார்க்கவும் இல்லை.

யாரிடமும் இரந்து கொள்ளவுமில்லை. எவ்வளவு நேர்த்தியாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் ஆறறிவு படைத்த மனிதன் எவ்வளவு கேவலமான முறையில் வாழ்ந்துகொண்டிருக்கிறான்?

சுந்தரம் அமைதியில்லாமல் சுழன்று கொண்டிருந் தான். கொத்து ரொட்டிக்கு வந்தவனும் சளைத்ததாக இல்லை.

நானாக இருந்தால் இதிலையே தூக்கு போட்டுச் செத்திருப்பன், சே! என்ன மனிசன்? இவ்வளவுகதை சொன்னபிறகும் கொத்து ரொட்டி கேட்டுக்கொண்டிருக் கிறானென்றால் இவன் என்ன மனிசன்? கடவுள் இவனுக்குக் கொடுத்ததாகச் சொல்லப்படும் ஆறாவது அறிவு எங்கே போனது? இப்படியான தனிமனித செயற்பாடுகள்தானே பலகுடும்பங் களில் நிம்மதியைக் குலைத்து தொந்தரவு களைக் கொடுக்க வழிகோலிவிடுகிறது. சுந்தரம் தனக்குள் இப்படிக்கேட்பது யாருக்குத்தெரியும்? தெரிந்துதான் என்ன பிரயோசனம்?

தனது அலகில் நீளமான குச்சியொன்றைச் சுமந்தபடி மீண்டும் மைனா பறந்து வந்துகொண்டிருந்தது. சுந்தரத்தின் கடைப்பக்கமாகத்தான் அது பறந்து கொண்டிருந்தது. அந்த மைனா தனது கடைக்குள் அத்துமீறிவந்து உணவுப் பொருட்கள் எதையேனும் கொத்திக்கொண்டு சென்றாலும்கூட சுந்தரம் கவலைப்படமாட்டான் போலிருந்தது. குச்சிகளைச் சுமந்து செல்வதிலிருந்து அது தனக்கான கூடு ஒன்றை அமைத்துக்கொள்ள முயல்கின்றது என சுந்தரம் நிதானித்துக் கொண்டான். தனக்கான கூடு ஒன்றை அமைத்துக்கொள் ளத்தான் வேண்டும். அதுசரி! ஆனால், எங்கே அமைத்துக் கொள்ள முயல்கிறது என்பதுதான் சுந்தரத்தின் மனதை வாட்டிக்கொண்டிருந்தது.

“என்ன சுந்தரண்ணை உங்கை உங்கை பாத்துக்

கொண்டிருக்கிறியள்? ஏதோ பேய்பூதம் நிக்கிறமாதிரி யெல்லோ கிடக்குது" கடைக்குச் சாப்பிடவரும் சாந்தலிங்கம் கடைவாசலில் நின்றபடி சுந்தரத்தைப் பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்தான். "அப்பிடி ஒண்டும் இல்லை சாந்தன். ஒரு மைனா உந்தப் புகைக்கூட்டுக் குள்ளை போறதும் வாறதுமாய் நிக்குது. அது என்ன செய்யிது எண்டு பாக்கிறன். பாவம் தனக்குப் பாதுகாப்பான இடமெண்டுதான் அதுக் குள்ளபோகுது. ஆனால் ஒருநாளைக்கு அந்த ஜெனறேட்டர் வேலைசெய்யத்துவங்கினால், அந்த மைனா சாம்ப லாய்த்தான் வந்துவிழும். அதை நினைக்கத்தான் பாவமாய் க்கிடக்குது" சுந்தரம் பெரிய அளவில் விளக்கம் அளித்தான்.

"எங்கட நாட்டில நடந்த கலவரத்தில எவ்வளவு சனம் தாங்கள் இருந்த இடத்தை விட்டு விட்டு பாதுகாப்புத் தேடி கண்டகண்ட இடங்களெல்லாம் ஓடித்திரிஞ்சினம் . காடு கரம்பை எல்லாம் கொட்டிலும் குடிலுமாகக் காலத்தைக் கழிச்சுதுகள். கடைசியில ஒருத்தரும் இல்லாமல் அழிஞ்சு போயிருக்குதுகள். அதுபோலத்தான் இந்த மைனாவின் கதையும் முடியப்போகுது என நினைக்கத்தான் பாவமாய் இருக்குது"

சுந்தரம் இப்படிக் கூறிக்கொண்டு கணக்குக் கொப்பியை கையில் எடுத்தான். ஒவொரு நாளும் மாலை யில் கணக்கு முடிக்கும் போது கடன் வாங்கியவர்களையும் கடன் தொகையையும் குறித்து வைப்பது வழக்கம். சுந்தரம் கடந்த மூன்று நாளும் கணக்கு எழுதவில்லை. ஆகையால் அதை எழுதும் நோக்குடன் தான் கணக்குக்கொப்பியைக் கையில் எடுத்தான். வெள்ளையண்ணை என்றொரு பெயர் பதியப்பட்டு இருநூற்றுப்பத்து என்று எழுதப்பட்டு இருந்தது. ஆனால், சுந்தரத்திற்கு வெள்ளையன்ணை என்பது யாரென்று தெரியவில்லை.

தானில்லாத நேரம் பொறுப்பாக நின்ற மோகனை

அழைத்துக் கேட்டான். "ஆரிந்த வெள்ளையன்?" "அண் டைக்கு ஒருநாள் எங்கட நிறோ அண்ணையோட பிரச்சனைப் பட்டுக்கொண்டு நிண்டார். அந்த அண்ணைதான். பெயர் தெரிய இல்லை. அதுதான் வெள்ளையண்ணையெண்டு எழுதிவிட்டனான்." மோகன். தன்னுடைய விளக்கத்தைக் கூறிமுடித்தபோது...

"எட அந்தப் பேயனே... அவனுக்கு ஏனடாப்பு கடன் குடுத்தனி? அவன் முதலும் ஐயாயிரம் அப்படியே நிக்கிது. அப்படி இருக்க பேந்தும் கடனுக்கு வந்தவனே? நான் இல்லாத நேரம்பார்த்து கள்ளன் வந்து திண்டிட்டுப்போயிருக் கிறான். தம்பி ஒண்டு சொல்லிப்போட்டன். நான் இல்லாத நேரம் ஆருக்கும் கடன் குடுக்கப்படாது தெரிஞ்சுதே"

மோகனும் தலையைப் பலமாக ஆட்டினான். சிலசாப்பாட்டுக்கடைகள் மழைக்கு முளைத்த காளான் போல சந்திக்கு சந்தி றோட்டுக்கு றோட்டு முளைக்கும் பிறகு தேடிப்பார்த்தால் கடைகள் காணக்கிடைக்காது. இழுத்துப் பூட்டிவிட்டுப் போய்விடுவார்கள். என்ன காரணம்? இதுதான் காரணம். நாலு நாளைக்கு சிநேகிதம் பிடித்து நன்றாகச் சாப்பிடுவார்கள். பிறகு மெல்லமெல்லக் கடன் கேட்டுச் சாப்பிடுவார்கள். கடன் பெருகி வந்த பிறகு அவர்களைப் பிடிக்கமுடியாது. இப்பிடி எத்தனை பேர்? பிறகு என்ன செய்யலாம் கடையைப் பூட்டுவதைத்தவிர வேறொன்றும் செய்ய இயலாது போய்விடும்.

இப்படிப் பலமாதிரியாக சுந்தரம் நினைத்து நினைத்து நெஞ்சு பொருமி வெடித்துவிடும் போலிருந்தது. தனது மேசையில் சிதறிக்கிடந்த பேப்பர்த்துண்டுகளை ஒவ்வொன்றாக எடுத்து அடுக்கினான் சுந்தரம்.

வீதியில் போய்க்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று கடை வாசலில் வந்து மெதுவாக நின்றது. "சுந்தரண்ணை எங்கட பெடியள் வேலை செய்யிறாங்கள்.

சோடா பிஸ்கட் ஏதும் கேட்டால் குடுங்கோ என்ன"என்றதோடு சைக்கிள் ஓடி மறைந்துவிட்டது.

சைக்கிளில் வந்த ரங்கன் ஆஸ்ப்பத்திரியில் எதில் எந்தப்பழுது ஏற்பட்டாலும் அதை அவன்தான் திருத்திக் கொடுப்பது வழக்கம். அந்தவேளைகளில் என்ன தேவைப் பட்டாலும் சுந்தரத்தின் கடையில்தான் சாப்பாடு. என்ன தேவை என்றாலும் சுந்தரமும் இல்லையென்னாமல் கொடுத்து உதவுவான். ரங்கனும் வேலை முடிந்ததும் கணக்கைப் பார்த்துக் காசைக் கொடுத்து விடுவான். இதனால் சுந்தரத்திற்கும் ரங்கனுக்குமிடையில் நெருங்கிய தொடர்பிருந்தது. சுந்தரத்தின் நம்பிக்கைக்குரியவனாக ரங்கன் இருந்தான்.

கூடுதலாக எதையும் சோடனை பண்ணிக்கதைக்கும் ரகத்தில் அவன் இல்லை. தேவையேற்படின் மட்டுமே கதைப்பான். கையில் காசில்லாதபோது மட்டும் கணக்கு வைக்கச் சொல்வான். மாலையில் வந்து கணக்கைத் தீர்த்து விடுவான். இப்படியான செயல்கள் சுந்தரத்திற்கு மிகவும் பிடித்திருந்தது. சில நேரங்களில் தனது கடையில் சிறிய திருத்தவேலைகள் செய்யவேண்டியிருப்பின் தொலை பேசியில் தகவல் கொடுத்தால் போதும் கொடுத்த சில கணத்தில் ரங்கன் அங்கே பிரசன்னமாவான்.

சுந்தரத்திற்கு ரங்கன்மீது ஏதோவொரு அலாதியான பிரியமிருந்தது. அது என்னவென்பதை அவன் ஆராய்ந்து பார்ப்பதுண்டு. அவனுடைய நேர்மையான போக்கும் அடுத்தவரை மதித்து நடக்கும் பண்புமே அதற்குக்காரண மென்பதை உணர்ந்து கொள்வான். ஏமாற்று வித்தைகள் செய்பவர்களைக்கண்டால் தொங்கிமிதிப்பான். பேச்சு ஒருவித மாகவும் செயல் வேறுவிதமாகவும் இருப்பின் நேரடியாகவே பேசுவான்

கடைக்கு வருபவர்களில் அநேகமானவர்கள்

சுந்தரத்தின் பேச்சையும் செயற்பாடுகளையும் சிறப்பித்துப் பேசுவதைக் காணலாம். அப்படியிருக்கும்போது ஒருசிலர் மட்டும் ஏன் முரண்பட்டுக்கொள்கிறார்கள்? சிலருக்கு சில இயல்புகள் உண்டு. அவர்கள் வளரும் சூழல் அவர்களுக்கு அதை வழங்கிவிடுகிறது. இந்த இயல்புகள் நல்லவையாக இல்லாதபோது இந்த உலகில் நடைபெறும் அலங்கோலங்களுக்கு அவை காரணமாகி விடுகின்றன.

இப்படியெல்லாம் உலகில் நடைபெறும் செயற்பாடுகள் எல்லாவற்றையும் எடைபோட்டுப் பார்ப்பதனால்தான் சுந்தரத்தின் வெள்ளை மனதில் அந்த மைனாவின் செயற்பாடுகள் இறுக்கமான இடத்தைப் பிடித்திருந்தது. அதன் வாழ்வு எப்படியாகப் போகிறது என்ற ஏக்கம் அவனையுமறியாமல் அவனுள்ளே ஒருசோகவலையை விரித்திருந்தது.

"ஐயா... ரங்கண்ணை உங்களிட்டை ஏதேனும் சொன்னவரே?"

"ரங்கன் என்னோடை கனக்க விசயங்கள் கதைக்கிறது. நீங்கள் உங்கடை விசயத்தை என்னண்டு சொல்லுங்கோவன்"

"இல்லையய்யா, நாங்கள் உந்த ஆசுப்பத்திரியிக்கை வேலை செய்யிறம்."

"செய்யுங்கோவன் அதுக்கென்ன இப்ப"

"இல்லையுங்கோ ஐயா, நாங்கள் உங்கை பழுதாகியிருக்கிற ஜெனரேட்டர் திருத்தவந்தனாங்கள். தேத்தண்ணி, வடை தேவையெண்டால் உங்களிட்டை வாங்கச்சொல்லிச் சொன்னவர். அதுதான் கேட்டனாங்கள்"

"அப்பிடி விசயத்தைச் சொல்லுங்கோவன், ரங்கன் என்னட்டச் சொல்லாவிட்டால் என்ன. ரங்கன்ரை ஆக்களெண்டால் நான் தராமல் விட்டு விடுவனே? அவன் ஒரு தங்கமான பிள்ளை. சொன்னால் சொல்லுத்தான்! உங்கை வேலை செய்யிறவை அந்தப் பெடியன்ரை பிறங்

கால் மயிரிலை தூங்கவேணும். ஒருத்தருக்கும் உதவான். கெட்டபயல்கள்.” சுந்தரம் தனது மனதிலெழுந்த கோப அலைகளை மெல்ல மெல்ல எறிந்து கொண்டிருந்தான்.

“தம்பி இவைக்கு என்னவேணுமெண்டு கேட்டுக் குடுங்கோ. இவை ரங்கன்ரை ஆக்கள். நல்லாய்க் கவனியுங்கோ”

“மெய்யே தம்பி. உந்த ஜெனரேட்டர் ஏனாம் இவ்வளவு நாளும் திருத்தாமல் இருந்தது?”

“அதைய்யா பழைய மிசின். அதின்ர பாட்சுகள் இஞ்ச எடுக்கேலாதெண்டாப்போல அப்பிடியே விட்டிட்டினம். இப்ப ரங்கண்ணை கொழும்புக்குப்போய் அதையெல்லாம் தேடி ஒருமாதிரி எடுத்துப்போட்டார். அதுதான் இப்ப திருத்த வேலைக்கெண்டு வந்தனாங்கள். எப்பிடியும் ரண்டு மூண்டு நாள் செல்லும்.” “அப்பிடியே சங்கதி” என்று சொல்லிவிட்டு சுந்தரம் வாசலைப் பார்த்தான். சுவரோரமாக வந்த மைனா பறந்து போய் புகைபோக்கியினுள் நுழைந்துகொண்டது. சுந்தரத்தின் உடம்பு மெல்ல நடுங்குவது போலிருந்தது. திரும்பி வந்த மைனாவுடன் இரண்டு குஞ்சுகள் வெளியேறின. தாயின் அருகில் இருந்து கொண்டு இந்தப் புதிய உலகை புதினமாகப்பார்த்துக் கொண்டிருந்தன. இவ்வளவு நாளும் அது தனது முயற்சியின் முடிவில் பெற்றெடுத்த வாரிசுகள் அவை. இந்தப் புதிய உலகில் எத்தனை விடயங்களைப் பார்க்கப்போகின்றன. அவற்றுள் எவ்வளவு இன்பமானவை எவ்வளவு துன்பமானவை என்பதை அவை அறிந்துகொள்ளப்போகின்றன.

தாயின் அரவணைப்பில் அகப்பட்ட இந்தக்குஞ்சு களைப் பார்க்கப் பார்க்க சுந்தரம் தன்னை மறந்தே போய் விட்டான். தாய் மைனாக்குஞ்சுகளைத் தனது இறக்கைக ளுக்குள் தள்ளித்தள்ளி தனது உடல் சூட்டை பரிமாறிக் கொண்டிருந்தது. எதிர்காலத்தில் தனக்கு இந்தக்குஞ்சுகள்

என்ன செய்யப்போகின்றன என்பதை எதிர்பாராத அரவணைப்பு அது. மனித வர்க்கத்தில் அப்படி இல்லையே! பிள்ளைகள் எங்களுக்கு உதவுவார்களா? இல்லையெனில் உதவாமலே போய்விடுவார்களா என்றெல்லாம் கற்பனை செய்து கனவுகண்டு கலங்குகின்ற பிறவியல்லவா இந்த மனிதப்பிறவி. ஆறறிவு படைத்த மனிதவர்க்கத்திற்குள்ளேகூட தாயின் பாசத்தை ஆராய்ந்து பார்த்தே அறியக்கூடியதாக இருக்கின்றதென்பதை எண்ணிப்பார்த்து தனக்குள் நகைத்துக்கொண்டான் சுந்தரம்.

ஒருதாய்க்கும் பிள்ளைக்கும் இடையில் ஏற்படக் கூடிய கருத்து வேறுபாடுகள், பிரச்சினைகள், பிணக்குகள், அடாவடித்தனங்கள், அதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் எல்லாமே இந்த மனிதவர்க்கத்திற்கு இறைவன் அருளிய வரமாகிவிட்டது. இதில் மறுப்பதற்கு எதுவுமேயில்லை. முதியோர் இல்லங்கள், வயோதிபர் சாலைகள் என்று உலகம் நிறைத்து வைத்துக்கொண்ட இடங்களிலெல்லாம் பாசத்தை வளர்த்தவர்கள், பாசத்தினால் சந்தோஷித்தவர்கள் தானே அதிக இடம் பிடித்திருக்கின்றார்கள்.

மைனாவையும் குஞ்சுகளையும் பார்க்கப்பார்க்க துன்பம் நிறைந்த மனிதவாழ்வே சுந்தரத்தை நகரவிடாமல் இறுக்கிப்பிடித்துக்கொண்டது.

“ஐயா இடியப்பம் இருக்கா?” ஒரு அம்மா கேள்வி எழுப்பியதும் சுந்தரம் சுய நிலைமைக்குத் திரும்பினான்.

“அம்மா ஒரு அஞ்சோ ஆறு இடியப்பம் தான் .இருக்குது. காணுமெண்டால் சொல்லுங்கோ தாறன். இல்லையெண்டால் மூண்டுமணிக்குத்தான் இடியப்பம் வரும். என்னசெய்ய?”

“காணாதையா. என்ர மகள் பிள்ளையை வாட்டில வைச்சுக்கொண்டு நிக்கிறா. இரண்டு பேருக்கும் என்னத்தைக் காணும். பாப்பம் வேறைகடையில கிடக்குதோண்டு

பாத்துப்போட்டு வாறன். மூண்டு மணிக்குவருந்தானே..."

"ஓமம்மா பாத்துக்கொண்டு வாங்கோ" சுந்தரம் சொல்லி முடித்துவிட்டு பக்கத்தில் இருந்த பேப்பர் துண்டொன்றை எடுத்தான். எடுத்து வாசித்துப் பார்த்தான். அது அவனால் எழுதப்பட்டது தான். ஓய்வு கிடைக்கும்போது எதையாவது எழுதுவது அவனுக்கு விருப்பமானது. இரண்டு மூன்று நாட்களுக்கு முன் தினசரிப்பத்திரிகையொன்றைப் பார்த்திருந்தான். அதில் இருந்த கட்டுரை அவனுக்குப் பிடித்திருந்தது. ஆசிரியர்களையும் மாணவர்களையும் தொடர்புபடுத்தி எழுதப்பட்ட கட்டுரை அது. ஆகையால் அதுபற்றிய விமர்சனம் ஒன்றை எழுத விரும்பியிருந்தான்.

அதை கையில் எடுத்து வாசிக்க முயன்றபோது "ஐயா உழுந்து வடையிருக்குதோ?" சுந்தரம் நிமிர்ந்து பார்த்தான். வழமையாக அவருடன் கதையளக்கும் இரத்தினர்தான். வடையைக் கேட்டுவிட்டு சுந்தரத்தின் கையில் இருந்த பேப்பர் துண்டின் மீது கண்களை மேய விட்டார்.

"என்ன கதையெழுதிறியளோ? ஐயாவின்ர எழுத் தெண்டா எழுத்துத்தான். முத்துப்போல கிடக்குது. தலை யெழுத்து என்னவோ தெரியயில்ல. ஆனால் கையெழுத்து அந்தமாதிரி."

இரத்தினத்தார் சொல்லிவிட்டு கடையில் இருந்தவர் களை ஒவ்வொருத்தராகப் பார்த்துக் கொண்டுவந்தார். பப்பாசியிலை ஏறுவது போலிருந்தது சுந்தரத்திற்கு.

"மெய்யே தம்பி! என்ன உதிலை எழுதிறியள்?"

"பேப்பரிலை ஒரு கட்டுரை பாத்தனான். நல்லமாதிரி எழுதியிருக்கு. அதுக்குத்தான் ஒரு நன்றிக்கடிதம் எழுதப் போறன்."

"அதுசரி அப்பிடி நன்றிக்கடிதம் எழுதிற அளவுக்கு என்ன அந்தக்கட்டுரையில கிடந்தது தம்பி" சுந்தரத்தின்

வாயால் எதையாவது அறிந்துகொண்டு போகலாமென்ற நோக்கத்தோடு இரத்தினத்தார் மெல்லக் கிண்டினார்.

எனக்குச் சொல்லவும் பயமாக்கிடக்குது. இப்ப வாத்திமார் எல்லாம் பிள்ளையளை முன்னேற்ற வேணு மெண்டே படிப்பிக்கினம்? ஏதோ கடமைக்குச் சொல்லுறதச் சொல்லிப்போட்டுப்போவம் எண்டதுதானே அவையின்ர நோக்கம். அப்பிடிச்செய்யலாமோ? அப்படிச்செய்தால் எங்கடை நாட்டிலை எப்பிடி அறிவாளியள் வரமுடியும்? அறிஞர்கள் வரமுடியும்? அவையளை நல்ல அறிவுள்ள, மனிதநேயமுள்ள மனிசராக உருவாக்கவேணுமெண்டால் அதுக்கு முதலிலை பிள்ளையின்ரை மனநிலையை ஒரு ஆசிரியர் புரிஞ்சுகொள்ள வேணும். வீட்டில இருந்து சாப்பிடாமல் பசியோடைவந்த ஒருபிள்ளைக்கு, பூமி தட்டையானதில்லை உறுண்டையானது எண்டு சொன்னா, காலைச்சாப்பாடு சாப்பிடாமல் வந்த அந்தப்பிள்ளை அதைப்பற்றிச் சிந்திக்குமோ? பசியினால் சாப்பாட்டைப்பற்றி சிந்திக்குமேதவிர பூமியைப் பற்றிச் சிந்திக்காது. பதிலாக அந்தப்பிள்ளைக்குப் பூமி தோசை போல தெரியும், இட்லி போலத் தெரியும். ஏன் மோதகம் போலகூடத் தெரியலாம்.

இதை ஒரு ஆசிரியர் விளங்கிக் கொள்ளவேணும் எண்டுதான் அந்தக்கட்டுரையிலை கிடக்கு. எனக்கும் அந்தக் கருத்து நல்லாய்ப்பிடிச்சிருக்கு. அதாலைதான் அந்தக் கட்டுரை எழுதினவருக்கு ஒருநன்றியைத் தெரிவிச்சு இதை எழுதுகிறன். நான் எழுத நினைச்சது சரியோ பிழையோ? நீங்கள் சொல்லுங்கோவன்." என்று சுந்தரம் நீண்ட பிரசங்கம் ஒன்றை முடித்தான். உப்பிடி எத்தினை பேர்தம்பி. நன்றிக் கடிதம் எழுதுவினம்? உதுக்கும் ஒரு அறிவு வேணுமெல்லே தம்பி. எல்லாருக்கும் ஏலாது. சரி நீங்கள் வடையைத் தாருங்கோ" என்று இரத்தினத்தார் அவசரப்படுத்தினார்.

வடையைக் கடதாசியில் மடித்துக்கொண்டிருந்த

சுந்தரத்துக்கு கடந்தகால நினைவுகள் மனதில் நிழல் விழுத்திச்சென்றன. "ஐயா எங்கள் நாலுபேருக்கும் நல்ல ஸ்பெசல் ரீயாப்போட்டுத்தாங்கோ. எங்கட வேலை முடிஞ்சுது. நாங்கள் கிளம்பப்போறம்." இது ரங்கனின் ஆட்களுடைய பிரியாவிடையாக இருந்தது.

"அண்ணையவைக்கு நல்லாச் சாயம் கூட்டி நல்ல பெசல் ரீயாப்போட்டுக்குடுங்கோ. வடையிலும் கடியுங்கோ தம்பி. நல்லாயிருக்கும் இப்பத்தான் போட்டது."

"சரி பின்னைத் தாருங்கோவன். ஐயாவின்ர விருப்பத் தைக்கெடுக்கப்படாது" இது ஒருவனின் விடுகை.

"ஐயாவின்ரவாய் பொன் வாய். வடையெண்டால் வடைதான். "அந்தமாதிரி" இது இன்னொருவனின் சான்றிதழ்.

சாப்பிட்டவர்கள் போய்விட்டார்கள்.

சுந்தரத்தின் மனம் அவனை அறியாமல் இளைத் துப்போனது. இடம் பெயர்ந்திருந்தபோது பல இன்னல்களை நேரில் கண்டு பதற்றம் அடைந்தவன் அவன். பிள்ளைக்குப் பசியென்று பாண் வாங்கப்போனவன் பாதிவழியில் யமலோகம் போன பரிதாபம் நிஜமானது...

அப்பாவும் அம்மாவும் பங்கருக்குள் இருந்து கொண்டு பள்ளியில் இருந்து வந்த பிள்ளையை "கெதியா ஓடியாம்மா... ஓடியாம்மா..." என்று கூறிமுடித்த மறுநொடி அந்தப்பிள்ளை கைவேறு கால்வேறு என கண்முன்னே கிடந்தது உண்மையானது...

மாட்டுக்குத் தண்ணிவைத்துக்கொண்டிருந்தவன் மாமரத்தில் தலைகீழாகத்தொங்கியது கூட உண்மையானது...

இப்படி எத்தனை எத்தனையோ சம்பவங்கள் நம்ப முடியாதவைகளாகவே நடந்து முடிந்து போனது. இவைக்கு மத்தியில் இந்த மைனாவின் வாழ்வில் நிகழப்போகும் சம்பவம் மட்டும் பெரியதொரு மனக் கிலேசத்தை ஏற்படுத்த நியாயமில்லைத்தான். இருந்தாலும் அதன் வாழ்வில் நடப்ப

வைகள் சுந்தரத்தின் இளகியமனத்தை இறுக்கிப்பிடித் திருந்தது என்பது உண்மையானது.

இன்னும் சிலநிமிடத்தில் மின்பிறப்பாக்கி இயங்கப் போகின்றது என்ற செய்தி, சுந்தரத்தின் இதயத்தை நிறுத்தி விடும் போலிருந்தது. சொல்லிவைத்தது போல சுந்தரத்தின் கண்கள் புகைபோக்கியையும் அதோடு சேர்த்து மைனா வையும் குறிவைத்துக் கொண்டிருந்தது. நெஞ்சு பழைய எண்ணங்களோடு குழைந்து போயிருந்தது.

எங்கோ பறந்து போன மைனா மீண்டும் பறந்துவந்து புகைபோக்கியருகே அமர்ந்து கொண்டது.
கொண்டு வந்த இரையை கொடுக்க ஆவலாக இருந்தது போல... குஞ்சுகளைக்காணவில்லை.

“டுக்கு டுக்கு டுக்கு....” ஆர்முடுகலோடு சத்தம் தொடர்ந்தது.

தான் இதற்குச்சாட்சியாக இருக்கமுடியாது என்பது போல கண்களை மூடிக்கொண்டான் சுந்தரம்.

(2015 தேசிய கலை, இலக்கியப் போட்டியில் பிரதேச மட்டத்தில் முதலாமிடத்தையும் மாவட்ட மட்டத்தில் இரண்டாமிடத்தையும் பெற்றது)



'மாவன்னா' என்று அறியப்பட்டுள்ள திரு.சி.மார்க்கண்டு ஐயா அவர்கள் ஒரு மனித நேயச் சிந்தனை கொண்ட படைப்பாளி. சிறுமை கண்டு பொங்கும், எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடிய மென்மையான இதயம் அவருக்கானது.
இந்த மென்மையான ஆத்மபலமே அவரை ஒரு படைப்பாளியாக்கி மானுடம் பேச வைத்திருக்கிறது.
எம் இனம் எதிர்கொண்ட அத்தனை மானுட அவலங்களையும் எதிர்கொண்டு எல்லையற்ற அனுபவ பட்டறிவு தெளிவினைக் கொண்ட இவரது படைப்புலகம் எந்த விதமான பாசாங்குகளுமற்ற யதார்த்த சிந்தனையின் வெளிப்பாடாக உள்ளமையானது அவற்றிற்கொரு தனித்துவ அடையாளத்தை வழங்குகின்றது.
ஒரு படைப்பாளியின் பேனா உண்மையின் ஊற்றாக இருந்தால் மட்டுமே அவனால் படைக்கப்படும் இலக்கியம் மேன்மை மிகுந்ததாக அமையும்.
மாவன்னாவின் பேனா அத்தகைய தன்மை கொண்டதாக இருக்கின்றதென்பதற்கு இந்நூலில் உள்ள எழுத்துக்கள் சான்று.
'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்' என்பார் மகாகவி பாரதி.
மாவன்னாவின் எழுத்திலும் அதைக்காண முடியும்.
இலக்கிய விமர்சகர்களெனும் வித்துவச் செருக்குடையோரின் தர அளவுகோல்களை புறந்தள்ளி மானுடம் மாவன்னாவின் படைப்புக்களை அங்கீகரிக்கும் காலம் அதைப்பதிவு செய்யும்.

அன்புடனும்
வாழ்த்துடனும்
ராதேயன்

ISBN 978-955-43797-0-1
9 789554 379701